# The Journal of The Tanjore Maharaja Serfoji's SARASVATI MAHAL LIBRARY

EDITED BY

**A. PANCHANATHAN,** M.A., M.L.I.S.,
Administrative Officer i/c
SARASVATI MAHAL LIBRARY,
THANJAVUR.

Vol. XL Nos. 3 & 4

PUBLISHED ON BEHALF OF

**THE SARASVATI MAHAL LIBRARY,**
**THANJAVUR.**

ANNUAL SUBSCRIPTION Rs. 50/-

A. D. 1992.

# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை, பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, "நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்,
29—12—92.

தி. சண்முக ராஜேஸ்வரன், இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சியர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

# The Journal of
# The Tanjore Maharaja Serfoji's
# SARASVATI MAHAL LIBRARY


EDITED BY

**A. PANCHANATHAN,** M.A., M.L.I.S.,
Administrative Officer i/c
SARASVATI MAHAL LIBRARY,
THANJAVUR.



PUBLISHED ON BEHALF OF

**THE SARASVATI MAHAL LIBRARY,**
**THANJAVUR.**

1992] [Price Rs. 25—00

## AN APPEAL

Manuscripts on Palm Leaf or Paper of the ancient works of the wise men of the past, are the great treasures, solely inherited by the Nation and it is the moral obligation of persons who possess them to preserve them safely for the future generations of mankind.

Probably you have some of these in your possession or you know friends or neighbours who possess them. You can make a great contribution to the cause of the preservation not only of our National Culture but also to the Culture of Humanity as a whole by arranging to present such manuscripts to the famous T. M. S. S. M. Library, Thanjavur.

The manuscripts so presented will be accepted and acknowledged with pleasure and gratitude by the authorities of the Library, preserved with meticulous care and made available to successive generations of readers and scholars for study and research. The hitherto unpublished works found among them, will be printed and published in due course, as facilities occur, with the expression of the Library's gratitude for your gift.

The great Scholar-King of Tanjore, Rajah Serfoji, has attained immortal fame by dedicating enormous time and wealth to the expansion and firm establishment of this world-famous 'Sarasvati Mahal Library.' It is open to you to share the honour of Serfoji, in your own measure by contributing your manuscripts to the great institution built by him.

This great Honour is beckoning to you to accept it. Will you hasten to take it up? The Library waits for your answer.

**DIRECTOR,**

Sarasvati Mahal Library, Thanjavur.

# பொருளடக்கம்


பக்கம்

✳ முகவுரை — iii, iv

1. பருவ இதழ்ப் படைப்புகள் — சுருக்க அறிமுகம் — v — viii
—அ. பஞ்சநாதன், எம். ஏ., எம். எல். ஐ. எஸ்.,
பதிப்பு மேலாளர் மற்றும் நூலகர்,
நிருவாக அலுவலர் (பொறுப்பு)

2. தஞ்சை சரசுவதி மகாலின் தமிழ்ப்பணி — 1 — 12
—எம். சீரானன், பி. ஏ., எம். எல். ஐ. எஸ்.,
நூலகர் நிலை II.

3. 'மரியாதைராமன் கதைகள்'
நூற்பதிப்புகள் குறித்த சிந்தனைகள் — 13 — 28
—ய. மணிகண்டன், எம். ஏ., எம். ஃபில்.,
தமிழ்ப் பண்டிதர்.

4. மணித்வீபம் — 29 — 34
—தேதியூர் எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்,
மேனிலை சமஸ்கிருதப் பண்டிதர்.

5. ஸரஸ்வதி மகால் நூலகத்தின்
ஸம்ஸ்க்ருதச் சுவடித் தொகுதிகளின் வரலாறு — 35 — 44
—வேதாந்த சிரோமணி மற்றும் தமிழ் வித்துவான்
என். ஸ்ரீனிவாஸன்,
சமஸ்கிருதப் பண்டிதர்.

6. மேகமாலா மஞ்சரி — மழை நூல்
ஓர் அறிமுகம் — 45 — 48
—சாகித்ய சிரோமணி
எஸ். இராஜலெக்ஷ்மி
சமஸ்கிருதப் பண்டிதர்.

7. சுவடிகளின் வரலாறும்
அதனமைப்பின் பயன்களும் 49 — 56
— ந்யாய சிரோமணி
ஆ. வீரராகவன்,
மேனிலை சமஸ்கிருதப் பண்டிதர்.

8. पञ्चमूर्त्यर्चना विधि: 57 — 68
(பஞ்சமூர்த்யர்ச்சனா விதி)
—ந்யாய சிரோமணி
எஸ். சுதர்சனன், எம். ஏ.,
சமஸ்கிருதப் பண்டிதர்.

9. மாமன்னர் சரபோஜியின் 69 — 76
மனதில் நிறைந்த கங்கை
—திருமதி, கே. இராமதிலகம், பி. ஏ., எம். எல். ஐ. எஸ்.,
நூலகர் நிலை II

10. திருநாவுக்கரசு சுவாமிகள்
சரித்திரச் சுருக்க அகவல் 77 — 80
—திருமதி ச. திலகம், பி. லிட்.,
தமிழ்ப் பண்டிதர்.

11. An introduction to MODI DOCUMENTS 81 — 84
—R. VIVEKANANDAGOPAL,
M. A., M. Phil., Dip. in Journalism
Marathi Sahitya Visharad.
Modi Expert.

12. சிந்தட கவியின்
தீபாம்பா — ஷஹஜி குண வர்ணனம் 85 — 98
—டி. ஆர். பீமராவ்,
முன்னாள் மராத்திப் பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம்.

The Journal of
The Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library

Vol. XL A. D. 1992 Saka 1914 Nos. 3 & 4

# முகவுரை

சரசுவதி மகால் நூலகத்தின் ஆராய்ச்சிப் பருவ இதழ்த் தொகுதி 40 பகுதி 3 மற்றும் 4-ஐத் தற்பொழுது ஆய்வாளர்கள் மற்றும் வாசகர்கள் முன்வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வாய்விதழ் சிறுசுவடிப் பதிப்புகளையும், சுவடியியல் — பதிப்பியல் சார்ந்த கட்டுரைகளையும் தாங்கிவருவது வழக்கமாகும். இப்படைப்புகள் தமிழ், சமஸ்கிருதம், மராத்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அமைந்திருக்கின்ற பாங்கு இப்பருவ இதழின் குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும்.

இந்தப் பருவ இதழில் மொத்தம் பதினொரு படைப்புகள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் மூன்று படைப்புகள் சிறுசுவடிப் பதிப்புகளாகும். அவை 'பஞ்ச மூர்த்யர்ச்சனா விதி', 'திருநாவுக்கரசு சுவாமிகள் சரித்திரச் சுருக்க அகவல்', 'சிந்தட கவியின் தீபாம்பா — ஷஹஜி குணவர்ணனை' ஆகியனவாகும். இவற்றில் தமிழ் தவிர்ந்த பிறமொழிச் சிறுசுவடிப்பதிப்புகள் தக்க தமிழ் முன்னுரை— தமிழாக்கப் பகுதிகளுடன் அனைவர்க்கும் பெரும்பயன் நல்கும் வண்ணம் அமைந்துள்ளன.

பிற படைப்புகளான 'தஞ்சை சரசுவதி மகாலின் தமிழ்ப்பணி' 'மரியாதைராமன் கதைகள்—நூற்பதிப்புகள் குறித்த சிந்தனைகள்', 'மணித்வீபம்', 'சரசுவதி மகால் நூலகத்தின் சமஸ்கிருதச் சுவடித் தொகுதிகளின் வரலாறு', 'மேகமாலா மஞ்சரி — மழை நூல் ஓர்

அறிமுகம்', 'சுவடிகளின் வரலாறும் அதனமைப்பின் பயன்களும்', 'மாமன்னர் சரபோஜியின் மனதில் நிறைந்த கங்கை', 'An Introduction to Modi Documents' ஆகிய கட்டுரைகள் சுவடியியல் மற்றும் பதிப்பியல்துறை சார்ந்தனவாகத் துலங்கிப் பெரும்பயன் வழங்குகின்றன.

இந்த இதழினுக்குப் படைப்புகள் வழங்கியுள்ள சரசுவதி மகால் பண்டிதர்கள், நூலகர்களுக்கும்,

சிறுசுவடிப் பதிப்புகளையும் கட்டுரைகளையும் வகைதொகை செய்து பதிப்பித்தும், இவ்விதழில் இடம்பெற்றுள்ள படைப்புகளைச் சுருக்கமாக அறிமுகம் செய்தும் இப்பருவ இதழினைச் சிறப்பான முறையில் உருவாக்கித் தந்துள்ள இப்பருவ இதழாசிரியரும், சரசுவதி மகால் நூலக நூலகர் மற்றும் பதிப்பு மேலாளருமான நிருவாக அலுவலர் (பொறுப்பு) திரு. அ. பஞ்சநாதன் அவர்களுக்கும் என் மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

இவ்விதழ்ப் பதிப்புப்பணிகளுக்குத் துணைநின்ற தமிழ்ப் பண்டிதர் திரு. ய. மணிகண்டன் அவர்களுக்கும், இவ்விதழினை நன்முறையில் அச்சாக்கித் தந்துள்ள சரசுவதி மகால் நூலக அச்சகப் பணியாளர்களுக்கும் என் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆய்வாளர்களும் அறிஞர்களும் இவ்விதழினை வழக்கம் போலப் படித்துப் பயன்பெறுவார்கள் என்பது திண்ணம்.

**தி. சண்முக ராஜேஸ்வரன்**, இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர் (பொறுப்பு)

தஞ்சாவூர்.
28—12—92

***

# பருவ இதழ்ப் படைப்புகள் - சுருக்க அறிமுகம்

அ. பஞ்சநாதன், எம். ஏ., எம். எல். ஐ. எஸ்.,
நிருவாக அலுவலர் (பொறுப்பு)

## தஞ்சை சரசுவதி மகாலின் தமிழ்ப்பணி

தொன்மைச் சிறப்பும் பயன்பாட்டுப் பொலிவும் கொண்டு துலங்கும் சரசுவதி மகால் நூலகம் தமிழ் மொழிக்கு ஆற்றிவருகின்ற பணியினை வரலாற்று நோக்கில் மதிப்பிட்டு விரிவாக ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

தமிழ்ச் சுவடிகளைச் சேகரித்தல், பாதுகாத்தல், படியெடுத்துப் பயன் படுத்துதல், மருத்துவ நூல்களைப் பாடல்களாகப் புனையச்செய்து வாங்கிப் பாதுகாத்தமை, சுவடிகளுக்குச் சுவடி விளக்க அட்டவணை தயாரிக்கப்படல், சுவடிகளிலிருந்து தக்க நூல்களைப் பதிப்பித்து வெளியிடுதல், நூலகப் பருவ இதழில் தமிழ்க் கட்டுரைகள், சிறு சுவடிப் பதிப்புகள் இடம்பெறல், நூலகப் புத்தகப் பிரிவில் இடம்பெற்றுள்ள தமிழ் அச்சு நூல்கள் ஆகிய பல்வேறு, தமிழ் மொழியின் வளர்ச்சிக்குத் துணைநிற்கும் சரசுவதி மகால் நூலகத்தின் முயற்சிகளை இக்கட்டுரை விரிவாக எடுத்துரைக்கின்றது.

## "மரியாதைராமன் கதைகள்" நூற்பதிப்புகள் குறித்த சிந்தனைகள்

நாட்டுப்புறக் கதையிலக்கியங்களில் ஒன்றான "மரியாதைராமன் கதைகள்" நூலைப் பதிப்பித்துள்ள பதிப்பாசிரியர், நாட்டுப்புறவியல் மற்றும் பதிப்பியல்துறை சார்ந்த கண்ணோட்டத்தில் தமிழில் வெளிவந்துள்ள "மரியாதைராமன் கதை"களைக் கூறும் நூல்களைப்பற்றி எழுதியுள்ள ஆராய்ச்சிக் கட்டுரை இதுவாகும்.

தமிழில் வெளிவந்துள்ள, மரியாதை ராமன் கதைகளைக் கூறும் நூல்களின் பதிப்பு விவரங்களைத் தந்தும், நமது பதிப்பு நூலுக்கும் பிற நூல்களுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் குறிப்பிட்டும், நமது பதிப்பு நூலில் இடம்பெற்றுள்ள பழமொழிகளை அகரவரிசையில் அடைவு செய்தளித்தும், பதிப்புகளுக்கிடையே காணப்படும் குறிப்பிடத்தக்க வேறு பாட்டுப் பகுதிகளையும் காலமாற்றத்தால் கதைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் எடுத்துக்காட்டியும், பஞ்சதந்திரக்கதை, விக்கிரமாதித்தன் கதை ஆகியவற்றில் உள்ள கதைகள் சில மரியாதைராமன் கதைகளில் சிறுமாறுதல்களுடன் இடம்பெற்றுள்ளமையை எடுத்துரைத்தும் செல்கின்ற இக்கட்டுரை நாட்டுப்புறவியல் மற்றும் பதிப்பியல்துறைசார் ஆய்வாளர்க்கும் ஆர்வலர்க்கும் நல்விருந்தாகும்,

## மணித்வீபம்

புராண நூல்களில் பிரம்மன், திருமால் முதலான காரிய பிரம்மங்கள் சத்தியலோகம், வைகுண்டம், கைலாயம் முதலான இடங்களை உறைவிடமாகக் கொண்டிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. அதுபோலக் காரண பிரம்மமான மூலசக்தியும் தமக்கெனத் தனியிடம் ஒன்றை உறைவிடமாகக் கொண்டிருப்பதாக தேவீ தந்த்ர நூல்கள் பலவற்றிலும் கூறப்பட்டுள்ளது. மூலசக்தியின் உறைவிடமே ''மணித்வீபம்'' எனப்படுவதாகும்.

இந்த நூலகத்தில் மட்டுமே உள்ள **'சிவரஹஸ்யம்'** எனும் மாபெரும் நூலில் 2வது அம்சத்தில் கூறப்பட்டுள்ளதையனுசரித்து இக்கட்டுரை எழுதப் பட்டுள்ளது.

## ஸரஸ்வதி மஹால் நூலகத்தின் ஸம்ஸ்க்ருதச் சுவடித் தொகுதிகளின் வரலாறு

சரசுவதி மகால் சமஸ்கிருதத் துறையில், மன்னர் காலத்திலும் மன்னர் காலத்திற்குப் பின்னும் சேகரிக்கப்பெற்ற ''சுவடித் தொகுப்புகள்'' பற்பல உள்ளன. அவற்றில் சில தொகுப்புகளான ஜே எல். தொகுதி, எஸ். கே தொகுதி, ஜி. கே. டி. தொகுதி, சமர்த்த ராமதாசரின் சம்பிரதாய மடத்தினர் அளித்த தொகுதிகள் போன்றவற்றின் வரலாற்றை, வரலாற்றுணர்வுடனும் சுவையுணர்வுடனும் விளக்கிச் செல்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது. இச்சுவடிகளை ஆராய்ச்சி செய்வோருக்கும் வெளியிட விரும்புவோருக்கும் இச்சுவடிகளின் வரலாறு பெரிதும் பயன்படும்.

## மேகமாலா மஞ்சரி — மழைநூல் ஓர் அறிமுகம்

"கர்க்க சம்ஹிதை — மேகமாலா மஞ்சரி" என்னும் தலைப்புடைய கிரந்த எழுத்தில் எழுதப்பட்ட சுவடியானது (B.No. *11053*, D.No. *11359*) வடமொழிப் பிரிவில் இடம்பெற்றுள்ளது. இச்சுவடி நூல், மேகங்கள் எவ்வாறு தோன்றுகின்றன, மழையைப் பொழிகின்றன என்பனவற்றை விரிவாக எடுத்துக்கூறுகின்றது. கர்க்க சம்ஹிதையில் ஒரு பிரிவான மேகமாலா மஞ்சரி எனும் இந்நூல் பார்வதி, பரமேச்வரனின் உரையாடல் அமைப்பில் மேகங்களின் உற்பத்தி முதலிய செய்திகளை எடுத்துரைக்கின்றது. இந்நூலைப் பற்றிய அறிமுகமாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

## சுவடிகளின் வரலாறும் அதனமைப்பின் பயன்களும்

இது, சுவடிகளாகப் பயன்படும் பனையோலைகள், அவற்றின் வகைகள் பற்றியும், எழுதுவதற்கு ஏற்ப அவற்றைப் பதப்படுத்தும் முறைகள் பற்றியும், எழுத்தாணிகள் மற்றும் எழுதும் முறைகள் பற்றியும், சுவடிகளின் அமைப்புகள் (அளவு முதலியன) மற்றும் அவற்றின் பயன்கள் பற்றியும் எடுத்துக் கூறுகின்ற சுவடியியல்துறை (Manuscriptology) சார்ந்த கட்டுரையாகும்.

## பஞ்ச மூர்த்யர்ச்சனா விதி

இச்சிறு சுவடிப்பதிப்பு வைகானச ஆகமத்தில் கூறப்பட்ட, ஐந்து மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்து பூஜிக்கும் முறையினைக் கூறுகிறது.

வைணவ ஆகமங்கள் இரண்டில் ஒன்று, இவ் வைகானச ஆகமமாகும். இதனை விகனச முனிவர் தோற்றுவித்தார். விகனசரால் உபதேசிக்கப் பெற்ற $1\frac{1}{2}$ கோடி கிரந்த மந்திரங்களை நான்கு லட்சமாகச் சுருக்கிக் கூறிய நான்கு சிஷ்யர்களில் மரீசி என்பவரும் ஒருவராவர். இவர் இயற்றிய எட்டு சம்ஹிதைகளில் ஒன்றான ஆனந்த சம்ஹிதையில் விமானார்ச்சன கல்பம் *44*வது படலத்தில் இந்தப் பஞ்ச மூர்த்யர்ச்சனா விதி (ஐந்து மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்து பூஜிக்கும் முறை) என்னும் பூஜைமுறை இடம்பெற்றுள்ளது. இந்த *44*ஆம் படலமானது நவ, ஷட், பஞ்ச (*9*, *6*, *5*) மூர்த்திகளைப் பிரதிஷ்டைசெய்து பூஜிக்கும் முறையினைக் கூறுவதாகும். இன்றைக்கு பஞ்சபேர விதானம் பெருமளவில் காணப் படுவதால் அப்பூஜை முறைமட்டும் இங்கு வடமொழி மூலத்துடனும் தமிழாக்கத்துடனும் பதிப்பிக்கப்படுகின்றது. இது வைகானச ஆகம முறைப்படி பூஜை செய்பவர்களுக்கு மிகவும் இன்றியமையாததாகும். இச் சிறு சுவடிப்பதிப்புக்கு அடிப்படையாக அமைந்த சுவடி நமது நூலக வடமொழித்துறையில் B. No. *3652/15304*ஆம் எண்ணில் பதிவாகியுள்ளது.

## மாமன்னர் சரபோஜியின் மனதில் நிறைந்த கங்கை

தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தின் அருங்காட்சியகக் கூடத்தில் வைக்கப்பட்டுள்ள ஓவியங்களுள் கங்கைக் கரையைப் பற்றிய வண்ணப்படம் ஒன்று உள்ளது. இந்த வண்ணப்படத்தின் சிறப்பையும், 1822-இல் மாமன்னர் சரபோஜியின் காசியாத்திரையின்போது கங்கைக் கரையின் அழகை வருணிக்கும் வகையில் வரையப்பட்ட வண்ண ஓவியங்களில் ஒன்றாகவும் இது இருக்கலாம் என்பதை மோடி ஆவணங்களின் துணைகொண்டும் இக் கட்டுரை எடுத்துரைக்கின்றது.

## திருநாவுக்கரசு சுவாமிகள் சரித்திரச் சுருக்க அகவல்

இது, இந்நூலகத் தமிழ்த்துறையில் இடம்பெற்றுள்ள சிறுசுவடி நூலாகும். இங்கு இது சிறு அறிமுக உரையுடன் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இச்சுவடிப் பதிப்புக்கு அடிப்படையாக அமைந்த சுவடியின் எண் : 1200, சைவ சமய வரலாற்றில் மூவர் முதலிகள் எனச் சிறப்பிக்கப்பெறும் தெய்வத் தமிழ்ச் சான்றோர்களில் ஒருவரான திருநாவுக்கரசரின் வாழ்க்கை வரலாற்றை அகவல் யாப்பில் எடுத்துக் கூறுவதாக இப்படைப்பு அமைந்துள்ளது.

## AN INTRODUCTION TO MODI DOCUMENTS

மோடி எழுத்தின் தோற்றம், உருவாக்கியோர், மோடி ஆவணங்களின் பயன்படுத்தப்படும் காலமுறைகள், சுருக்கக் குறியீடுகள், முத்திரைகள், பிறமொழிச் சொற்கள் ஆகியவற்றோடு மோடி ஆவணங்களின் வகைபாடும் இக்கட்டுரையில் இடம்பெற்றுள்ளன.

## சிந்தட கவியின் தீபாம்பா — ஷஹாஜி குணவர்ணனை

தஞ்சை மராட்டிய மன்னர் ஏகோஜியின் மூத்த மைந்தர் ஷஹாஜி மன்னரைப் புகழ்ந்து, மன்னர் காலத்தில் வாழ்ந்தவரும், மன்னருக்கு அபிமான நண்பருமான 'சிந்தட' என்னும் பெயருடைய மராட்டியப் புலவர் பல பாடல்களைப் பாடியிருக்கிறார். சிந்தடகவி, ஷஹாஜியை ஈன்ற தாயாரும் மன்னர் ஏகோஜியின் பட்டத்து ராணியுமான தீபாம்பா பாயி சாகேப் அவர்களைப் புகழ்ந்தும் பாடல்களைப் பாடியிருக்கிறார். புலவர் சிந்தடர் பாடிய பாடல்கள் 'தீபாம்பா ஷஹாஜி குணவர்ணனை' என்னும் தலைப்பில் தமிழ் முன்னுரைப் பகுதியுடன் மராட்டி மொழியில் இங்குப் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

# தஞ்சை சரசுவதி மகாலின் தமிழ்ப்பணி

எஸ். சீராளன், B. A., M. L. I. S.,
நூலகர்.

தஞ்சைத் தரணியை நினைத்தவுடன் யாவருக்கும் நினைவில் நிற்பது தஞ்சைப் பெரியகோவில். அடுத்து நீங்கா நினைவாக நிற்பது தஞ்சை அரண்மனை வளாகத்தில் அமைந்துள்ள கலைமகள் கூடம். பல்வேறு கலைகளைக் காலவெள்ளத்தால் அழியாமல் காத்து நம் நாட்டின் கலாசாரத்தை மக்களுக்கு என்றென்றும் உணர்த்திக்கொண்டிருப்பதோடு, அறிவுக்கருவூலமாக, தொட்டனைத்தூறும் மணற்கேணியாக விளங்குவதுதான் சரசுவதி மகால் நூலகம்.

இது ஒரு தொன்னூலகம். சரசுவதி பாண்டார் என்ற பழம் பெருமை மிக்க இந்நூலகத்தின் சிறப்பியல்புகள் பல. மொழி, இன வேறுபாடின்றி அனைத்துக் கலைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது இந்நூலகம். தஞ்சையை ஆட்சிசெய்த மாமன்னர்கள் தம் அரிய பணியெனக்கருதி, வாழ்நாட்களில் அரும்பாடுபட்டுச் சேகரித்து விட்டுச்சென்ற கலை இலக்கியங்களை இங்கு நாம் இன்றும் காணமுடிகிறது. இந்நூலகப் பெருமையினை ஆங்கில கலைக்களஞ்சியம் பிரிட்டானிகா ( Encyclopaedia Britannica ) 'தஞ்சை மன்னர்கள் 16-ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து தொகுத்துவைத்த ஒரு குறிப்பிடத்தக்க நூலகம்' என குறிப்பிட்டுள்ளது. மேலும் உலகிலுள்ள அனைத்து அறிஞர் பெருமக்களும் இதன் பெருமையை நன்கு அறிவர். டாக்டர் பூலர், டாக்டர் ஏ. சி. பர்னல் போன்ற மேனாட்டு அறிஞர்கள் இந்நூலகத்தின் அரிய தொகுப்புகள்பற்றி பாராட்டிக் கூறியுள்ளனர். இத்துணை வளம்மிக்க வடமொழி, மராத்தி, தெலுங்கு, தமிழ்ச்சுவடிகள் சுமார் 45,600 இந்நூலகத்தில் உள்ளன. இவற்றை ஓலைச் சுவடிகள், காகிதச் சுவடிகள் என இரு பிரிவாகக் கொள்ளலாம். நூலகத்தில் இரண்டாம் சரபோஜி காலத்தில் சேகரித்து வைக்கப்பட்ட நூல்கள் 4,500-ம் அதன்பின் சேர்க்கப்பட்ட 40,000 நூல்களும் உள்ளன.

தொன்றுதொட்டு நிலவிவரும் இந்நூலகம், சோழவளநாட்டின் தலைநகராம் தஞ்சையில் அமைந்து, தமிழ்மொழிக்கு ஆற்றிவரும் பணிபற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## சுவடிகள் சேகரிப்பு

நூலகத்தில் ஏற்கெனவே சுவடிகள் இருந்திருப்பினும் இரண்டாம் சரபோஜி மன்னர் காலத்தில் தமிழ்ச் சுவடிகளை விலைகொடுத்து வாங்கியும், புதிய ஏட்டுச் சுவடிகளைப் படியெடுத்தும், பழுதடைந்த சுவடிகளைப் புதுப்பித்தும், பல வல்லுநர்களை படியெடுக்க நியமித்தும் சரசுவதி மகாலை வளர்த்துள்ளார் என்பது கீழே காணும் குறிப்புக்களால் அறியமுடிகின்றது.

1. கி. பி. 1829-ல் ஆறுமுகம் பிள்ளையிடமிருந்து தமிழ்ப் புத்தகங்கள் ரூ. 20 அளித்து வாங்கப்பெற்றன. ( ச. மோ. த. 4 - பக்கம் 229 ).

2. தமிழ் ஓலைச்சுவடி கம்பராமாயணம் பெயர்த்தெழுதப்பட்டது. பக்கம் 1978; வரிகள் 14,200; பணத்திற்கு 150 வரிசை வீதம் கொடுக்கப்பட்டது.

3. ஸ்கந்தபுராணம், கூர்மபுராணம் 1829-ல் எழுதப்பெற்றன. ( மோடி தமிழாக்கம் 4-229 ).

4. வைத்திய நூல்கள் எழுத ஆயிரம் கிரந்தத்துக்கு 4 பணம் வீதம் அளிக்கப்பெற்றது.

5. தமிழ் எழுதுவதற்குத் திருவேங்கடம் பிள்ளைக்குக் கிரந்தம் 1,000-க்கு 10 சக்கரம் வீதம் அளிக்கப்பெற்றது.

6. திருவெண்காட்டுப் புலவர் ஒருவர் தமிழில் மருத்துவநூல் ஒன்றை பாடலாகப் புனைந்து எழுதினார். அந்நூல் 145 பாடல்களையுடையது. அது 4 சக்கரம் 3 பணம் கொடுத்து விலைக்கு வாங்கப்பட்டது.

மேலும் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர், திருவேங்கடம் பிள்ளை, வேலாயுத வாத்தியார், வெங்கடாசலம் பிள்ளை, சுப்பராயக் கவிராயர் ஆகியோர் தமிழ்ப் பாடல்கள் பாடினர் என்பதும் அறியமுடிகிறது. குறிப்பாக 1827-ல் சரசுவதி மகால் - தமிழ் எழுத்து - தமிழ் மொழியில் வைத்திய விஷயம் சாகித்யம் செய்து கொடுத்தற்காகத் திருவேங்கடம் ஏடுசள் சுமார் 145 சக் 3½" என்ற சரசுவதி மகால் மோடி தமிழாக்கக் குறிப்பாலும், திருவேங்கடம் பிள்ளை என்பார் கர்ப்பிணி சிகிச்சை பற்றியும், பிற மருத்துவச்

செய்திகள் பற்றியும் தமிழ்ப் பாடல்கள் எழுதினார்கள் என்று அறியப் பெறும்.[1]

சரசுவதி மகாலில் கி. பி. 1834-ல் புத்தக அட்டவணை தயார் செய்திருந் தனர் என்பதைக் கீழ்காணும் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

" சரசுவதி மகாலில் புத்தகங்களின் கணக்குக்காக கோராகடுதாசி 5 தஸ்தாவை யுத்தசாலையினின்று கொடுக்கிறது."

இவ்வட்டவணையில் தொல்காப்பிய வியாக்யானம், வீரசோழியம், கூளப்ப நாயக்கன் காதல், பாண்டிராஜா எழுதிய புகலூர் அந்தாதி, சடகோபுரத்தாழ்வார் செய்த சடகோபரந்தாதி முதலியன பட்டியிடப் பட்டன. மேலும் சகம் 1785 (கி. பி. 1863-ல்) பனையோலைச் சுவடிகளின் ஜாபிதா என்றொரு அட்டவணையும் எழுதப்பெற்றுள்ளது. அவற்றுள் சிலவற்றில் ஒவ்வொன்றிலும் பலபிரதிகள் இருந்தமைக் காணலாம்.

| | | |
|---|---|---|
| எடுத்துக்காட்டாக : | திருவள்ளுவர் திருக்குறள் | 10 பிரதிகள் |
| | தொல்காப்பியம் | 9 ,, |
| | நன்னூல் | 11 ,, |

இவ்வாறு மன்னர்தம் குடும்பத்துக்கு உரியதாய் இருந்த நூலகம் 5—10—1918-ல் அரசாணையால் விடுவிக்கப்பட்டு ஐவர் கொண்ட குழுவினரால் நிர்வகிக்கப்பெற்றது. இக்குழுவின் கௌரவ காரியதரிசிகளாக திருவாளர்கள் சாம்பமூர்த்தி ராவ், வழக்கறிஞர்கள் எஸ். கோபாலன், ஓ. ஏ. நாராயணசாமி ஐயர், தமிழ் மூதறிஞர் நீ. கந்தசாமிப்பிள்ளை, வித்துவான் அ. வடிவேலன் ஆகியோர் பணியாற்றி; தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குத் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்தனர்.

நூலகத்தின் தமிழ்ப் பிரிவிலுள்ள சுவடிகளை வைத்தியம், இலக்கியம் என இரு பிரிவுகளாகப் பகுத்துப் பதிவேட்டில் வரிசை எண், சுவடி எண், நூற் பெயர், ஏடுகளின் எண்ணிக்கை முதலியன இட்டுப் பதிவேட்டில் பதிவு செய்யப்படுகிறது.[2] இப்பிரிவில் 1866 இலக்கியச் சுவடிகளும், 1449 வைத்தியச் சுவடிகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

---

1. தஞ்சை மராட்டியர் கால அரசியலும், சமுதாயமும்; கே. எம். வேங்கடராமையா பக்கம் 290 — 291.

2. சரசுவதி மகால் தமிழ்ச் சுவடிகளின் பதிவேடுகள்.

இச்சுவடிகளைப் பாதுகாப்பு நோக்கம் கருதியும், பதிப்புப்பணிச் காகவும் வல்லவர்களைக்கொண்டு முதற்கட்டப்பணியாக படியெடுக்கும் பணியும் இன்றுவரை செய்யப்பட்டு வருகின்றது. இதுவரை சுமார் 1,500 சுவடிகள் படியெடுக்கப்பட்டு காப்பிடு நூல்கள் என்ற வரிசையில் தனி எண் இட்டு வைக்கப்பட்டுள்ளது.

## சுவடிகளின் விவரப்பட்டி தயார்செய்தல்

சரபோஜி மன்னர் காலத்தில் (கி. பி. 1801) நூலகத்தின் சுவடிகளுக்கு விவரப்பட்டியல் இல்லையாதலால் கங்காதர பட்லு என்கிற சதாசிவ பட்லு அவர்களை சரசுவதி மகால் நூலகத்தில் உள்ள ஓலைச்சுவடிகளுக்கு காட்லாக் தயார்செய்யுமாறு உத்தரவிட்டார். அதன்படி ஓலைச் சுவடிகளுக்கு ஓலையிலும், காகிதச் சுவடிகளுக்கு காகிதத்திலும் காட்லாக் தயரர்செய்யப்பட்டது. அடுத்து சிவாஜி மன்னர் காலத்தில் (கி. பி. 1832—1855) நூலகத்தில் அச்சு நூல்களும், சுவடிகளும் சேர்க்கப்பட்டன. இவற்றிற்கு காட்லாக் தயார் செய்யும் பொறுப்பு வரகப்பையர் என்ற அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் தேவநாகரி மற்றும் மோடி எழுத்துக்களில் கையால் தயாரிக்கப்பட்ட தாள்களில் தயாரித்தார். அதனை சிவாஜி காட்லாக் என்று அழைக்கப்படுகிறது. அப்போது தமிழ் இலக்கிய ஓலைச் சுவடிகளுக்கு ஓலையில் கேட்லாக்கும், 'தமிழ் ஏட்டுப் புத்தகத்தின் டயரி' என்று காகிதங்களிலும் எழுதப்பட்டன. 719 தமிழ் இலக்கியச் சுவடிகளை காவியம், புராணம், விரதம், தோத்திரம், நிகண்டு, வேதாந்தம், மந்திரம், நாடகம், லக்ஷணம், ஜோதிடம், நானாவிதம் என்ற பகுதிகளாகப் பிரித்து தலைப்பு, ஆசிரியர், துறை, வரிசை எண், ஏடுகளின் எண்ணிக்கை என்று வரிசைப்படுத்தி எழுதப் பட்டுள்ளன. இச்செய்தி தஞ்சை சரசுவதி மகாலின் தமிழ்ச் சுவடிகளின் காட்லாக் தொகுதியில் (1960) சரசுவதி மகால் லைபிரரிலுள்ள தமிழ்ச் சுவடிகளின் அட்டவணை என்ற பிரிவின்கீழ் 719 இலக்கியச் சுவடிகளையும், 119 வைத்தியச் சுவடிகளையும் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்காட்லாக் தொகுதியில் (பக். 216—254) 22 தமிழ் அச்சு நூல்கள்பற்றி தமிழ்ச் சுவடிகள் காட்லாக் தயார்செய்யும் முறையில் செய்யப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நூலகத்திலுள்ள தமிழ்ச் சுவடிகளுக்கு விவரப்பட்டி தயார்செய்யும் பணி தமிழ் மூதறிஞர் காலஞ்சென்ற பண்டித எல். உலகநாதப் பிள்ளை அவர்களால் தொடங்கப்பட்டு, 1925-ல் முதல் தொகுதி வெளிவந்தது. உலகநாதப் பிள்ளையவர்கள் திருவையாறு சமஸ்கிருத கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர். அவர் தமது முதற்றொகுதி காட்லாக் முகவுரையில்,

தம்மால் தயார்செய்யப்பட்ட இத்தமிழ்க் காட்லாக் ராவ்பகதூர் கே. எஸ். சீனிவாசம் பிள்ளையவர்களால் பார்வையிடப்பெற்றது எனக் குறிப்பிடுகிறார். பிள்ளையவர்கள் எழுதிய காட்லாக் 1964-ல் இரண்டாம் தொகுதியாகவும், 1960-ல் மூன்றாம் தொகுதியாகவும் வெளிவந்துள்ளன. இப்பணி தொடர்ந்து இதுவரை 14 தொகுதிகள் வெளிவந்துள்ளன. அவற்றுள் இலக்கியப் பிரிவில் 6 தொகுதிகளும், வைத்தியப் பிரிவில் 8 தொகுதிகளும் உள்ளன. நூலகத்திற்கு இன்றும் ஓலைச் சுவடிகளை தொண்டுள்ளம்கொண்ட பெருமக்கள் அன்பளிப்பாக வழங்கிவருவதால் காட்லாக் செய்யும் பணியும் தொடர்ந்து நடைபெற்றுவரும் பணிகளுள் ஒன்றாக உள்ளது.

சுவடிகளைப் பராமரிக்கும் பணியினை, இத்துறையில் தமிழ்ப்பண்டிதர்களாகப் பணியாற்றிய திருவாளர்கள் வித்துவான் வி. எஸ். பரமசிவம், எஸ். முத்துரத்தின முதலியார், பண்டித வித்துவான் இராம. கோவிந்தசாமிப் பிள்ளை, வித்துவான் வீ. சொக்கலிங்கம் ஆகியோர் செய்துவந்துள்ளனர். தற்காலம் இத்துறையில் புலவர் ச. திலகம், ஓய். மணிகண்டன், எம்.ஏ.,எம்.பில்., இருவரும் பணி செய்துவருகின்றனர்.

## நூலக வெளியீடுகள்

நம் நாடு சுதந்திரம் அடைந்தபின் 1948-ஆம் ஆண்டு சென்னை அரசாங்கம் இச்சுவடிகளைப் பாதுகாத்து வைத்தல்மட்டும் போதாது; அரிய நூல்களை அச்சிட்டு வெளியிடுதல் அவசியமெனக் கருதியது. சென்னை அரசாங்கக் கல்வித்துறை குறிப்பாணை எண். 34913/48-10 நாள் 4-4-1949ன் படி திருவாளர்கள் டி. எம். நாராயணசாமி பிள்ளை, டாக்டர் ரா. பி. சேதுப் பிள்ளை, சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார், கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி, எஸ். கோபாலன், டி. சந்திரசேகரன் முதலான 21 வல்லுநர்கள்கொண்ட குழுவை நியமனம்செய்தது. இக்குழு மொழிவாரியாக துணைக்குழு என செயல்பட்டு, தஞ்சை சரசுவதி மகாலின் தமிழ்ச் சுவடிகளிலிருந்து வெளியிட வேண்டிய தமிழ் நூற்களை அரசுக்குப் பரிந்துரை செய்தது. அரசாங்கமும் கீழே குறித்துள்ள 11 தமிழ் நூற்களை வெளியிட அனுமதித்தது. (அரசு ஆணை எண். மிஸ். 2745 கல்விநாள் 31—4—1949).[3] இவ்வாறு அனுமதித்த நூற்கள் 'அரசினர் கீற்றிசை வெளியீடு' என வெளிவரத் தொடங்கியது. இதன் பொதுப் பதிப்பாசிரியராக அந்நிலையக் க்யூரேட்டர் திரு. டி. சந்திரசேகரன் என்பவர் நியமிக்கப்பட்டார்.

---

3. இராசகோபால விலாசமு பக். 7—11.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்

தமிழ்ச்சுவடி (வெளியிடத் தேர்வுசெய்தவைகள்)

1. சரபேந்திர வைத்திய முறை (நீரிழிவு சிகிச்சை)
2. ,, (சிரோரோக சிகிச்சை)
3. கொங்கணர் சரக்குவைப்பு
4. திருச்சிற்றம்பலக் கோவையார் (பதவுரையுடன்)
5. சரபேந்திர வைத்தியமுறை (பாண்டு காமாலை சிகிச்சை)
6. தாளசமுத்திரம்
7. பரதம்
8. மூன்று தமிழ் நாடகங்கள் :
   i. பாண்டிகேளி விலாச நாடகம்
   ii. புரூரவ சக்ரவர்த்தி நாடகம்
   iii. மதனசுந்தரி விலாச நாடகம்.
9. மலையருவி (நாடோடிப் பாடல்கள்)
10. இராமையன் அம்மானை
11. சரபேந்திர வைத்திய முறைகள் (காச, சுவாச கிகிச்சை)

அதனைத் தொடர்ந்து தஞ்சை சரசுவதி மகால் நூலகம் தமிழ் மற்றும் இதர மொழி நூல்கள் வெளியிடும் பணியினைத் தொடர்ந்தது. 1946-ம் ஆண்டு சரசுவதி மகால் வெளியீடு எண். 1. முக்ராராக்ஷஸ நாடக கதா என்ற வடமொழி நூலை டாக்டர் வீ. ராகவன் பதிப்பித்து நூலக வாயிலாக வெளிவந்தது. குன்மரோக சிகிச்சை என்ற சரபேந்திர வைத்திய முறையைச் சார்ந்த வைத்திய நூல் (சரசுவதி மகால் வெளியீடு எண் 2) 1949-ல் வெளி வந்தது. இதுவரை 324 நூல்கள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள சுவடிகளி லிருந்து வெளியிடப்பட்டுள்ளன[1]. அவற்றுள் அதிக அளவில் வெளிவந்துள்ளது தமிழ் நூல்களே. அவற்றின் முழு விவரப்பட்டியல் கீழே துறை வாரியாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இப்பட்டியலில் குறித்துள்ள சிறுநூல்கள் பல

---

1. Our Publications / Oct. 1989 / T. M- S. S. M. Library Society, Thanjavur-9.

இந்நூலகப் பருவஇதழ் வாயிலாக வெளிவந்தவைகளாகும். மேலும் வடமொழி கிரந்த எழுத்தில் உள்ளவற்றிற்கு தமிழ் மொழிபெயர்ப்பும் செய்யப்பட்டுள்ளது. அவற்றையும் இங்கு பட்டியிட்டதோடு, ஒரே தலைப்பில் இரண்டு மூன்று தொகுதிகள் வெளிவரும்போது, நூலக வெளியீட்டு வரிசை எண் தனித்தனியாகக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே வெளியீடு பட்டியல் எண்ணுக்கும், நூற்களை வகைப்படுத்திக் காணும்போதும் சிறிது வேறுபாடு காணப்படுகிறது. எவ்வாறாயினும் அனைத்தும் தமிழ்மொழிக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் அணி எனத் திகழ்பவைகளாகும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | ஆகமம் & மந்திரம் | ... 3 | 6 | சோதிடம் | ... 4 |
| 2 | இலக்கணம் | ... 16 | 7 | தலபுராணம் | ... 5 |
| 3 | இலக்கியம் | ... 78 | 8 | மருத்துவம் | ... 42 |
| 4 | இசை & நாட்டியம் | ... 9 | 9 | வேதாந்தம் | ... 10 |
| 5 | சில்பம் | ... 9 | | | |
| | | | | ஆக கூடுதல் | ... 176 |

**1. ஆகமம் & மந்திரம்**

ஆகமதீட்சாவிதி
சதாசிவத்தியானம்
சிவபூஜா பத்ததி

**2. இலக்கணம்**

இலக்கணக்கொத்து
இலக்கணவிளக்கம்
-எழுத்ததிகாரம்
-சொல்லதிகாரம்
-பொருளதிகாரம்
-அகத்திணையியல் I
,, ,, II
,, -புறத்திணையியல்
,, -அணியியல்
,, -செய்யுளியல்
,, -பாட்டியல்
தொல்காப்பியம்
-எழுத்ததிகாரம்
தொல்காப்பியம்-சொல்லதிகாரம்
-நச்சினார்க்கினியம்
பாணினீயதாதுபாடம்
பிரயோக விவேகம்
யாஸ்க நிருக்தம் -பாகம் I
-பாகம் II

**3. இலக்கியம்**

அதிரியர் அம்மானை
அதிரூபவதி கல்யாணம்
அரவான் களப்பலி
அரிச்சந்திர நாடகம்
அருணகிரி அந்தாதி
அருணாசலேசர்மீது வண்ணமும்,
தாதுவருஷ கரிப்புக் கும்மியும்
ஆத்திச்சூடிப் புராணம்
இராமய்யன் அம்மானை
ஐந்து தமிழிசை
நாட்டிய நாடகங்கள்

கஞ்சனம்மானை
கமலாலய அம்மன் பிள்ளைத்தமிழ்
காஞ்சிமன்னன் அம்மானை
காமாட்சி தவசு
குசலவன் கதை
குடந்தையந்தாதி
குமாரசாமியம் மய நூல் சாத்திரம்
குயில் ராமாயணம்
குருக்ஷேத்திரமாலை
கூர்மபுராணம் -முற்பகுதி
,, -பிற்பகுதி
கொடுந்தமிழ்
சமாதிலிங்கப்பிரதிஷ்டை விளக்கம்
சரசுவதி மகால் - கண்ணோட்டம்
சரசுவதி மகாலும் தஞ்சை வரலாறும்
சரசுவதி மகால் வழிகாட்டி நூல்
சரப புராணம்
சரபேந்திர பாகசாத்திரம்
சித்திரபுத்திரர் அம்மானை
சிவகாமசுந்தரி பரிணய நாடகம்
சிவபாரத சரித்திரம்
சிறுத்தொண்டர் இசை நாடகம்
சீவகசிந்தாமணி அம்மானை
சுமிருதி சந்திரிகை
செண்டலங்காரன் விறலிவிடு தூது
செந்தமிழ்
சோமயாகப் பெருங்காவியம்
ஞானக்குறவஞ்சி
தஞ்சை வெள்ளைப்பிள்ளையார்
குறவஞ்சி
ததீசிப்புராணம் —
வினாவிடைப் புராணம்
தருமநெறி நீதிகள்
தனிப்பாடல் திரட்டு -முற்பகுதி
,, -பிற்பகுதி
தியாகேசர் குறவஞ்சி
திருக்குறள் பழைய உரை
-அறத்துப்பால்
திருஞானசம்பந்தர் பிள்ளைத்தமிழ்
திருப்பெருந்துறை சிவயோகநாயகி
பிள்ளைத்தமிழ்
திருவாய்மொழி வாசகமாலை
துரோபதை அம்மானை
நம்மாழ்வார் திருத்தாலாட்டு
நளச்சக்ரவர்த்திக் கதை
நாசிகேது புராணம்
நாராயணசதகம்
நாலடியார் உரைவளம்-முதற்பாகம்
,, -2ம் பாகம்
நாற்கவிராசநம்பி இயற்றிய
அகப்பொருள் விளக்கவுரை
நிலத்தடிநீர் காணுதல்
நீதிநூல்
பலஜாதகம் - விகடம்
பார்சுவநாதர் அம்மானை
புல்லையந்தாதி
பெருந்தேவனார் பாரதம்
போன்ஸ்லே வம்ச சரித்திரம்
போஜனகுதூகலம்
மருதூரந்தாதி
மலையருவி
மார்கண்டேயன் அம்மானை
மாலைத்தொகுப்பு
முருகர் கதம்பம்
மூன்று தமிழ் நாடகங்கள்
மோகினிவிலாச குறவஞ்சி
ரத்னப்பரீக்ஷை
ராமர் அம்மானை
வடிவேல் சதகம்
வண்ணத்திரட்டு
வள்ளலார்பிரபந்தங்கள்
விறலிவிடு தூது
வீராகமம்
வீரையன் அம்மானை

## 4. இசை & நாட்டியம்

அம்பி சாஸ்திரியின் கீர்த்தனைகள்
சகசி மன்னரின் கீர்த்தனைகள்
சங்கீத தர்பணம்
சப்தம் என்னும் தாளச்சொற்கட்டு
தமிழிசைப் பாடல்களும்,
நாட்டிய பதங்களும்
தாள சமுத்திரம்
நாட்டிய சாஸ்திர சங்கிரகம் I
,, II
ராக ஆலாபனைகளும் டாயங்களும்

## 5. சில்பம்

காசியப சில்பசாத்திரம்
சகளாதிகாரம்
சில்பரத்தினம்
பிராமிய சித்ரகர்ம சாத்திரம்
மயமதம் பாகம் 1
,, பாகம் 2
மயனூல் — சாத்திரம்
மானசாரம் — 2ம் பாகம்
ஸாரஸ்வதீய சித்ரகர்மசாத்திரம்

## 6. சோதிடம்

காலச்சக்கரம்
சகாதேவ நிமித்த சூடாமணி
பூர்வ பாராசர்யம்
வராகர் ஓராசாத்திரம்

## 7. தலபுராணம்

அருணாசலபுராணம்
கும்பகோணப்புராணம்
திருச்சோற்றுத்துறை தலபுராணமும்
தோரவப் பதிகங்களும்
திருநல்லூர்ப்புராணம்
திருப்பெருந்துறைப்புராணம்

## 8. மருத்துவம்

அகத்தியர் 100
அகத்தியர் 2000 – பாகம் 1, 2 & 3
அகத்தியர் (லோக மாரணம்)
அசுவ சாத்திரம்
அனுபவ வைத்திய முறைகள்
ஆயுர்வேத உபதேசங்கள்
பாகம் 1 & 2
ஆனந்தகந்தம்
கர்ப்பிணிரக்ஷை
கஜ சாத்திரம்
குழந்தை பராமரிப்பு
கொங்கணர் சரக்குவைப்பு 100

சரபேந்திரர் வைத்திய முறைகள் :
உளமாந்தை, க்ஷயரோக சிகிச்சை
கர்ப்பிணி பாலரோக சிகிச்சை
காச சுவாச சிகிச்சை
குன்மரோக சிகிச்சை
சந்நிரோக சிகிச்சை
சிரோரோக சிகிச்சை
சூலை, குட்டம், மூலம், பித்த
சிகிச்சை
நயனரோக சிகிச்சை
நீரிழிவு சிகிச்சை
பாண்டு, காமாலை சிகிச்சை
பித்தரோக சிகிச்சை
பேதிமுறைகளும், அதிசார
சிகிச்சையும்
வாதரோக சிகிச்சை
விரணம், கரப்பான்ரோக சிகிச்சை
விஷரோக சிகிச்சை
ஜ்வரரோக சிகிச்சை
சரபேந்திர வைத்திய ரத்னாவளி
பாகம் 1 & 2
தன்வந்தரி வைத்தியம் பாகம் 1 & 2
தேரர் சிறுநீர்க்குறி சோதனை

நாடீசக்கரம்

4448 வியாதிகள் விளக்கம்

போகர் நிகண்டு அட்டவணை

பாகம் 1 & 2

மச்சமுனி நாயனார் 800

மாடுகள், குதிரைகள் பறவைகள்

வைத்தியம்

வைத்தியத்திரட்டு

9. வேதாந்தம்

சங்கற்பநிராகரணம்

சித்தாந்த நிச்சயம்

சிவஞானதீபம்

சிவப்பிரகாச விகாசம்

ஞானசாரம்

தத்துவ விளக்கம்

தாசபோதம் – பாகம் 1 & 2

திருநெறிவிளக்கம்

பர்த்ருஹரி நீதிசதகம்

வீராகமம்

## நூலகப் பருவ இதழ்

ஆண்டுக்கு மும்முறை வெளிவரும் பன்மொழி இதழ் ஒன்று இந்நூலக வாயிலாக 1939-ஆம் ஆண்டு முதல் வெளிவருகிறது. இதன் முதல் பதிப்பாசிரியர் முன்னாள் கௌரவக் காரியதரிசி திரு. எஸ். கோபாலன், பி.ஏ.,பி.எல்., இப்பருவ இதழ் நூலகத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள சிறிய சுவடிகளை பதிப்பித்து தொடர்ச்சியாக வெளியிடுவதற்காகவும், அரிய சுவடிகள் பற்றிய செய்திகளைத் தெரிவிப்பதற்காகவும், நூலகத் தொடர்பான கட்டுரைகள் வெளியிடுதல் முதலிய நோக்குடன் தொடங்கப்பட்டது. இதுவரை 40 தொகுதிகள் வெளிவந்துள்ளன. முதல் தமிழ்க் கட்டுரை பருவ இதழ் தொகுதி 2 பகுதி 3-ல் (1942) மூலிகா அநுக்ரமணிகா என்ற தலைப்பில் வடமொழி மற்றும் தமிழ் மொழிபெயர்ப்புடன் வெளிவந்தது. இவ்விதழ்களில் நூலகத்தில் பணியாற்றிய புலவர்கள் பட்டினத்தார் வெண்பா, சரபோஜி சகசிராஜன் காலத்திய இசைக் கருவிகள், லக்ஷ்மி கடாசர், பகவன் போன்ற கட்டுரைகளை எழுதினர். 1957-ஆம் ஆண்டு டாக்டர் எஸ். வெங்கட்ராஜன் அவர்கள் போகர் நிகண்டு அட்டவணை என்னும் தொடர் நூலைத் தமிழில் முதன்முதலில் பருவஇதழ் 11 பகுதி 2-ல் எழுதினார். அதன்பின் சரசுவதி மகால் நூலகம் ஒரு கண்ணோட்டம் போன்ற பல தமிழ் நூல்கள் வெளிவந்துள்ளன. தற்பொழுது காலாண்டு இதழாக வெளிவந்து கொண்டுள்ளது.

## அச்சு நூல்கள்

இந்நூலகத்தில் தமிழ்ச் சுவடிகள் மட்டுமின்றி தமிழ் அச்சு நூல்களும் சேர்த்துவைக்கப்பட்டுள்ளன. 1964-ஆம் ஆண்டு தஞ்சாவூர் மன்னர் சரபோஜியின் சரசுவதி மகாலின்கண்ணுள்ள தமிழ் அச்சுப் புத்தகங்களின் அகரவரிசைப் பட்டியல் ஒன்று வெளியிடப்பட்டது. அதில் சுமார் 2,300 நூல்கள் மட்டுமே

அகரவரிசைப்படி அச்சிடப்பட்டுள்ளன. இப்பிரிவில தற்பொழுது 11,300 நூல்கள் உள்ளன. இவற்றில் பழமையான நூல்களும், புதிய வெளியீடு களும் உள்ளன. இவற்றை ஆய்வாளர்கள் பயன்கொள்ளத்தக்கவகையில் நூலகவியல் முறைப்படி கோலன் பகுப்புசெய்து, நூற்பெயர், ஆசிரியர்பெயர் நூல்சார்ந்த துறை ஆகியவற்றைக் குறிக்கும் மூன்று காட்லாக் கார்டுகள் எழுதிவைக்கப்பட்டுள்ளன. இத்தொகுப்பு இலக்கியம், சோதிடம், சங்கீதம், சிற்பம், வரலாறு, பொருளாதாரம், சமயம் முதலான பல துறைகளைச்சார்ந்த நூற்களை உள்ளடக்கியதாகும்.

இந்நூலகம் தற்காலம் அச்சாகி விற்பனையில் உள்ள அரிய தமிழ் நூற்களை, நிதி வசதிக்கேற்ப வாங்கியும், அன்பளிப்பாகச் சான்றோர்கள் சேகரித்த நூற்களை அவர்களின் நினைவாகப் பெற்றும் புத்தகப்பிரிவில் சேர்த்து வருகிறது. சுவடிகளிலுள்ள சிறந்த இதுவரை அச்சில் அரிதாகவுள்ள தமிழ் நூற்களை தகுதிவாய்ந்த அறிஞர் பெருமக்களையும், வல்லுநர்களையும் கொண்டு பதிப்பித்தும், பிறமொழியிலுள்ளவற்றை மொழிபெயர்ப்புச் செய்தும், நூல்வடிவில் அச்சிட்டு விற்பனை செய்தும்வருகிறது. தமிழகத்தின் பல்வேறு இடங்களில் பயனற்றுக்கிடக்கும் சுவடிகளை நூலகத்திற்கு அன்பளிப் பாகப் பெற்றும் பாதுகாத்து வருகிறது. பாதுகாப்புப்பணி கருதி அவற்றை நுண்படமெடுத்தும், ஆய்வறிஞர்கள் பயன்கொள்ளும் வகையில் கொடுத்துதவியும் எனைத்தானும் தமிழ்ப்பணி செய்துவரும் இந்நூலகத்தின் பெருமையினை அவனியில் அறியாதார் யாருமில்லை எனலாம்.

வாழ்க சரசுவதி மகால்! வளர்க தமிழ்ப்பணி!

## இக்கட்டுரைக்குத் துணைநின்றவைகள்

1. தஞ்சை சரசுவதி மகால் நூலகப் பருவ இதழ்கள்.
2. தஞ்சை சரசுவதி மகாலின் தமிழ்ச்சுவடிகள் காட்லாக்குகள்.
3. சரசுவதி மகாலின் நிர்வாக ஆண்டு அறிக்கைகள்.
4. தமிழ்சுவடிகளின் பதிவேடுகள்
5. தமிழ் அச்சு நூல்களின் பதிவேடுகள்.
6. சரசுவதி மகால் நூலகத் தமிழ் வெளியீடுகள்.
7. தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும்: சே. எம். வேங்கடராமையா ; 1984 ; தஞ்சாவூர்.

# நூலகக் குறிப்பு

தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் ஆண்டுதோறும் சுவடிகளை அன்பளிப்பாகக் கொடுப்பவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படுகிறது. மேலும் புதிய நூற்களை நிதிநிலைமைக்கேற்ப விலை கொடுத்து வாங்கியும், பழைய நூற்களை அன்பளிப்பாகக் கொடுப்பவர்களிடமிருந்து பெற்றும் நூலகத்தில் பயன்பாட்டிற்காகச் சேர்த்து வைக்கப்படுகிறது. இவைகள் பாதுகாப்பு நோக்குடன் வைப்பதோடு ஆய்வாளர்கள் மற்றும் வாசகர்களின் தேவைக்கேற்பவும் வழங்கப்படுகின்றன. நூலக அலுவல் நேரத்தில் இந் நூற்களை படித்து குறிப்பு எடுத்துக்கொள்ள அனுமதியும்; ஆய்வாளர்களின் பயன்பாட்டிற்காக மின்னச்சுப்படியும் செய்து கொடுக்கப்படுகிறது.

இந்நூலகத்தில் 1991-92ஆம் ஆண்டு (1—4—91 முதல் 31—3—92 வரை) புத்தகப்பிரிவில் சேர்த்து வைக்கப்பட்ட 667 தமிழ்நூல்கள் பற்றிய சிறு குறிப்பும் கீழே தரப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| விலை கொடுத்து வாங்கிய தமிழ் நூல்கள் | 110 |
| அன்பளிப்பாகப் பெறப்பட்ட தமிழ் நூல்கள் | 423 |
| சரசுவதி நூலக வெளியீடுகள் ( ,, ) | 43 |
| மின்னச்சுப்படி செய்து நூலகத்தில் வைக்கப்பட்ட தமிழ்நூல்கள் | 91 |
| ஆக கூடுதல் | 667 |

இந்நூல்களில் பெரும்பாலானவைகள் சமயம், வேதாந்தம், மருத்துவம், சோதிடம் மற்றும் ஆன்மீகம் முதலிய துறைகளைச் சார்ந்தவைகளாகும். வரலாறு, இலக்கியம், இலக்கணம், இசை போன்ற பிற துறையைச் சார்ந்த நூல்களும் உள.

இந்நூலகத்தில், பல துறையைச்சார்ந்த நூல்கள் பல்வேறு மொழிகளில் உள்ளதைக் காணலாம். ஆகவே இதனை ஒரு கலைக் கருவூலமாக அன்று முதல் இன்று வரை கருதப்பட்டு வருகிறது. நம் நாட்டின் கலாச்சாரம் மற்றும் பண்பாடு முதலியவற்றை யாவருக்கும் உணர்த்தவல்ல பல்கலை நூலகம், தஞ்சை சரசுவதி மகால்.

# "மரியாதைராமன் கதைகள்" நூற்பதிப்புகள் குறித்த சிந்தனைகள்

ம. மணிகண்டன், M. A., M. Phil.,
தமிழ்ப்பண்டிதர்.

---

முன்னுரை :

மரியாதைராமன் கதைகள், தெனாலிராமன் கதைகள், இராயர் அப்பாஜி கதைகள், பஞ்சதந்திரக் கதைகள், விக்கிரமாதித்தன் கதைகள் முதலான கதைகள் பலகாலமாக மக்களிடையே செல்வாக்குடன் திகழ்ந்து வருகின்றன; இலக்கிய அழகுகள் நிரம்பியனவாக அமைந்திருக்கின்றன.

இக்கதையிலக்கியங்களில் ஒன்றான "மரியாதைராமன் கதைகள்" என்பதை அண்மையில் நான் பதிப்பித்த போதும், பதிப்பித்த பின்னும் கிடைத்த செய்திகளை - பெற்ற சிந்தனைகளை இங்குப் பதிவுசெய்கின்றேன். இக்கட்டுரைப் பதிவு, "மரியாதைராமன் கதைகள்" நூற்பதிப்பைப் பெரும் அளவுக்கு முழுமை செய்வதுடன் இக்கதைகளையும் இவை போன்ற கதைகளையும் ஆராயப் புகுவோர்க்கும் துணைசெய்யும்.

நாட்டுப்புறவியல் அறிஞரான திரு. சு. சக்திவேல் தயாரித்துள்ள நாட்டுப்புறக் கதைப்பாடல்களின் பெயர்களைக்கொண்ட அகர வரிசைப் பட்டியலில் 'மரியாதைராமன் கதை'யும் இடம்பெற்றுள்ளது நோக்கத் தக்கது. ('நாட்டுப்புறக் கதைப் பாடல்கள் (Folk Ballads)' **நாட்டுப்புறவியல்**, பக். 215—230) ஆனால் மரியாதைராமன் கதைகள் செய்யுள் வடிவில்—கதைப்பாடல் வடிவில் இருப்பதாகத் தெரியவில்லை. உரைநடை வடிவில் பற்பல பதிப்புக்கண்டு தமிழுலகில் உலவி வருதல் யாவரும் அறிந்த ஒன்றே. செய்யுள் வடிவாயினும் உரைநடை வடிவாயினும் இது நாட்டுப்புறக் கதையிலக்கியமாகவே மதிக்கப்பெறும் ஒன்றாகும். ஆதலால் மரியாதைராமன் கதைகள் குறித்த ஆய்வானது நாட்டுப்புறவியல் துறைசார்ந்த ஆய்வாகவே அமையும் என்பதில் ஐயமில்லை.

## "மரியாதைராமன் கதைகள்"

### நமது பதிப்புக்கும் பிற பதிப்புகளுக்கும் உரிய மூலம் குறித்து

நமது "மரியாதைராமன் கதைகள்" நூற்பதிப்பு, ஓலைச்சுவடியை அடிப்படையாகக்கொண்டு செய்யப்பெற்றதாகும் (தமிழ்த்துறை ஓலைச்சுவடி எண்; 1830) மரியாதைராமன் கதைகளின் மூல ஆசிரியர் யார் என்பதை இச் சுவடியின் துணைகொண்டோ பிற வகையிலோ ஊகிக்கமுடியவில்லை. இக் கதைகள் எவ்வாறு உருவாயின, எக்காலத்தில் உருவாயின, யாரால் உருவாக்கப் பெற்றன என்னும் வினாக்களுக்கும் விடைகாண இயலவில்லை. வாய்மொழிக் கதைகளாகவே இவை வழங்கிவந்துள்ளன என்று கருதலாம்.

1915இல் இராஜகோபால முதலியாரால் பரிசோதிக்கப்பெற்றுக் 'கதா சிந்தாமணி' என்னும் பொதுத்தலைப்புக்குள் வெளிவந்த "மரியாதைராமன் கதைகள்" நூலும் நமது நூலும் பெருமளவுக்கு ஒத்துள்ளன. நமது மகால் ஓலைச்சுவடி எதிலிருந்து பிரதி செய்யப்பெற்றதோ அந்த மூல ஓலைச்சுவடியும் இராசகோபால முதலியாரால் பரிசோதிக்கப்பெற்று வெளிவந்த நூலுக்கு அடிப்படையான மூலச்சுவடியும் ஒன்றாக இருந்திருக்க மிகுந்த வாய்ப்புகள் உள்ளன. கதைகளின் தலைப்புகள், நடை அனைத்தும் இரண்டிலும் ஒன்றாகவே உள்ளன.

'மரியாதைராமன் கதை'களின் பழம்பதிப்பு நூல்களை அடிப்படையாகக்கொண்டு, பின்னர் வந்த மரியாதைராமன் கதைகளின் பிற பதிப்பு நூல்கள் அனைத்தும், அவற்றின் பதிப்பாசிரியர்களால் அவர்தம் நோக்குக்கும் போக்குக்கும் ஏற்பச் சிறுசிறு மாறுதல்களுடன் தம்தம் நடையில் உருவாக்கப் பட்டவையாகக் காட்சியளிக்கின்றன.

### மரியாதைராமன் கதைப்பதிப்பு நூல்கள்

#### சில பதிப்புகளின் பதிப்பு விவரக் குறிப்புகள்

1. மரியாதைராமன் கதைகள், "கதா சிந்தாமணி" எனும் தலைப்புள்ள நூல், இராசகோபால முதலியாரால் பார்வையிடப்பட்டு அச்சிடப்பட்டது. வித்வரக்ஷாமிர்த அச்சுக்கூடம், 1915.

*2. மரியாதைராமன் கதைகள், . இரத்தின நாயகர்&சன்ஸ் பதிப்பு. சென்னை.

---

* கட்டுரையாசிரியனின் பார்வைக்கு இப்பிரதி கிடைக்கவில்லை,

3. மரியாதைராமன் கதைகள், ஆசிரியர்; நெ. சி. தெய்வசிகாமணி, ஸ்டார் பிரசுரம், சென்னை.

4. மதனகாமராஜன் மரியாதைராமன் கதைகள் (புதிய தமிழில் புதிய கதைகளுடன்) பதிப்பாசிரியர்; அரு. ராமநாதன், பிரேமா பிரசுரம், சென்னை, முதற்பதிப்பு 1958. எட்டாம் பதிப்பு 1989.

5. மரியாதைராமன் கதைகள், ஆசிரியர்: பரதன், பூம்புகார்ப் பதிப்பகம், சென்னை, 1977.

6. மரியாதைராமன் கதைகள், பதிப்பாசிரியர்: லேனா தமிழ்வாணன், மணிமேகலைப் பிரசுரம், சென்னை, 1980.

7. புகழ்பெற்ற மரியாதைராமன் கதைகள், எஸ். தமயந்தி, சுவாமிமலை பதிப்பகம், சென்னை. மு. ப. 1985, மூன்றாம் பதிப்பு: 1991.

8. மரியாதைராமன் தீர்ப்புக் கதைகள், பதிப்பாசிரியர்: முல்லை முத்தையா, NCBH வெளியீடு, சென்னை, 1986.

9. பழமொழிகளில் மரியாதைராமன் நீதிக்கதைகள், ஆசிரியர் : அசோக் குமார், விசாலாட்சி நிலையம், சென்னை, 1989.

10. மரியாதைராமன் கதைகள், ஆசிரியர்: சிவகுமார், பானுரேகா பப்ளிகேஷன்ஸ், சென்னை, மு. ப. 1989, மூன்றாம்பதிப்பு, 1991.

11. மரியாதைராமன் கதைகள், எழுதியவர்: ஏ. எஸ். வழித்துணைராமன், பாரதி பதிப்பகம், சென்னை, 1990.

12. மதிப்புமிக்க நீதிகள் வழங்கிய மரியாதைராமன் கதைகள், ச. சரோஜா, இமயப்பதிப்பகர், நாகப்பட்டினம், 1990.

13. மரியாதைராமன் கதைகள், ஆசிரியர்: அசோக்குமார், தனலட்சுமி பதிப்பகம், சென்னை, 1990.

14. மரியாதைராமன் நீதிக்கதைகள், ஆசிரியர்: மானோஸ், பூங்கொடி பதிப்பகம், சென்னை, 1990.

15. மரியாதைராமன் கதைகள், தொகுப்பு: ஞானமூர்த்தி, அனுராகம் வெளியீடு, சென்னை, இரண்டாம் பதிப்பு: 1990.

இப்பதிப்புகளில், பதிப்பாசிரியர், தொகுப்பு (தொகுப்பாசிரியர்), பார்வையிட்டவர், ஆசிரியர், எழுதியவர், என்று குறிப்பிடப்பட்டுப் பெயர் குறிக்கப்பெற்றும், எதுவும் குறிப்பிடப்பெறாமல் பெயர்மட்டும் குறிக்கப் பெற்றும் பதிப்பித்தோர் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. மரியாதைராமன் கதைகளுக்கு மேலும் பல பதிப்பு நூல்கள் இருப்பதாகத் தெரிய வருகின்றது. கிடைத்துள்ள இப்பதிப்புகளின் ஆசிரியர்களில் பலர் தங்கள் முன்னுரைகளில், கதைகளை இக்கால நடைமுறைகளுக்கேற்பவும், கொச்சையான சில பகுதி களை நீக்கிவிட்டும், தம் நடையிலும் எழுதியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

மரியாதைராமன் கதைப்பதிப்புகள்

*பிற பதிப்புகளில் இடம்பெற்று நமது பதிப்பில் விடுபட்டுள்ள கதைகள் மற்றும் வேறுபாடுகள்.*

நமது சரசுவதி மகால் நூலக ஓலைச்சுவடியில் 'மரியாதைராமன் கதைகள்' இரண்டாவது கதையிலிருந்துதான் 'குரு வாழ்க குருவே துணை, 'இரண்டாவது' என்றும் தொடக்கக் குறிப்புடன் தொடங்குகின்றன. முதல் கதை நமது சுவடியில் விடுபட்டுள்ளது. பிற பதிப்பகங்களின் மரியாதைராமன் கதைப்பதிப்புகளில் முதலாவது கதையாக 'நான்கு திருடர்கள் கதை' என்னுந் தலைப்பிலான கதை இடம்பெற்றுள்ளது.

பெரும்பாலான பிற பதிப்புகளில் இறுதிக் கதையாக 'நவமிதேவனும் புகழ்ந்த தீர்ப்பு' என்னும் பொருளில் ஒரு கதை இடம்பெற்றுள்ளது. ஆனால் இக்கதை நமது சுவடியில் இடம்பெறவில்லை. (அதனால் நம் பதிப்பு நூலிலும் இடம்பெறவில்லை)

மரியாதைராமன் கதைகளின் எல்லாப் பதிப்புகளும் ஒரே மாதிரியான கதை வரிசையொழுங்கைக் கைக்கொள்ளவில்லை. சில பதிப்புகளில் வரிசை யொழுங்கு ஒத்தும் சில பதிப்புகளில் வரிசையொழுங்கு மாறியும் உள்ளது.

நமது பதிப்பில் கதைகளுக்கான தலைப்புகள் தொழிற்பெயர்த் தொடர்களாக உள்ளன. அசோக்குமாரால் உருவாக்கப்பெற்றுத் தனலட்சுமி பதிப்பகத்தால் 1990 இல் வெளியிடப்பட்ட நூலில் உள்ள கதைத் தலைப்புகள் பொருத்தமான 'உலகநீதி' இலக்கியத்தொடர்களாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்க பதிப்பு முயற்சியாகும்.

நமது சுவடிப்பதிப்புக் கதைகளில் பாத்திரங்களுக்குப் பெயர்கள் காணப்பெறவில்லை. சில பதிப்புகளில் பதிப்பாசிரியர்களே பாத்திரங்களுக்குத் தத்தம் நோக்கில் பெயர்கள் இட்டிருக்கின்றனர்.

நமது கவடிப் பதிப்பில் பாத்திரங்களுக்குச் சுட்டப்படும் சில சாதிப் பெயர்கள் வேறு சில பதிப்புகளில் மாறிக் காணப்படுகின்றன. (இதன் காரணம் எண்ணிப் பார்க்கப்படவேண்டும்).

பழமொழிகளே இடம்பெறாமல் கதைகள் அமைந்துள்ள நிலையையும் சில பதிப்புகளில் காணமுடிகின்றது.

சில பதிப்பு நூல்களில் புதிதாக இடம் பெற்றுள்ள கதைகள் வெவ் வேறு நூல்களில் உள்ள பரவல்பெற்ற வாய்மொழிக் கதைகளாகும்.

"யானைக்கும் பானைக்கும் சரி" என்னும் கதையின் பாத்திரங்களில் உள்ள இந்து, முசுலீம் என்னும் மதச் சுட்டுப் பெயர்கள், சிவகுமார் என்பவரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்துள்ள 'மரியாதைராமன் கதைகள்' பதிப்பில் காணப்பெறவில்லை. இம்மதச் சுட்டுப் பெயர்கள் நமது பதிப்பிலும் பிற பதிப்புகளிலும் இடம்பெற்றுள்ளன.

## மரியாதைராமன் கதைகளில் (நமது பதிப்பில்) இடம்பெற்றுள்ள பழமொழிகள் : அடைவு

மரியாதைராமன் கதைகள் ஒவ்வொன்றும் தம் முடிவுப் பகுதியில் ஒவ்வொரு பழமொழியைக்கொண்டு (2, 3, 5 ஆம் கதைகளில் இரண்டு இரண்டு பழமொழிகள்) முடிவனவாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மரியாதைராமன் கதைகள் ஒவ்வொன்றிலும் இடம்பெற்றுள்ள பழமொழி கள் இங்கு அடைவுபடுத்தித் தரப்படுகின்றன. இதே பழமொழிகள் சிறிய அளவில் சொல் வடிவங்களில் மாற்றங்களுடன் வேறு சில, தனியார் வெளி யிட்டுள்ள 'மரியாதைராமன் கதைகள்' பதிப்புகளிலும் இடம்பெற்றுள்ளன.

| வரிசை எண். | பழமொழிகள் | கதை வரிசை எண். |
|---|---|---|
| 1 | அடாத காரியம் செய்தார் படாதபாடு படவேணும் ... ... ... | 10 |
| 2 | அடிமேலடி அடித்தால் அம்மியும் நகரும் | 8 |
| 3 | அழுக்கை அழுக்குக் கொல்லும் இழுக்கை இழுக்கு வெல்லும் | 17 |
| 4 | அறிவுள்ளவனுக்கு அரியதொன்றில்லை | 19 |
| 5 | ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு | 12 |

| வரிசை எண். | பழமொழிகள் | கதை வரிசை எண். |
|---|---|---|
| 6 | ஊராருடைமைக்குப் பேயாய்ப் பறந்தால் வருமோ? | 7 |
| 7 | எட்டியுடன் சேர்ந்த இலவும் தீப்பட்டது | 9 |
| 8 | கள்ளூடன் கைப்பொருள் இழப்பான் யோக்கியம் | 11 |
| 9 | சணப்பன் (சமணன்) வீட்டுக்கோழி<br>தானே விலங்கிட்டுக் கொண்டதுபோல | 4 |
| 10 | தான் தேடாப் பொன்னுக்கு<br>மாற்றுமில்லை, உரையுமில்லை | 14 |
| *11 | தானாக வந்த சீதேவியைக் காலாலுதைத்துத்<br>தள்ளுவது போல் | 2 |
| 12 | தானொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கும் | 2 |
| 13 | திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை | 3 |
| 14 | தீரா வழக்கிற்குத் தெய்வமே சாட்சி | 16 |
| 15 | பகையாளி குடியை உறவாடிக் கெடுக்கவேணும் | 5 |
| 16 | பள்ளமுள்ள இடத்திலே தண்ணீர் நிற்கும் | 6 |
| 17 | பாலைக் குடித்தவனுக்குப் பாலேப்பம் வரும்<br>கள்ளைக் குடித்தவனுக்குக் கள்ளேப்பம் வரும் | 20 |
| 18 | பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்லவேணும் | 18 |
| 19 | பொய் நின்று மெய்யை வெல்லுமா ? | 15 |
| 20 | மரத்தின் பழம் மரத்தண்டையே விழும் | 13 |
| 21 | முழுப் பூசணிக்காயைச் சோற்றோடே<br>மறைக்குறது போல | 5 |
| 22 | யானை தன் தலையிலே தானே<br>மண்போட்டுக் கொள்கிறதுபோல் | 3 |

* நமது பதிப்பின் பழமொழி அடைவில் விடுபட்டுவிட்ட இப்பழமொழி இங்கு இணைக்கப்பட்டுள்ளது.

"மரியாதைராமன் கதைகள்" முதற்பதிப்பு நூலின் பழமொழிகளில் இடம்பெற்றுள்ள சில சொற்களின் வடிவங்கள் தெளிவின்றி இருந்தன. அவை பிற பதிப்புகள் மற்றும் தமிழ்ப் பழமொழிகளின் வழக்குநோக்கிச் சீர்செய்யப் பெற்று, சரியான பாடங்களுடன் இந்த அடைவில் பயன்படுத்தப் பெற்றுள்ளன.

## மரியாதைராமன் கதைப்பதிப்புகள் — குறிப்பிடத்தக்க வேறுபாட்டுப் பகுதிகள்

நமது பதிப்பில் இடம்பெற்றுள்ள கதைப்பகுதிகளும் பிற பதிப்புகளில் இடம்பெற்றுள்ள கதைப்பகுதிகளும் சில குறிப்பிடத்தக்க வேறுபாடுகளைக் கொண்டுள்ளன. இவை சமூகவியல் நோக்கில் எண்ணிப்பார்க்கத்தக்கவை.

எடுத்துக்காட்டாக ஒரு பகுதியைக் காணலாம்.

மரியாதைராமன் நீதிபதியானதும், அவனுடைய தந்தை அவனை அப் பதவியை விட்டுவிடச் சொல்கின்றார். அதற்கு அவன் மறுமொழி கூறுகின்றான்.

இப்பகுதி நமது சுவடிப் பதிப்பு நூலிலிருந்து:

தன் குமாரனுக்கு மரியாதைராமனென்கிற பேரும் நியாயாதிபதி உத்தியோகமும் கிடைத்த சமாசாரத்தை அவன் தகப்பன் கேள்விப்பட்டு அவனிடத்திற்கு வந்து "ஓகோ பிள்ளாய்! என்ன காரியம் செய்தாய்? இப்படி மதிமோசம் போகலாமா? நியாய சூச்சம் அறிகிறது தேவர் களுக்கும் எளிதல்லவே. சற்றே பிசகினால் அதிக பாவம் விளையுமே! நீ யிந்த நியாயாதிபதியத்தை விட்டு விடென்"று சொன்னான்.

அதைக்கேட்டு மரியாதைராமன், "ஓய் என் பிதாவே! கோபம் செய்யவேண்டாம். கடவுளானவர் எப்படிப்பட்ட நியாய சூட்சுமத்தை யும் கண்டுபிடிக்கத்தக்க புத்தியைக் கொடுத்து அதிலே எவ்வளவும் குற்றம் வராமல் என்னைக் காப்பாற்றுவார். தானாக வந்த சீதேவியைக் காலாலுதைத்துத் தள்ளுவதுபோல், உலகத்தை எல்லாம் ஆளும் அரசனாலே கிடைத்த இந்த நியாயாதிபதித்தானத்தை விட்டுவிடச் சொல்லாதிருக்கும்படி உம்மைப் பிரார்த்திக்கிறேனெ"ன்றான்.

இதே, மரியாதைராமனின் தந்தை அறிவுரை கூறும் - மரியாதைராமன் மறுமொழி கூறும் கதைப்பகுதி பிரேமா பிரசுரப் பதிப்பு நூலிலிருந்து :-

(இப்பதிப்பு முதற் பதிப்பாக 1958லும் எட்டாம் பதிப்பாக 1989லும் வெளி வந்துள்ளது.)

மரியாதைராமனின் தகப்பனார் தன் குமாரனுக்கு நீதிபதி ஸ்தானம் கிடைத்ததைக் கேள்விப்பட்டு அளவிலாத ஆனந்தம் கொள்வதற்குப் பதிலாக அளவிலாத துக்கம் கொண்டவராய்த் தம் குமாரனிடம் வந்து, "மகனே! நம்முடைய குலத்தொழிலான விவசாயத்தை விட்டு விட்டு ஏன் இந்த அபாயகரமான நீதிபதியின் ஸ்தானத்தை ஏற்றுக் கொண்டாய்? நீதி நுட்பங்களை அறிந்து சரியான தீர்ப்பு வழங்குவது தேவர்களுக்கும் எளிதான காரியமல்ல. தராசின் தட்டு இறங்காமல் நீதி வழங்கவேண்டும். சிறிது தவறினாலும் நிரபராதிகளின் கண்ணீர் நம்முடைய ஏழேழு தலைமுறையையும் கூர்மையான வாள்போல் அறுக்குமே! பழி பாவமும் வந்து சேருமே! நமக்கு எதற்கப்பா இந்த வம்பெல்லாம்? அபாயகரமான அந்தப் பதவியை விட்டுவிடு!" என்றார்.

அதற்கு மரியாதைராமன், "தந்தையே! கோபித்துக்கொள்ளாதீர்கள். ஒருவன் தன் குலத் தொழிலைத்தான் செய்யவேண்டுமென்று சொல்வது அறிவுடைமையாகாது. பிறப்பை ஒட்டித் தொழிலை வகுப்பதும், சாதாரண குடும்பங்களில் உயர்ந்த அறிவுடையோர் பிறக்க மாட்டார் என்னும் மூட நம்பிக்கையும் வெகு காலமாகவே நம்நாட்டைப் பீடித்துப் பெரும்வியாதியாக வளர்ந்து வந்திருக்கிறது. அந்தச் சம்பிரதாயத்தை உடைத்தெறிவதற்காக நான் இப்போது நீதிபதியாக ஆகியிருக்கிறேன்! நீதிதேவனான கடவுள் எப்படிப்பட்ட நீதி நுட்பத்தையும் கண்டுபிடிக்கத்தக்க அறிவையும் ஆற்றலையும் எனக்குக்கொடுத்து நீதி வழங்கும் முறையிலே எள்ளளவும் குற்றம் வராமல் என்னைக் காப்பாற்றுவார்! தானாக வந்த சீதேவியைக் காலால் உதைத்துத் தள்ளுவதுபோல நாடாளும் மன்னனால் கிடைத்த இந்த நீதிபதி ஸ்தானத்தை வீணாக விட்டுவிடும்படி தயவுசெய்து சொல்லாதீர்கள்!" என்று பிடிவாதமாக மறுத்துவிட்டான்!

இந்த இரண்டு பகுதிகளையும் உற்றுநோக்கும்போது அவற்றின் தொனியை, வெளிப்படுத்தும் கருத்துகளை அடையாளங் காணமுடிகின்றது. முக்கியமான வேறுபாடு புலப்படுகின்றது.

குலத்தொழில் செய்யும் மரபைப் போற்றும் பழமைவாதியாக மரியாதைராமனின் தந்தை பேசுவதையும், இக்காலத்து அல்லது நீதிக்கட்சி, திராவிட இயக்கங்கள் தோன்றியபிறகு எழுந்த சிந்தனைகளைக் கொண்ட ஓர் இளைஞன் பேசுவதுபோல மரியாதைராமன் பேசுவதையும் இரண்டாவதாக இடம்பெற்றுள்ள கதைப்பகுதியில் நாம் காண்கின்றோம்.

கண்டிப்பாக, பிரேமா பிரசுரப் பதிப்புக் காலத்திற்கு முன்பு சுவடியில் எழுதப்பட்டதான நமது பதிப்பில் தந்தை, மகன் உரையாடலில் குலத்

தொழில் போன்ற எந்தக் கருத்தும் இடம்பெறவில்லை. பழைய சுவடியில் தந்தை சாதியைக் காரணங்காட்டி நம் சாதிக்கு ஏற்காது என்று, மரியாதை ராமனைப் பதவியை விட்டு விலகச் சொல்லவில்லை. மரியாதைராமனும் புரட்சி இளைஞனாக விடை தரவில்லை.

தன் காலத்தில் செல்வாக்குடன் திகழ்ந்த சிந்தனையைத் தனக்கு முந்தைய காலத்துப் படைப்பான - பாத்திரமான மரியாதைராமன் மேல் ஏற்றி அவன் கூறுவதாக ஆக்கிப் பதிப்பித்துள்ளார் பிரேமா பிரசுரப் பதிப்பாசிரியரான அரு. இராமநாதன். (பிற சில பதிப்பாசிரியரும் இவரைப் பின்பற்றியுள்ளனர்)

அவர் சுவடியை அடிப்படையாகக் கொண்டு பதிப்பிக்கவில்லை என்பதையும் அவரே அடிப்படைக் கதையைத் தன் மனப்போக்கிற்கு இயையக் கொண்டுசென்றுள்ளார் என்பதையும் அப்பதிப்பின் 'புதிய தமிழில் புதிய கதைகளுடன்' என்னும் வரி சுட்டி நிற்கின்றது. இப்பகுதியையும் இவை போன்ற பகுதிகளையும் சமூகவியல் நோக்கிலும் அடிக்கருத்தியற் கோட்பாட்டு நோக்கிலும் ஆராய வேண்டும். (மலையாளக் கவிஞர் குமாரன் ஆசானின் 'சிந்தனையில் ஆழ்ந்துள்ள சீதை' இக்காலத்துப் பெண்ணாக, புரட்சிப் பெண்ணாகப் (இராமனை எதிர்த்துப்) பேசுவது போன்றதே, புதுமைப்பித்தனின் அகலிகை போன்றதே, மரியாதைராமன் கதையின் இப்பகுதி.)

**காலமாற்றத்தால்—சமூகப் பழக்கவழக்க மாற்றத்தால் கதையில் ஏற்பட்டுள்ள மாறுதல்**

ஆண்கள் காதுகுத்திக்கொண்டு காதில் கடுக்கன் அணிந்துகொள்ளும் வழக்கம் கடந்த நூற்றாண்டுவரை நம் நாட்டில் இருந்துவந்தது. இப்போது இவ்வழக்கம் 'சென்றுதேய்ந்து இற்று' விட்டது.

மரியாதைராமன் கதைகளின் நமது பதிப்பு நூலிலும் பிற பழம்பதிப்பு நூல்களிலும் உள்ள 'ஒருவன் காதுக் கடுக்கனை ஒருவன் திருடியது' என்னும் கதை ஆண்கள் காதுக்கடுக்கன் அணியும் வழக்கத்தை வெளிப்படுத்துவதாக உளளது. இன்னொரு வகையில் சொல்லப்போனால் ஆண்கள் காதுகளில் கடுக்கன் அணியும் வழக்கம் நிலவிய காலகட்டத்தில் இக்கதை தோன்றியிருக்கின்றது எனலாம்.

தற்காலத்தில் ஆண்கள் காதுகளில் கடுக்கன் அணியும் வழக்கம் வழக்கற்றுவிட்டது. இதனை மனத்தில்கொண்டு, அண்மையில் வெளிவந்த, 'மானோஸ்' என்பவரை ஆசிரியராகக்கொண்ட "மரியாதைராமன் நீதிக்

கதைகள்" நூலில் மேலே குறிப்பட்ட கதை, 'பொன் ஜிமிக்கிக்குக் கால் வந்தது' என்னும் கதையாக உருமாறி இடம்பெற்றுள்ளது.

பழைய கதையில் இடம்பெறும் இரு ஆண் பாத்திரங்களும் இதில் பெண் பாத்திரங்களாக மாற்றம் பெற்றுள்ளன. கடுக்கன் ஜிமிக்கியாக உருமாறியுள்ளது. நூலைப் படிக்கும் தற்கால வாசகர்களுக்குக் கதை தற்காலத்தில் நடந்தது என்று தோன்றும்படி இம்மாற்றம் செய்யப் பட்டுள்ளது.

காலமாற்றத்தால் – சமூகப் பழக்கவழக்க மாற்றத்தால் ஒரே கதை பேரளவு மாறுதல்களைப் பெற்றுள்ளமையை இப்பதிப்புநூலின் கதை நமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

## மரியாதைராமன் கதையும் பஞ்சதந்திரக் கதையும்

சில குறிப்பிட்ட கதைகள் பல இலக்கியங்களிலும் இடம்பெற்று வருவதுண்டு. இவ்வாறான கதையை முதலில் கொண்டமைந்த நூலின் தாக்கமே பிற இலக்கிய நூல்களில் ஏற்பட்டுள்ளது; அதாவது, முதலில் இடம் பெற்ற இலக்கியத்தில் உள்ள கதையைப் பிற நூல்கள் எடுத்தாளுகின்றன என்று கூறலாம்.

அவ்வாறன்றிச் சில வாய்மொழிக் (நாட்டுப்புறக்) கதைகள் ஒரு தனித்த நூலுக்கே உரியதென்றில்லாமல் (அந்நூலாசிரியரின் சொந்தப் படைப்பு என்றில்லாமல்) பல நூல்களுக்கும் பொதுவானதாக, ஒரு நூலின் தாக்கம் மற்றைய நூல்களில் என்றில்லாமல் பல நூல்களிலும் இடம் பெறுவதுண்டு.

மரியாதைராமன் கதைகளில் ஒன்றாக (நமது சுவடிப் பதிப்பிலும் பிற தனியார் பதிப்புகளிலும்) இடம் பெற்றுள்ள "ஒருவன் தன்னிடத்தில் வைத்த இரும்பை எலி தின்றதென்றது" என்னும் கதை வடமொழிப் பஞ்சதந்திரக் கதை மூலத்திலும், தமிழில் அக்கதைகள் செய்யுள் வடிவில் ஆக்கப்பட்டுள்ள இலக்கிய நூல்களான வீரமார்த்தாண்ட தேவர் இயற்றிய "பஞ்சதந்திரப் பாடலி"லும், இயற்றியவர் பெயர் அறியப்படாத "செழிய தரையன் பஞ்சதந்திரத்"திலும் இடம்பெற்றுள்ளது.

வடமொழிப் பஞ்சதந்திரத்திலேயே இக்கதை இடம்பெற்றிருப்பது கொண்டு கால முதன்மை கருதிப் பஞ்சதந்திரக் கதையின் தாக்கத்தாலேயே மரியாதைராமன் கதைகளில் ஒன்றாக இது உருப்பெற்றது என்று கருதலாம்.

தமிழ் மரபிலும் இக்குறிப்பிட்ட கதை வாய்மொழியாக நெடுங்காலமாக வழங்கி வந்திருக்குமேயானால் 'இதன் தாக்கம் இதில்' என்று கொள்ளாமல் இரு மொழிக்கும் பொதுவான கதையாக இதனைக் கருதலாம். இது மேலாய்வுக்குரியது.

நம் சுவடியில் உள்ள கதை, வீரமார்த்தாண்ட தேவரின் 'பஞ்சதந்திரப் பாடல்கள்' 'செழியதரையன் பஞ்சதந்திரம்' ஆகியவற்றில் மித்திரபேதம் என்னும் பகுப்புக்குள் இடம் பெற்றுள்ள ஒப்புமையான கதைப்பகுதிகள் வருமாறு:

**மரியாதைராமன் கதைகள்**

**'ஒருவன் தன்னிடத்தில் வைத்த இரும்பை எலி தின்றதென்றது'**

ஒருவன் பத்து பாரம் இரும்பு வாங்கி ஒருவனிடத்திலே வைத்து மற்றொரு தேசத்துச்குப் போய்ச் சில வருஷங்கழித்துப் பின்பு வந்து அவனை 'இரும்பு கொடு' வென்று கேட்டான்.

அவன் 'உன்னிரும்பை எலி தின்றதெ'ன்று சொன்னான். அந்தச் சொல்லைக் கேட்டு இரும்புக்காரன் மரியாதைராமனிடத்திலே போய் பிராது செய்தான்.

மரியாதைராமன் பிராது செய்தவனுக்கு ஒரு உபாயம் கற்பித்தான், அந்த உபாயத்தின்படியே வாதி தன்னை மோசஞ் செய்தவனுடனே பகையாளி குடியை உறவாடிக் கெடுக்க வேணுமென்று நினைத்து அதிக சிநேகஞ் செய்து ஒருநாள் தன் வீட்டிலே பிரயோசனமென்று மோசக்காரன் மகனை அழைத்துக்கொண்டுபோய்த் தன் வீட்டில் ஒரு அறைக்குள்ளே ஒளித்துவைத்து மறுநாள் மோசக்காரன் 'என் பிள்ளை எங்கே' யென்று கேட்டதற்கு, 'அந்தப் பயலைப் பருந்து எடுத்துக்கொண்டு போய்விட்டது' என்றான்.

அது கேட்டு உடனே பிள்ளைக்காரன் மரியாதைராமனிடத்துக்குப் போய் 'இன்னான் என் பிள்ளையைத் தன் வீட்டுப் பிரயோசனத்திலே சாப்பாட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய்த் திருப்பி அனுப்பாமல் ஒளித்து வைத்து இருக்கிறான். அனுப்பென்று கேட்டால் பிறாந்து எடுத்துக்கொண்டு போச்சுது என்று கூறுகிறானெ' ன்று சொன்னான்.

நியாயாதிபதி பிள்ளைமோசஞ் செய்தவனை அழைப்பித்துப் "பிள்ளையைப் பருந்து எடுத்துக்கொண்டு போமா" வென்று கேட்டான். அதற்கு அவன், "இவனிடத்திலே நான் வைத்திருந்த பத்துபாரம் இரும்பை எலி தின்றுவிட்டதென்று சொல்கிறானே. இரும்பை எலி தின்னுமா ?" என்றான்.

மரியாதைராமன் அவ்விருவரையும் பார்த்து நீங்கள் ஒருவரையொருவர் முழுப்பூசணிக்காயைச் சோற்றோடே மறைக்குறது போல மோசஞ் செய்கிறது நியாயத்துக்கு விரோதமென்று கண்டித்துப் பிள்ளைக்காரன் இரும்பைக் கொடுக்கும்படியாகவும் இரும்புக்காரன் பிள்ளையைக்கொடுக்கும் படியாகவும் தீர்ப்புச் செய்தான்.

வீரமார்த்தாண்டதேவர் இயற்றிய 'பஞ்சதந்திரப் பாடல்கள்' நூலில் இடம்பெற்ற 'இரும்பை எலி தின்றது' என்ற கதை

'என்றுமொரு பட்டணத்திற் செட்டி மார்கள்
இருவரவர் சிநேகமாய் இருக்கும் நாளில்
ஒன்றுதுலாம் ஆயிரமாம் இரும்பு கொண்டே
ஒருவணிகன் வசத்தொருவன் வைத்துப் போய்நாள்
சென்றுவந்தான்; 'வருமுன்னே இரும்பை யெல்லாம்
தின்றுவிட்ட தெலி'என்றே செப்பக் கேட்டு,
'நன்றதற்கு வந்ததென்ன! போகு தெ'ன்று
நண்புகொண்டு முன்போல நண்ணி னானே. (202)

விருந்துசமைத் தார்கள்; எண்ணெய் தேய்த்துக் கொண்டு,
மிக்கஅவன் பிள்ளைதனக் கெண்ணெய் தேய்த்துப்
பொருந்துகுளந் தனில்மூழ்க என்றே அந்தப்
புதல்வனையும் தான்கூட்டிப் போனான்; அங்கே
திருந்தியதோர் இடத்தொளித்து வைத்து மூழ்கித்
திரும்பிவந்தான்; 'பிள்ளையெங்கே?' என்றான்; 'பிள்ளை
பருந்தெடுத்துப் போச்சுதெ' ன்றான்; சண்டை யாகிப்
பட்டணத்து வழக்கர்முன்னே பகர்ந்தான் ஈன்றோன். (203)

'பருந்துபிள்ளை தனையெடுத்துப் போமோ? என்ன
பரிகாசம்?' என்றுவழக் காளர் சொல்ல,
'இரும்புதுலாம் ஆயிரத்தைக் குறைவை யாமல்
எலிதின்றால், பிள்ளைபருந் தெடாதோ?' என்ன
'கரும்பொன்ஆ னதைமுழுதும் கொடுத்தா யாகில்
கடுகஅவன் உன்பிள்ளை கொடுப்பான்', என்றார்;
இரு புவிலை குறைந்ததனால் ஆஸ்தி விற்றே
இனியபெண்டிர் பிள்ளையும்விற் றிழந்து போனான். (204)

'செழியதரையன் பஞ்சதந்திரத்'தில் இடம்பெற்றுள்ள, இதே கதையைக் கூறும் பாடல்கள்:

## '18. எலி இரும்பைத் தின்றது என்ற கதை'

தொக்கதுஓர் ஆயிரத் துலாம்இ ரும்பினைப்
புக்குஎலி தின்றுதான் போனது என்றிடில்
வைக்கும்ஓர் பிள்ளையை வன்ப ருந்துகொண்டு
அக்கணத்து ஏகுதல் அரியது அன்றரோ. (289)

கழறும்அக் கதைஏது என்னில்
கனசதா நிருதம் நாம
எழில்நகர் தன்னில் தக்க
விருபவன்என் றிடும்இ யற்பேர்
தழுவிய வணிகன் வாழத்
தனமது தேட வேண்டி
வழுஇல்ஓர் நண்பன் தன்னை
வரவழைத்(து) இனிது கூறி (290)

ஆயிரம் துலாம்இ ரும்பை
அமைத்துவைத்(து) அயல்தே [யத்துப்]
போயினான்; அவ்வி டத்தே
பொக்கண மதுகிட் டாமல்
ஓய்வொடு மீண்டு, "நண்பா
உன்கண்வைத் திடும்இ ரும்பை
ஏயநீ கொடுவா" என்றான்;
"எலிஅதைத் தின்றது" என்றான். (291)

அவ்வுரை கேட்ட பின்றை,
"அதிசயம் இது" என்(று) எண்ணி,
வெவ்விய உத்தி ஒன்று
மிகநினைந்(து), அவன்தன் சேய்க்குத்
தைவரும் எண்ணெய் இட்டுத்
தடத்தினுக்(கு) எடுத்துப் போகிச்
செவ்விதின் ஒருபால் வைத்து
மீண்டுஅவன் இல்கண் சேர்ந்தான். (292)

"மன்னுசேய் எங்கே?" என்ன,
அவன் "பருந்(து) எடுத்துப் போயிற்(று)"
என்னலும், அரசன் பால்போய்,
"எனதுசேய் தன்னைக் கொன்றான்
முன்னி" என் றிடுதல் கேட்டு
"மொழி,பருந்து எடுக்கு மோசேய்
தன்னை" என்(று) உரைப்ப, "ஈது
தான்அதி சயம்அன்(று)" என்று (293)

அறமுடை வணிகன் ஆனோன்,
"ஆயிரம் துலாம்இ ரும்பை
வறிதுஎலி தின்றால், அன்னோன்
மைந்தனும் அவ்வா(று)" என்றான்,
சிறுநகை கொண்டு இரும்பைச்
சீர்இறை கொடுப்பித் தான்; பின்
குறியதுஓர் மகவை யும்தான்
கொண்டுவந்(து) இருத்தி னானால். (294)

இருவரும் முன்பு போல
இயைபுற நடந்து கொண்டார்;
துரிசுஅறும் இந்தக் காதை
துலாயோகத்(து) என்று சொன்னேன்.
தரையில்ஊண் அருந்தி வாழும்
தமனகச் சம்பு வேஉன்
கருதரும் கிழமை போலக்
கண்டிலேன் கண்டி லேனே. * (295)

பஞ்சதந்திரங்களில் இடம் பெற்ற இக் கதையில் வழக்கைத் தீர்த்து வைத்த நீதிபதிக்கும் அரசனுக்கும் முக்கியத்துவம் தரப்படவில்லை. மரியாதைராமன் கதைகளில் இக்கதை இடம்பெறும்பொழுது, அந்த நீதிபதியாக மரியாதைராமன் இடம்பெறுவதோடு தன் தீர்ப்பால் அவன் முக்கியத்துவமும் பெற்றுவிடுகின்றமையை நாம் காண முடிகின்றது.

* "செழியதரையன் பஞ்சதந்திரம்"; புலவர் ப. வெ. நாகராசன் அவர்களிடம (தமிழ்ப் பல்கலைக்கழகம்) உள்ள கையெழுத்துப் பிரதி.

## மரியாதைராமன் கதையும் விக்கிரமாதித்தன் கதையும்

வடமொழி, தமிழ் பஞ்சதந்திரக்கதைகளில் ஒன்று மரியாதைராமன் கதைகளில் ஒன்றாக இடம்பெற்றுள்ளதைப் போலவே வடமொழி தமிழ் விக்கிரமாதித்தன் கதைகளில் ஒன்றும் மரியாதைராமன் கதைகளில் ஒன்றாக இடம்பெற்றுள்ளது. முன்பு கூறியதொப்பவே விக்கிரமாதித்தன் கதைகளின் தாக்கத்தாலேயே மரியாதைராமன் கதைகளில் ஒன்றாக அக்கதை உருப் பெற்றுள்ளது என்று கூறலாம். அல்லது மரியாதைராமன் கதைகளிலும் விக்கிரமாதித்தன் கதைகளிலும் இக்கதை கதைக்குள் கதையாகவே இடம் பெற்றுள்ளது கொண்டு இரண்டுமே, பொதுவான வாய்மொழிக் கதை யொன்றினை எடுத்தாண்டுள்ளன என்று கூறலாம்.

மரியாதைராமன் கதைகளில் ஒன்று, 'நால்வர்க்குப் பொதுவிலிருந்த ரத்தினத்தை அவர்களில் ஒருவன் திருடியது' என்னும் கதையாகும். இக்கதை விக்கிரமாதித்தன் கதைகளில் இரண்டாம்படிக்குக் காவலாகிய மதனாபிஷேக வல்லிப் பதுமை சொல்லிய வேதாளக் கதைகளில் ஒன்றினை ஒத்ததாகும். கதைக்குள் கதையாக விக்கிரமாதித்தன் கதைகளில் இடம் பெறும் ஒப்புமை கொண்ட இக் கதையின் தலைப்பு 'மதனசேனையின் கதை' என்பதாகும்.

வேதாளம், விக்கிரமாதித்தனைக் கேள்வி கேட்க இக்கதையைச் சொல்லியது. இக்கதை சிறு மாறுதல்களுடன் மரியாதைராமன் கதைகளில் இடம்பெற்றுள்ளது. மரியாதைராமன், சகோதரர் நால்வரில் திருடனைக் கண்டுபிடிக்க அவர்களுக்கு இக் கதையைச் சொல்லிக் கதையில் வருபவரில் யார் சிறந்தவன் என்று, வேதாளம் விக்கிரமாதித்தனிடம் கேட்பது போலவே கேட்கிறான். கதையில் வரும் திருடனே சிறந்தவன் என்று சொல்லிய விக்கிரமாதித்தன் அங்குச் சரியான பதில் கூறியவனாக ஆகின்றான். இங்கோ 'திருடனே சிறந்தவன்' என்று கூறிய ஒரு சகோதரன் குற்றவாளி என்று பிடிபடுகிறான். (பதிப்புகளுக்கேற்ப இக்கதையில் சிறுசிறு மாறுதல்கள் காணப்படுகின்றன).

## ஆராயப் புகுவார்க்கு :

மரியாதைராமன் கதைப்பதிப்புகளை ஆராயப் புகுவார்க்குப் பல்வேறு நோக்குகளில் ஆராய வாய்ப்புகள் உள்ளன. இக்கதைகளை, பதிப்புக்கேற்ப வேறுபடும் கதைப் பகுதிகளைச் சமூகவியல் நோக்கிலும் அடிக்கருத்தியற்

கோட்பாட்டு நோக்கிலும் ஆராயலாம். பதிப்புகளை ஒப்பிட்டு வணிக நிறுவனங்களின் பதிப்புகளின் தன்மைகளை—வணிக நோக்குக்கேற்பக் கால மாறுதலுக்கேற்பக் கதைகள் பெறும் மாறுதல்களை ஆராயலாம். வாய்மொழிக் கதைகள் என்ற நோக்கிலும் இவற்றை ஆராயலாம்.

அச்சில் உள்ள மரியாதைராமன் கதைகளையும், தொலைக்காட்சித் தொடராக ஒளிபரப்பான நிகழ்ச்சிக்குப் பயன்படுத்தப்பெற்ற கதை-வசனப் பிரதியையும் ஒப்புநோக்கி ஆராயலாம். இவ்வாறு ஒப்புநோக்கி ஆராய்தல் மக்கள் தொடர்பு சாதனமான தொலைக்காட்சிக்கேற்ப—எல்லா வயதினரும் காணுதற்கேற்ப இக்கதைகள் பெற்றுள்ள மாற்றங்களை ஆராய்வதாக அமையும்.

காலத்தால் முந்தைய மரியாதைராமன் கதைப்பதிப்பு நூல்கள் மற்றும் நமது சுவடிப்பதிப்பு நூலின் துணைகொண்டு இக்கதைகளின் நடையமைதியை ஆராய்தல் 19ஆம் நூற்றாண்டுத் தமிழ் உரைநடை பற்றிய ஆய்வாகவும் மொழியியல் நோக்கிலும் அமையும்.

சிந்தனைக்கு:

மக்கள் தொடர்பு சாதனங்களான நூல் வடிவிலும் திரைப்பட வடிவிலும் தெனாலிராமன் கதைகள் தெலுங்கிலும் தமிழிலும் வெளிவந்துள்ளன. மரியாதைராமன் கதைகள் தமிழில் மட்டுமே நூல்வடிவிலும் தொலைக் காட்சித் தொடர் வடிவிலும் வெளிவந்திருப்பதை அறியமுடிகின்றது.

தெனாலிராமனைப் போல இந்நாட்டில் வாழ்ந்து மறைந்த மனித ராக மரியாதைராமனைக் கருத முடியவில்லை. பெரும்பாலும் கற்பனைப் பாத்திரமாகவே இருக்கக்கூடும்.

தெனாலிராமன் கதைகளுக்கு நிகராகத் தமிழகச் சூழலில் கதைகள் புனையப்பெறவேண்டும் என்ற நோக்கில் மரியாதைராமன் கதைகள் எழுதப் பெற்றவையா — உருவாக்கப்பெற்றவையா? இரண்டில் எது முந்தையது? என்பனவ எண்ணிப் பார்க்கப்பெற வேண்டும்.

தெனாலிராமன் கதைகள் தமிழில் பரவியிருப்பதுபோல மரியாதை ராமன் கதைகள் தெலுங்கிலோ கன்னடத்திலோ பரவியுள்ளனவா? பரவி யிருக்கவில்லையேல் அதற்கான காரணங்கள் (தெனாலிராமன் கதைகள் இங்குப் பரவியமைக்கு விஜயநகரப் பேரரசின் ஆட்சி முதலியன காரணமா கும்) காணப்பெறவேண்டும்.

# மணித்வீபம்

**எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்,**
*மேநிலை ஸம்ஸ்கிருத பண்டிதர்.*

---

வழிபாட்டுச் சுதந்திரம் மிகுந்த இந்து மதத்தின் இதிஹாஸங்களும் — புராணங்களும்—ப்ரம்மன்—விஷ்ணு — ஈச்வரன்—கணபதி — முருகன்—சக்தி முதலானவர்களை வழிபடு தெய்வங்களாகக் கூறுவதுடன் அவர்களை வழி படும் முறைகளையும் வகுத்துக்கூறும். அதனை மேலோட்டமாகப் பார்க்கின் இந்து மதத்தில் கடவுளர் பலர் என்றும்—மனித சமூகத்தில் நிலவும் தந்தை— மகன்—சகோதரி மாமன் உறவு முறை போன்று கடவுளர்களிடையேயும் உறவுமுறை உண்டு என்றும் தோன்றக்கூடும். இந்து மதத்தின் சிறப்பிற்குச் சான்றாகவுள்ள புராண இதிஹாஸ மூல நூல்களை ஊன்றித் தொடர்ந்து படித்துணர்ந்தால் "ஒன்றே தெய்வம்" "ஒருவனே தேவன்" எனும் உண்மை புலனாகும்.

இவ்வுலகில் உள்ள எந்த ஒரு பொருளுமே, குறைந்த பட்சமாக இரண்டு தத்துவங்களுடன்தான் கூடியிருக்கிறது. மலரை எடுத்துக்கொண் டால் அதில் நிறம், மணம் முதலான தன்மைகளும் — நிறம், மணம் முதலான தன்மைகள் தங்கியுள்ள ஒரு (இன்னதென்று விளக்க—உணர இயலாத ஒரு) பொருளும் இருக்கின்றன. நீரை எடுத்துக்கொண்டால் அதில் குளிர்ச்சி சுவை, திரவத்தன்மையும் அதேபோன்று அத்தன்மைகளைப் பெற்றுள்ள ஒரு பொருளும் அடங்கி இருக்கின்றன. மலரில் உள்ள மணம் நீரில் இல்லை. தீயில் வெப்பம் வடிவம் எனும் தன்மைகளும் அவற்றிற்கு ஆதாரமான ஒரு பொருளும் (அது எது எவ்வகைப்பட்டது என்பது வெப்பத்திற்கும், ஒளிக்கும் மட்டும்தான் தெரியும்) அடங்கியுள்ளது. தீயில் சுவை இல்லை. காற்று- என்பது ஸ்பர்சமும் (தொடு உணர்வும்) அசைவுத் தன்மைகளும்—இத்தன்மைக ளைக் கொண்ட ஒரு பொருளும் இணைந்ததே. காற்றில் ஒளி தோற்றம் இல்லை. வானம் ஒலியெனும் தன்மையும் அது பற்றியுள்ள ஒரு பொருளும் சேர்ந்தது.

பஞ்ச பூதங்களான ப்ருதிவீ, (மண்) நீர், நெருப்பு, காற்று, வானம் இவற்றின் தோற்றம் பற்றி வேதங்கள் கூறுவதாவது :- வானத்திலிருந்து காற்றும், காற்றிலிருந்து தீயும், தீயினின்று நீரும், நீரினின்று ப்ருதிவீ (மண்)யும்

தோன்றின என்பதாம். ["आकाशात् वायुः, वायोः अग्निः, अग्नेः आपः, अद्भ्यः पृथिवी"] மண்ணிலிருந்து பின்னோக்கிப் பார்க்கின் மண்ணிலிருந்த மணம், அதன் காரணமான நீரில் இல்லை. நீரில் இருக்கும் சுவை அதன் காரணமான தீயில் இல்லை. தீயில் உள்ள வடிவம் அதன் காரணமான காற்றில் இல்லை. காற்றில் இருக்கும் (ஸ்பரிசம்) தொடு உணர்வு அதனைத் தோற்றுவித்த வானில் ஆகாயத்தில் [ஆகாயம் என்பது பொருள்களுக்கு நடுவில் இருக்கும் இடைவெளியே] இல்லை. இந்த வானமும் பிறபொருள்கள் போன்று தோன்றிய ஒரு பொருளே. வானத்தைத் தோற்றுவித்தது 'ஆத்மா' ["तस्मादात्मन आकाशः सम्भूतः । तैत्तिरीय उपनिषत्"] ஆகும். அதில் ஒலியும் இல்லை. இப்படி மண் முதல் வானம் ஈறாகவுள்ள பஞ்ச பூதங்களில் ஒன்றைவிட மற்றது சூக்ஷ்மமாகி நிற்கின்றன.

பஞ்ச பூதங்களும் அவற்றின் தனித்தன்மைகளுடன் விளங்குவது போன்று 'ஆத்மா'வும் ஒரு தனித்தன்மையுடன் இலங்கவே செய்கிறது. தர்க்க சாஸ்திரம் - "ஞானம் = அறிவு எனும் தன்மைக்கு ஆதாரமாகவுள்ளது ஆத்மா" என்று கூறும். அத்வைதம் ஞானமே ஆத்மா என்று கூறும். இவ்வாறு எந்த ஒரு பொருளும் ஒரு தர்மம்—குணம்—தன்மை—அவை தங்கியுள்ள ஒன்று என்பதாகவே (இரு தத்துவங்களுடன் கூடியதாகவே) இருக்கின்றது. இது எதனால்? இந்த பேப்பரில் உள்ள கருப்புக்கோடு பேப்பரில் இருக்கிறது போல் வெண்மை நிறமும் 'பேப்பர்' என்று நாம் வழங்கும் ஒரு பொருளில் தான் இருக்கிறது. வெண்மை நிறம் எதில் தங்கி நிற்கிறது என்பதைக் கூறுவது நமக்கு இயலாததாகிறது. வெண்மை தனியாகவும் அது தங்கி நிற்கும் பொருள் தனியாகவும் இருக்கமுடியாது. ஆனால் அவை இரண்டும் வெவ்வேறுதான், இவ்விதமே பஞ்சபூதங்களையும் தோற்றுவித்த 'ஆத்மா' புருஷன், பிரம்மம், காரணப்ரம்மம் என்றெல்லாம் வழங்கப்படுகிறது. அதனுடன் பிரிக்க இயலாதவாறு நிற்கும் ஒரு தன்மையே (அல்லது பல தன்மைகளே) சக்தி மாயை, ப்ரக்ருதி என்று வழங்கப்படுகிறது.

இந்த ஆத்மா தன்னகத்தே கொண்டுள்ள சக்தியின் துணையின்றி பிறவற்றைத்தோற்றுவிக்க இயலாது. ஆத்மாவின் தன்மைகளாக ஸத்வம், ரஜஸ், தமஸ் எனும் முக்குணங்களும் ஞானம், இச்சா, கிரியா எனும் மூன்று சக்திகளும் கூறப்படும். இவற்றின் துணையின்றி ஆத்மா - சிவம் செயல்பட முடியாது. சக்தியில்லையேல் சிவம் சவமாகும் ("शिवोऽपि शवतां याति कुण्डलिन्या विवर्जितः । தேவீபாகவதம்) என்று இதனால்தான் கூறப்படுகிறது.

நம் புராண நூல்களில் இதே 'ஆத்மா' பரம்பொருள், பரவஸ்து, யஜமானன் என்றும் வழங்கப்படுவதுபோல் பரசிவம், காமசிவம், காமேச்வரன் என்றும் வழங்கப்பெறுகிறது. அந்த ஆத்மாவுடன் இணைந்துள்ள தன்மை

களும் சக்தி, பராசக்தி, மூலப்ரக்ருதி, காமேச்வரி, லலிதா என்று பல பெயர்களால் வழங்கப்பெறுகிறது.

பரசிவம் தோற்றுவித்த பிரம்மன், விஷ்ணு, ருத்ரன், இந்திரன், அக்னி முதலான கார்யப்ரம்மங்கள் சரஸ்வதி, லக்ஷ்மீ, பார்வதி, இந்திராணி, ஸ்வாஹா/ஸ்வதா எனும் சக்திகளுடனேயே விளங்குகிறார்கள். சரஸ்வதியின்றி ப்ரம்மனோ லக்ஷ்மீயின்றி திருமாலோ பார்வதியின்றி சிவபெருமானோ ஏதும் செய்வதற்கில்லை, இயங்கவே இயலாது.

இந்த சிவ-சக்தித் தத்துவத்தை உணர்ந்த முற்கால ஞானிகளும், கவிகளும் பிறருக்குப் புரியவைப்பதற்கென கற்பனையான முறையை மேற்கொண்டனர். மரத்தை - கொழுக்கொம்பினை நாடி நிற்கும் கொடியையும், ஆண்மகனின் துணை நாடிடும் பெண்மணையும் மனதில்கொண்டு, காரண-காரிய பிரம்மங்களை ஆணாகவும், அவற்றுடன் இணைபிரியாத சக்திகளை பெண்ணாகவும் உருவகப்படுத்தினர். உண்மையில் ஆத்மா (கடவுள்) ஆணுமல்ல. அதன் சக்தி பெண்ணுமல்ல, அது தியான வழி முறைக்கு உதவும் முகமாகக் கற்பனையாக அமைக்கப்பட்டதே.

இப்படி எல்லாமாக, எங்கும் எப்போதும் நிறைந்து நிற்கும் பரசிவமும் (காமேச்வரனும்) பராசக்தியும் (காமேச்வரியும்) பிறர் எளிதில் நெருங்க இயலாதவாறு தனித்து இருப்பதற்கென்று (சிவபெருமான் - பார்வதி—கைலாசம், திருமால்-லக்ஷ்மீ—வைகுண்டம், ப்ரம்மன்-சரஸ்வதி—சத்யலோகம், என்பது போன்று) அமைக்கப்பட்ட இடம்தான் சிந்தாமணித்வீபம் '**மணித்வீபம்**' எனப்படுகிறது.

இதுபற்றி பிரம்மாண்டபுராணத்தின் பிற்பகுதியில் உள்ள **லலிதா உபாக்யானம்** எனும் பகுதியில் விச்வகர்மாவைக்கொண்டு பிரம்மதேவனால் அமைக்கப்பட்டதே ஸ்ரீநகரம்-காமேச்வரி காமேச்வரர்களின் பிரேத்யேக நகரம் என்று கூறப்பட்டுள்ளது. எனினும் **சிவரஹஸ்யம** இரண்டாவது அம்சத்தில் இந்த மணித்வீபம் - ஸ்ரீநகரம் அமைக்கப்பட்டது பற்றி வேறு விதமாகக் கூறப்பட்டுள்ளது என்பதால் அதனையனுசரித்துக் கூறுவோம்.

பரசக்தி - பரசிவத்தை விட்டு விலகி பெண்ணுருவுடன் ஜயந்தி முதலான தோழியருடன் பல்லாண்டுகள் கடும் தவமியற்றியது. சக்தியின்றி தனித்திருக்கவியலாத சிவம் வேற்றுருவில் சக்தியை நாடித் தவமியற்றும் நோக்கம் பற்றி வினவியது.

'விசித்ர சக்திகொண்ட பகவானே ! இணையற்ற பேரழகு வாய்ந்ததும், பசி, தாகம், களைப்பு, மூப்பு ஏதும் அணுகாததும் பேரானந்தமளிப்பதாயும் உள்ள ஓர் தனியிடம் எனக்கென்று அமைத்துக்கொடுக்க பரசிவத்தினால் மட்டுமே இயலும் என்பதால் பரசிவத்தைக் குறித்துத்தவம் இயற்றுவதாகக் கூறினாள். நீ மனம் வைத்தால் நடவாதது ஏது என்று வேடமணிந்த பரசிவம் கேட்டதும் பரசிவத்தின் துணையயின்றி நான் செய்வது இயலாது எனக்கூறவே, பரசிவம் சுயவடிவுடன் தோன்றியது. தம்மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டு சற்று நேரம் அமைதியில் ஆழ்த்தது.

திடீரென்று அமுதக்கடலின் நடுவில் கோடி சூரியர்களின் ஒளிக் கொப்பாக ஆயிரம் கோடி மின்னல்களின் ஒளிக்கொப்பாக 14 உலகங்களையும் கண்கூசச் செய்யும் பேரொளி ஒன்று தோன்றியது.

विचित्रशक्ते भगवन् त्वया मे स्थानमुत्तमम् ।
सुन्दरात्सुन्दरं शम्भो चानन्दामृतसागरम् ॥
न क्षुत्पिपासे न ग्लानिः, न तृष्णा न जरादिकम् ।
सृज विश्वेश दयया ममैवापारकौतुकम् ॥
लोकोत्तरं महादेव विहारं चावयोः सदा ।
सृजैवं मनसा देव मत्प्रियार्थं महेश्वर ।
इति देव्या महादेवः प्रार्थितः स तदा मुदा ।
जातहर्षः स्वशीर्षं तां 'ओं' इत्यान्दोलयन्मुदा ॥
क्षणं दध्यौ महादेवः लीलासृष्टिप्रवर्तकः ।
तत्क्षणाद्भास्वरं तेजः समुत्तस्थौ सुधाम्बुधेः ॥
कोटिभास्करसङ्काशं पार्वणेन्दुशताधिकम् ।
विद्युत्कोटिप्रतीकाशं इन्द्रचापायुतोत्तरम् ॥

சிவரஹஸ்யம் - 2வது அம்சம் - அத். 6,

யாருமே எதிர்பாராத சமயத்தில் திடீரென்று எழுந்த பேரொளியால் திருமால், பிரம்மன், சிவபெருமான், மற்றும் தேவரிஷிகள், யக்ஷ கந்தர்வ வித்யாதர லோகபாலர்கள் அனைவரும் வியந்தனர், பயந்தனர். வேதவாக்யங் களால் ஒருமித்து பரசிவத்தைத் துதித்தனர். பரசிவமும் பராசக்தியுடன் அவர்கள் முன் தோன்றி, அப்பேரொளிக்குக் காரணம்பற்றி ஏதும் கூறாமல், "நானிருக்க பயமேன்" அனைவரும் தத்தம் தொழில்களை மேற்கொள்ளுங்கள் என அபயமளித்து விடைகொடுத்தனுப்பியது.

"तुष्टोऽहं भवतां स्तुत्या सुरेशा विष्णुपूर्वकाः ।
भवतां भयजालानि नाशयामि क्षणात्सुराः ॥
यात स्थानानि सदये मयि तिष्ठति शङ्करे ।
विधे सृज जगज्जालं सदेवासुरमानुषम् ॥
विष्णो पालयदेवांस्त्वं दैत्येभ्यः सर्वदा हरे ।
संहरान्ते जगज्जालं रुद्र शूलाग्रधारया ॥

சிவரஹஸ்யம்-2வது அம்சம்-அத்யாயம் 11

படைப்புக்கடவுளான ப்ரம்மதேவ, உலகங்களைப் படைத்திடுக. ஹே திருமாலே. நல்லன செய்வோரைக் காத்திடுக. ஹே ருத்ர, (சிவபெருமானே) சூலத்தின் கூரிய நுனியால் உலகினைக் கற்ப காலத்தில் அழித்திடுவீர் என்று கூறி வழியனுப்பியது.

விஷ்ணுப்ரம்ம ருத்ரர்களும் தேவர்களும் மற்றோரும் சென்றதும் பரசிவம் எனப்படும் காமேச்வரன் பராசக்தியுடன் அமிருதக் கடலின் இடையே தோன்றிய தீவிற்குச் [ த்வீபம் (த்வி — ஈப) இருபுறமும் நீர் ஓட்டம் உள்ள பகுதி ] சென்று பராசக்தியினை நோக்கிக் கூறினார்.

தேவி, நவரத்ன மணல் நிறைந்த இத்தீவின் பேரொளியால் சூரியனும் சந்திரனும் ஒளியிழந்து காணகின்றனர். அதோபார், ஓரிடத்தில் பவழ ஒளியும், மற்றோரிடம் மரகதப் பச்சை ஒளியும், பிரிதோரிடம் நண்பகல் சூரியனின் ஒளியும் வேறோரிடத்தில் மாலை நேரத்தின் செவ்வொளியும் காணப்படுகிறது. எனக்கூறி தீவின் உட்பகுதிக்கு அழைத்துச்சென்று அங்குள்ள மதில் சுவர்களை ஒட்டியுள்ள தோட்டங்களையும் அதில் உள்ள தாவரங்கள் விலங்கினங்களையும் அப்பால் உள்ள ப்ராகாரங்களையும் அங்குள்ளோரையும் காண்பித்தார்.

மதில் சுவரை ஒட்டியுள்ள தோட்டங்களில் வசந்தம், க்ரீஷ்மம், வருஷா, சரத், ஹேமந்த, சிசிர ருதுக்களில் மலர்கள் - பழங்கள் தரும் தாவரங்களையும் அவற்றைப் பாதுகாக்கும் ருது தேவதைகளையும் அப்பால் மாணிக்கம், முத்து, பவழம், மரகதம், புஷ்பராகம், வைரம், நீலம், கோமேதகம், வைடூர்யம் எனப்படும் ஒன்பது ரத்னங்களால் அமைந்த மதில்களையும் அவற்றை யொட்டிய பிராகாரங்களையும் காண்பித்து அப்பால் மதில்சுவரை ஒட்டிய அகிழ் எனும்படியான வாபியையும், தாமரை ஓடையையும் கடந்து ஒன்பது ரத்னங்களாலும் சிந்தாமணியெனும் ரத்ன வகைக் கல்லால் அமைந்த மாளிகையையும் காண்பித்துக் கூறியது.

தேவி, இங்குள்ள பிராகாரங்களில் உனது பரிவார தேவதைகள் அனைவரும் உனது ஆணையை நிறைவேற்றக் காத்திருப்பவர்கள். இந்தக் கோட்டைகளைக் கடந்து வருவது கடினம். அப்பால் உள்ள அகழியில் தாரா தேவி அழகான படகில் அமர்ந்து அதனைக் காத்து வருகிறாள். அவள் அனுமதி பெறாமல் அதனைக் கடந்து வர இயலாது. அப்பால் உள்ள **மஹா பத்மாடவீ** ஓடையை ரதியுடன் மன்மதனன் காவல் காத்து வருகிறான். அவனைக் கடந்து வருவதும் மிகமிகக் கடினம். இந்த மாளிகையின் நடு மண்டபத்தில் உனக்கென ப்ரம்மா, விஷ்ணு, ருத்ரன், ஈச்வரன் எனும் நான்கு கால்களும் சதாசிவம் எனப்படும் பலகையும் அமைந்த ஒரு மஞ்சத்தையும் அமைத்திருக்கிறேன். நீ அமர்வாயாக.

ब्रह्मविष्णुमहेशानईश्वरा मञ्चपादुकाः ।
सदाशिवोऽस्य फलकः सोपधानः ... ।
निषण्णा त्वं घनानन्दरसामोदिवरादरा ।
अधिशेष्व महादेवि दिव्यचिन्तामणीगृहे ।

சிவரஹஸ்யம் - 2வது அம்சம் - அத்யாயம் 15.

(இங்கு **चिन्तामणिगृहे** என்று இருப்பதுதான் சரி. **चिन्तामणीगृहे** என்ற சொல்லமைப்பு 'இலக்கண விதிவிலக்கு' முறையயனுசரித்து ஏற்கப்படத்தக்கது.)

இவ்வாறு இப்பிரபஞ்சத்தின் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளுதல் எனும் (பஞ்ச) ஐவகைச்செயல்களை நிகழ்த்தும் பிரம்மா, விஷ்ணு, ருத்ரன், ஈச்வரன், சதாசிவன் எனும் கார்ய ப்ரம்மங்களை அவரவர் தொழிலுக்கு ஏற்ற சக்திகளுடன் தோற்றுவித்த காமேச்வரன் எனும் பெயர்கொண்ட பரசிவன் தன்னுடன் இணைபிரியாமல் நிற்கும் லலிதா - பராசக்தி மஹாத்ரிபுரஸுந்தரி என்ற பல பெயர்களையுடைய காமேச்வரி யுடன் இந்த சிந்தாமணி கிருஹத்தில் விளங்குகிறது.

இந்தச் சிவசக்தி சமான நிலை நமக்கு இஹ-பர சுகங்களை அருளுமாக.

இப்படி உருவகப்படுத்திக் கூறப்பட்ட சிந்தாமணி த்வீபம், புறத்தில் எங்கும் இல்லை. நம் உடலின் உள்ளேயே இருப்பதுடன், இதனைத் தகுந்த நல்ல குருநாதர் மூலமாக உபதேசிக்கப்பட்ட சாதகர்கள் யோக தியான வழியில் (சமயாசார முறையில்) அனுபவித்துணரலாம் என்பதனை சாக்த தந்திர நூல்கள் அறிவுறுத்துகின்றன.

# ஸரஸ்வதி மஹால் நூலகத்தின் ஸம்ஸ்க்ருதச் சுவடித் தொகுதிகளின் வரலாறு

(HISTORY OF THE SANSKRIT MANUSCRIPTS COLLECTION IN THE SARASVATI MAHAL LIBRARY)

வேதாந்த சிரோமணி & தமிழ் வித்வான் **என். ஸ்ரீனிவாஸன்,**
ஸம்ஸ்க்ருத பண்டிதர்.

---

ஸரஸ்வதி மஹால் நூலகத்தின் ஸம்ஸ்கிருதப் பிரிவில் சுமார் 40,000 சுவடி நூல்கள் (தலைப்புகள்) உள்ளன. இவை வேதம், வேதாங்கம், தர்ம சூத்திரங்கள், பிரயோகம், காவியம், நாடகம், அலங்காரம் போன்று 54 வகைகளாகப் பிரிக்கப்பெற்று விளங்குகின்றன. இந்தச் சுவடி நூல்களுக்கு 'சுவடி விளக்க நூற்பட்டியல்' (Descriptive Catalogue) 23 தொகுதிகளாக வெளிவந்துள்ளன.

இப் பிரிவில் உள்ள சுவடிகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். மன்னர்களின் காலத்தில் சேர்க்கப்பெற்ற சுவடிகள் என்றும், அவர்களுக்குப் பிற்காலத்தில் சேர்க்கப் பெற்ற (collection) சுவடிகள் என்றும் வகைப் படுத்தலாம். இதனை இன்னும் தெளிவாகக் கூறவேண்டுமெனில் டாக்டர் பர்னல் கேட்டலாக்கிற்கு 'முன்' என்றும் 'பின்' என்றும் கூறலாம். டாக்டர் பர்னல் அவர்கள் ஸம்ஸ்கிருத அறிஞர். ஜெர்மானிய நாட்டினர். இவர் தஞ்சை மாவட்ட ஆட்சியாளராக நியமிக்கப் பெற்றவர். இவரது தலைமையின் கீழ் பல பண்டிதர்கள் பணியாற்றி 54 வகை தலைப்புக்களில் சுவடிகளின் செய்திகளைக்கொண்டு அவற்றை வகைப்படுத்தி (Classified Index) கேட்டலாக் வெளியிட்டார். இக் கேட்டலாக் 1879, 1880 ஆம் ஆண்டுகளில் லண்டனிலிருந்து வெளியிடப்பட்டது.

இந்தக் கேட்டலாக்கிற்கு முன்பாகவே இந்நூலகத்தில் கேட்டலாக்குகள் பல உண்டு. இரண்டாம் சரபோஜி மன்னர் முடிசூடிக்கொண்டதும் இந்த நூலகத்தில் உள்ள சுவடிகளைத் தணிக்கை செய்து 'முதன் முதலாக அனைத்து ஓலைச்சுவடிகளுக்கு கி.பி. 1801லும், காகிதச்சுவடிகளுக்கு 1807லும்

கேட்டலாக் தயாரிக்கப்பெற்றுள்ளன. இதனை 'வரகப்பையர்' என்பவர் தலைமையில் ஒரு குழு தயாரித்து உள்ளது. * இக்குழுவில் மானம்பட், கங்காதர பட், சதாசிவபட் ஆகியோர் இருந்தனர். இக்குழுவின் கீழ் பல பண்டிதர்கள் பணிபுரிந்து கேட்டலாக்கை உருவாக்கியுள்ளனர். இதனைக் கீழே காணும் ஆவணச் சான்றின் மூலம் அறிய முடிகின்றது.

பின்னர், இவருடைய மகன் (Last) சிவாஜி (1832—1855) அவர்களின் காலத்தில் 1840ல் ஒரு கேட்டலாக்கும், ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் இந் நூலகத்தின் சுவடிகளைப் பற்றிய பட்டியல் (Index) 1857லும் தயாரிக்கப் பட்டுள்ளன. இந்த பட்டியல் அச்சிடப்பட்டுமிருக்கிறது. இதற்குப் பின்னர் தோன்றியதுதான் டாக்டர் பர்னல் அவர்களின் கேட்டலாக். இவர் குறிப் பிட்டுள்ள சுவடிகள் மட்டுமே அரசர்களால் தொகுக்கப் பெற்றவைகளாகும்.

இதற்குப் பிறகு 1918ஆம் ஆண்டு இந்த நூலகம் பொது நூலகமாக அறிவிக்கப்பெற்று ஒரு ஆட்சிக் குழுவினரால் நிர்வாகம் செய்யப் பெற்று வந்தது. இந்த நாட்களில் சேகரித்த சுவடிகளின் தொகுதிகளில் பல சிறந்தவை களாகவும், தனித்தன்மை கொண்டவைகளாகவும் விளங்குகின்றன. மேலும் இத்தகைய அரிய கையெழுத்துச் (காகிதம் – ஓலை) சுவடிகளை அளித்தவர் களின் பெயர்களும், இவற்றைத் தொகுத்துப் பயன்படுத்திய அறிஞர்களின் பெயர்களும், இந்த நூலகத்தின் பெயருடன் இணைந்தே நின்று அழியாப் புகழுடன் விளங்கவேண்டும் என்று இந்நூலக ஆட்சிக்குழுவினர் விரும்பினர். இதனால் இந்நூலகத்திற்குச் சுவடிகளைக் கொடுத்தவர்களின் பெயரிலேயே அவர்களது சுவடிகள் தனித்தனியாகத் தொகுத்து வைத்து பாதுகாக்கப் பெற்றுவருகின்றன. இத்தகைய தொகுதிகளை (collections) அளித்தவர்கள் சுமார் 150 பேர்களுக்குமேல் உள்ளனர். இந்த தொகுதிகளில் சில தொகுதிகள், மிகச் சிறந்த அறிஞர்களால் தொகுக்கப்பெற்றவை. இவை வரலாற்றுத் தொடர்புடையவை. இவற்றில் 'பல அரிய சுவடி'களாகும் இத்தகைய சிறந்த சில தொகுதிகளைப்பற்றிய வரலாற்றுக் குறிப்புகளை மட்டும் இக் கட்டுரையில் மிகச் சுருக்கமாகக் காணலாம்.

---

* शरफोजि महाराजुवारिकि पट्टमय्येटन्डुकुमुनुपु ई सरस्वती महाल् पुस्तकालकु विवरमैन जाप्ता लेदु । 1720 कालयुक्ती संवत्सरं शरफोजी महाराजुवारु पट्टमय्यी मन्यं भट्लु यने गङ्गाधरभट्लु, सदाशिवभट्लुकु दानाधिकारं इच्चिनपिमट ई सरस्वतीमहाल् कागिताल पुस्तकालु, ताट्याकुलपुस्तकालकुन्नु तगुमैन वाल्लंनु नियमिञ्चि पेरिशीलुनि (परिशीलिञ्चिन) जाप्ता शालिवाहन शक सं 1722 इङ्गिलीषुसंवत्सरमुलु 1801 जाप्ता परिष्कारमुगागलगदैशिनदि रौद्री नाम संवत्सरन् ॥

## 1. ஜம்புநாதபட்லாண்டகே தொகுதி (J. L. Collection)

தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூல்நிலையத்தின் சம்ஸ்கிருதப்பிரிவில் ஜே. எல். தொகுதி (J. L. Collcetions) எனப்படும் 'ஜம்புநாத பட்லாண்டகே தொகுதி' ஒன்று உள்ளது. இதில் காணப்படும் காகிதச் சுவடிகள் இவருடைய தந்தையான மானம்பட்டரின் 'விஜய விலாஸம்' என்ற பெயரில் விளங்கிய நூலகத்தின் ஒரு பகுதி. திரு. மானம்பட்டர் ருக்வேதம் கற்ற மராட்டிய அந்தண வகுப்பினர். இவருடைய மூன்று புதல்வர்களில் மூத்தமகனே ஜம்புநாதபட்லாண்டகே. இவர் இந்த நூலகத்திற்கு மதிப்பு மிக்க காகிதச்சுவடிகளின் தொகுப்பு ஒன்றை 8—1—1921ல் அளித்துள்ளார். இவர் கொடுத்துள்ள சுவடிகளில், **வேறு எந்த நூலகத்திலுமே இல்லாததும் இந்த நூலகத்தில் மட்டுமே கிடைக்கக் கூடியதுமான காகிதச்சுவடிகளும்** இதிலடங்கும்.

ருக்வேதம் கற்ற மானம் பட்டரிடம் தஞ்சை மராட்டிய மன்னர்களுக்கு மிகுந்த ஈடுபாடு உண்டென்று தெரிகிறது. மேலும் இவர் அரண்மனை புரோஹிதராகவும் இருந்தவர். சாஸ்திரக் கல்வியிலும், வேதத்திலும் வல்லவராக இருந்துள்ளார். இக்குடும்பத்தினருக்கு அரண்மனையுடன் இருந்த நெருக்கமான தொடர்பின் காரணமாக, அரண்மனையில் உருவான நூல்களும் காசி, மற்றும் வடநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் அரண்மனையின் சரஸ்வதி பண்டார் நூலகத்திற்காகவே (சரஸ்வதி பண்டார் - இதுவே நாளடைவில் சரஸ்வதி மகால் என வழங்கலாயிற்று) பிரதி செய்யப்பெற்ற ஏனைய நூல்களும் *இத் தொகுதியில் இருக்கின்றன. இதில் வேதம், வேத பாஷ்யங்கள், (ச்ரௌத) சூத்திரங்கள், காவியம், நாடகம் முதலிய நூல்கள் உள்ளன. இந்த நூலகத்திற்கு இவர் சுவடிகளைக் கொடுக்கும் முன்னரேயே இந்தச் சுவடிகளின் விவரங்கள் அடங்கிய கேட்டலாக்கை 1905ஆம் ஆண்டு 'சென்னை மாகாண அரசு வெளியிட்டுள்ளது'.

## 2. L. சேதுராம்ராவ் காகல்கர் தொகுதி (S. K. Collection)

திரு. சேதுராம் காகல்கர் அவர்கள் இற்றைக்குச் சுமார் 175 ஆண்டு களுக்கு முன் தஞ்சையில் வாழ்ந்தவர். இவருடைய முன்னோர்களும், இவருடைய சந்ததியினரும் சம்ஸ்கிருத மொழியில் சிறந்த புலமை வாய்ந்தவர்கள். குறிப்பாக வியாகரண (இலக்கணம்)த்தில் சிறந்த அறிஞர்கள்.

---

* This accounts for the existence in the collection of a large number of ancient manuscripts evidently copied in Northern India. The rest were transcribed by the members of the family, who appear to have been learned new. This is according to the present owner of the Library. (–Reports on Sanskrit MSS. of Southern India Vol. III Ed. E. Hultzsch. PP—2)

இந்தத் தொகுதியில் 163 காகிதச் சுவடிகள் உள்ளன. இவரது மரபினர் 6—6—1921ல் இந்த நூலகத்திற்கு சம்ஸ்கிருதம், மராட்டி ஆகிய மொழிகளிலுள்ள காகிதச் சுவடிகளை அன்பளிப்பாக அளித்துள்ளனர். சில சுவடிகள் இவரது கையெழுத்தில் உள்ளவையாகக் காணப்படுகின்றன.

## 3. பதங்க அவதூதர் தொகுதி (P. A. Collection)

தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவிடைமருதூரில் திரு. பதங்க அவதூதரின் மரபினர் வாழ்ந்தனர். மராட்டிய மன்னன் இரண்டாம் ஷஹஜியின் (கி. பி. 1684 – 1710) காலத்தில் திருவிடைமருதூரைச் சுற்றிலும் தஞ்சையின் அரசவைப் புலவர்களில் பலர் வாழ்ந்து வந்தனர். இத்தகைய புலவர் மரபில் திரு பதங்க அவதூதர் தோன்றியுள்ளார் என்று கருத இடமுள்ளது. இவர் மராட்டிய அந்தணர். இத்தொகுதியில் காணப்படும் சுவடிகள் இற்றைக்குச் சுமார் 200 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பெற்ற பழமை உடையவை.

இத் தொகுதியில் காணப்படும் காகிதச் சுவடிகளை திருமதி ஞானாம்பாபாயி அம்மாள் அவர்கள் இந்த நூலகத்திற்கு 9—12—1921ல் அன்பளிப்பாக அளித்துள்ளார். இத்தொகுதியில் சம்ஸ்கிருதச்சுவடிகள் 392ம், மராட்டிய மொழிச்சுவடிகள் 94ம் மொத்தம் 486 சுவடிகளை அளித்துள்ளார்கள். இதில் பக்தி, இலக்கியம், வேதாந்தம் மற்றும் சாஸ்திரங்களும் உள்ளன.

## 4. ஸ்ரீ கிருஷ்ணாஜி மேத்தா தொகுதி (K. M. Collection)

திரு. கிருஷ்ணாஜி மேத்தா தஞ்சை வெங்கடேசப்பெருமாள்கோவில் சந்நிதித் தெருவில் வாழ்ந்தவர். அரண்மனையைச் சார்ந்த 'முகாசா'வில் பணியாற்றிய குஜராத்திய அந்தணர். இவருடைய தந்தையார் **திரு. விஸ்வநாத மேத்தா** ஆந்திராவில் அரசாங்க உத்தியோகத்திலிருந்தவர் தெலுங்கு மொழியில் நல்ல புலமை பெற்றவர். இவர் ஸ்ரீவித்யா மார்க்கத்தில் பற்றுக் கொண்டு அதற்குரிய நூல்களில் நாட்டம் கொண்டவர். இதன் காரணமாக மந்திரம், தந்திரம், யந்திரம் ஆகிய மூன்று பிரிவுகளிலுமுள்ள பல குறிப்புகளைக் கொண்ட சுவடிகளைத் தொகுத்துள்ளார்.

இத்தொகுதியில் காணப்படும் சுவடிகள் பல்வேறு வகையான மந்திரப் பிரயோகங்களையும், தந்திர நூல்களில் காணப்படும் செய்திகளையும் கொண்டுள்ளன. முத்துக்களைக் கோத்தது போன்ற மிகத் தெளிவான தெலுங்கு மொழி எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ள காகிதச் சுவடிகள் 100

தலைப்புக்கள் கொண்டவை. இத்துடன் 5 ஓலைச்சுவடிகளையும் அளித்துள்ளார், திரு. மேத்தா அவர்கள். இவர் இச் சுவடிகளை 8—3—1924ஆம் ஆண்டு இந்த நூலகத்திற்கு அளித்துள்ளார்.

## 5. 'வேதமூர்த்தி' கோபாலகிருஷ்ணடவளேகர் (G. K. D. Collection)

இத் தொகுதியிலுள்ள சுவடிகள் அனைத்தும் காகிதச் சுவடிகள் திரு. கோபாலகிருஷ்ணடவளேகர் மராட்டிய அந்தணர் வகுப்பினர். வேதம் வல்ல அறிஞரின் மரபினர். ஆதலால் இத்தொகுதியில் விரதங்கள், ஸ்மார்த்த ப்ரயோகங்கள் பற்றிய சுவடிகளே அதிகமாகக் காணப்படுகின்றன. இவருடைய காகிதச் சுவடிகள் இந்நூலகத்திற்கு முறையே 1924 — 25ஆம் ஆண்டில் 298 சுவடிகளும், 1929—30ல் 50 சுவடிகளும், 1933—34ஆம் ஆண்டில் 330 சுவடிகளும் ஆக 678 சம்ஸ்கிருதச் சுவடிகளையும் மராத்திய மொழிச்சுவடிகள் 29ம் ஆக இந்நூலகத்தில் G. K. D. என்றஇந்தத் தொகுதியில் 707 சுவடிகள் பாதுகாக்கப்பெற்று வருகின்றன.

## சமர்த்த ராமதாஸரின் சம்பிரதாய மடங்கள் காத்தளித்த சுவடித்தொகுதிகள்

சத்ரபதி சிவாஜியின் சகோதரர் வெங்கோஜி என்னும் ஏகோஜி 1676ஆம் ஆண்டு தஞ்சையைக் கைப்பற்றி ஆட்சி செய்துகொண்டிருந்தார். அச் சமயம் சிவாஜி மன்னரின் குருவாக விளங்கிய சமர்த்த ராமதாஸர் சேது யாத்திரைக்குச் செல்லும் வழியில் தஞ்சைக்கு வந்தார். அவரை வரவேற்று உபசரித்த மன்னன் தனக்கும் குருவாக இருந்து அருள்புரியுமாறு ஸ்ரீ சமர்த்த ராமதாஸரிடம் வேண்டினார். அது கேட்ட ஸமர்த்தர் தமது சீடர்களை தஞ்சைக்கு அனுப்புவதாகவும், தாம் ஸதாராவில் வசிக்க விரும்புவதாகவும் கூறிச்சென்றார். அதன்படி ஸமர்த்த ராமதாஸரின் 13வது சீடரான சஹபூர்கர் பீமராஜ கோஸ்வாமிகள் தஞ்சையிலும், அவருடன் தஞ்சைக்கு வந்த அநந்த மௌனிகள் மன்னார்குடியிலும், ராகவஸ்வாமிகள் தஞ்சை மாரியம்மன் கோவில் அருகில் உள்ள கோனூரிலும் வந்து குடியேறி மடங்களை ஸ்தாபித்து ஸமர்த்த சம்பிரதாயங்களைத் தமிழகத்தில் பரப்பினர்.

இத்தகைய மடங்களில் மடாதிபதிகளாயிருந்தவர்கள் சம்ஸ்கிருத மொழியிலும், மராட்டிய மொழியிலும் புலமைமிக்கவர்களாயிருந்தனர். இதனால் ஏராளமான காகிதச் சுவடிகளை இத்தகைய மடங்களில் பாதுகாத்து வைத்தனர். ஒரு சிலர் புலமை மிக்க மராட்டியப் பாடல்களை இயற்றியும் மாதவஸ்வாமி. ராமபண்டிதர், மேருஸ்வாமிகள் போன்றவர்கள் சிறந்த மராத்திய இலக்கியங்களையும் படைத்துள்ளனர். இதனால் இத்தகைய மடங்

களில் பரம்பரைபரம்பரையாகச் சேகரித்து வைத்திருந்த காகிதச் சுவடிகளை பொதுமக்களும், அறிஞர்களும், அந்த அந்த மடத்தைச் சார்ந்தவர்களும் படித்துப் பயன்பெற்றனர். இந்நிலையில் தஞ்சையில் மன்னராட்சி கி. பி. 1855ஆம் ஆண்டுடன் முடிந்தது. இதனால் இத்தகைய மடங்களின் அரசியல் செல்வாக்கும் நிர்வாகமும் படிப்படியாக நலிவுற்றன. இம்மடங்களின் சந்ததியினர், வெவ்வேறு பணிகளைச் செய்ய தஞ்சையிலிருந்து வெளியேறத் தொடங்கினர். இதனால் இம் மடங்களில் சேகரித்து வைத்திருந்த சுவடிகள், படிப்போரின்றி தூசுபடிந்தும், செல்லரித்தும் சுமையாக இருந்தன. இதனைக் கண்ணுற்ற இம் மடத்தின் பின்வந்த சந்ததியினர் இச் சுவடிகள் அழிந்து போகாமல் இருக்கவும், அறிவாளிகளுக்கும், பொதுமக்களுக்கும் பயன்பட வேண்டும், என்ற நல்ல எண்ணத்துடன் ஊருணி நீரனையப் பயன் தரவல்ல இந்த சரஸ்வதி மகால் நூலகத்திற்கு ஏராளமான சுவடிகளை அன்பளிப்பாக அளித்துள்ளனர். இங்ஙனம் சமர்த்த ராமதாஸ ஸ்வாமிகளின் சம்பிரதாய மடங்கள் இந்த நூலகத்திற்கு அளித்த சுவடிகளின் தொகுதிகளையும், அதன் விபரங்களையும் இனி காண்போம் :—

## 6. தியாகராஜஸ்வாமி தொகுதி (T. S. Collection)

தியாகராஜ ஸ்வாமி தொகுதி என்ற பெயரில் ஒரு தொகுதி இருக்கிறது. இத் தொகுதியில் 37 சிறு சிறு மூட்டைகளாகக் கட்டப்பெற்று 1335 ஸம்ஸ்கிருத காகிதச் சுவடிகளும் 65 மராட்டி மொழிச் சுவடிகளும் ஆக 1400 — காகிதச் சுவடிகளையும் 28—3—1927ல் நூலகத்திற்கு அன்பளிப்பாக அளித்துள்ளனர். இந்தச் சுவடிகளை நூலகத்திற்கு அளித்தவர் திரு ஆத்மாராம் கோஸ்வாமி. இவர் சமர்த்தரின் சிஷ்ய பரம்பரையினர்.

சமர்த்த ராமதாஸரது சீடரான ஸ்ரீ பீமராஜ கோஸ்வாமிகள் ஸ்ரீஸம்பிரதாயங்களைப் பரப்ப தஞ்சையில் கி. பி. 1680ல் மடத்தை நிறுவினார். இவருக்குப்பின் இவருடைய சீடர்களான 1. அண்ணாஜிபாவா கோஸ்வாமி, 2. கோவிந்தபாள பாவா கோஸ்வாமி, 3. ஜோலிராம் பாவா கோஸ்வாமி ஆகியோர் தனித்தனியாகத் தஞ்சையில் மடத்தை நிறுவினர். இம்மடங்களில் ஹரிகதா காலக்ஷேபங்களை நிகழ்த்திப் பக்திப்ரவசனங்களைச் செய்தனர். இம்மடங்களின் மூலமே தஞ்சையில் 'ஹரிகதை' என்னும் கலை மலர்ச்சியடைந்தது.

இம் மடங்களில் தெற்குவீதி - தஞ்சையில் உள்ள அண்ணாஜி பாவா கோஸ்வாமிகளின் பரம்பரையில் 4வது பீடாதிபதியாக விளங்கிய ஸ்ரீ தியாகராஜ கோஸ்வாமிகளின் பெயரில் இவரது பேயரன் ஸ்ரீ ஆத்மாராம் கோஸ்வாமி அவர்கள் இந்நூலகத்திற்கு 1400 சுவடிகளை அளித்துள்ளார்.

இதில் மதிப்பு மிக்க காகிதச் சுவடிகள் சம்ஸ்கிருதம், மராட்டி ஆகிய மொழிகளில் உள்ளன. இம் மடத்தைச் சார்ந்தவர்கள் தஞ்சை மராட்டிய மன்னர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தமையால் அரண்மனையில் மலர்ந்த நூல்களும் இத் தொகுதியில் காணப்படுகின்றன. *

## 7. சுந்தரஸ்வாமி தொகுதி (Sundraswami Collection)

வடநாட்டிலிருந்து தஞ்சைக்குக் குடியேறிய பீமராஜ கோஸ்வாமிகளுடன் வந்த அநந்தமௌனிகள் என்பவர் மன்னார்குடியில் குடியேறி சமர்த்த சம்பிரதாயங்களைப் பரப்பினார் என்று முன்பு கண்டோம். அந்தப் பரம்பரையில் வந்தவர் சுந்தரஸ்வாமி. இவரது முன்னோர்களில் ஒருவரான சேதுபாவா ஸ்வாமிகள் என்பவர் மராட்டிய மன்னனான பிரதாப சிம்மனுக்கு (கி. பி. 1741—1764) ராஜகுருவாக விளங்கியவர். இவர் பெயரில் 'சேதுபாவா சத்திரம்' என்ற பெயரில் அறந்தாங்கிக்கு அருகில் ஒரு கிராமம் உள்ளது. ஸேது பாவாஸ்வாமிகளின் விருப்பத்தின்படி தஞ்சை மேலவீதியிலுள்ள ப்ரதாபவீரஹனுமார் ஆலயமும், கீழ ராஜவீதியில் ஒரு சமர்த்த ராமதாஸ் மடமும் கட்டுவித்தான் மன்னன் பிரதாபசிம்மன். இத்தகைய ராஜகுரு பரம்பரையில் தோன்றியவர் சுந்தரஸ்வாமி. இவர் தங்களது மடத்தைச் சார்ந்த சுவடிகளை இந்நூலகத்திற்கு 1943ஆம் ஆண்டு வழங்கியுள்ளார். இதில் சம்ஸ்கிருத மொழி காகிதச் சுவடிகளும் மராட்டிய மொழிக் காகிதச் சுவடிகளும் அடங்கும்.

## 8. ராம்பாவுஸ்வாமி தொகுதி (Rambavooswami Collection)

பீமராஜ கோஸ்வாமிகளின் முக்கிய சீடர்களில் ஒருவரான ஸ்ரீ கோவிந்த பாவா கோஸ்வாமிகளின் பரம்பரையைச் சேர்ந்தவர் ஸ்ரீ ராம்பாவுஸ்வாமி பரம்பரை மடாதிபதி. இவருடைய மூதாதயர்கள் சம்ஸ்கிருதம், மராட்டி மொழிகளில் புலமையுள்ளவர்கள். இந்நூலகத்தில் மராட்டி மொழிப் பிரிவின் சுவடி விவரப் பட்டியலி ( The Descriptive Catalogue of Marathi Manuscripts Vol. 1, 2, 3 )ன் பதிப்பாசிரியராக இவரது தந்தையார் T. B. ராமச்சந்திர கோஸ்வாமி அவர்கள் விளங்கியுள்ளார்கள். மராட்டி மொழியின் மோடி எழுத்து வல்லுனராக விளங்கிய

---

* The valuable collection of the late M. R Ry. Thyagaraja Goswamy of South Main Street, Thanjavur, which his grandson M. R. Ry. Atmaram Goswamy Presented to the Library in accordance with the wishes of his late father M. R. Ry. Raghupathy Goswamy. The collection contains Sanskrit Manuscripts and Books and also a few Mss. in Marathi.

—The Administrative committee Annual Report of this Library, 31st March-1927

ராம்பாவு ஸ்வாமி இந்நூலகத்தின் மோடி எழுத்துப் பதிவேடுகளில் (ஆவணங்களில்) சிலவற்றைத் தமிழாக்கமும் செய்துள்ளார். இவர் செய்த சில தமிழாக்கங்களையும் இணைத்து 'தமிழ் பல்கலைக் கழகம்' மோடிச் செய்திகளைப் பற்றிய நூல்களை வெளியிட்டுள்ளது எனில் மிகையில்லை.

திரு. ராம்பாவுஸ்வாமி அவர்கள் தங்களது மடத்திலிருந்த காகிதச் சுவடிகளை 1965ஆம் ஆண்டு இந்நூலகத்திற்கு (ஸம்ஸ்கிருதம், மராட்டி ஆகிய மொழிகளின் காகிதச் சுவடிகள்) அன்பளிப்பாக அளித்துள்ளார்.

## 9. தேவாஜிராவ் தொகுதி (Devaji Rao Collection)

தஞ்சாவூர் வடக்கு ராஜவீதியில் 'மோர்காம்கர்' சம்பிரதாயத்தின் ஒருமடம் இருக்கிறது. இந்த மடத்தை நிறுவியவர் ஸ்ரீ ராமச்சந்திர பாவா இவர் இரண்டாம் சரபோஜியின் மகன் சிவாஜி மன்னரின் காலத்தில் ராமேஸ்வர யாத்திரை செல்லும் வழியில் தஞ்சைக்குவந்தார். இவர் 'கீர்த்தன்' என்று அழைக்கப்படும் ஹரிகதையைச் சிறப்பாகச் செய்யும் கலைஞர். இனிய குரல் வளமும், மொழிப் புலமையும் பெற்றவர். இவருடைய நிகழ்ச்சியைக் கேட்ட சிவாஜி மன்னரும், ராணி காமாக்ஷி அம்பா பாயி சாஹேப் அவர்களும் இவரைத் தஞ்சையிலேயே இருக்கச் செய்து ஒரு மடமும் கட்டிக் கொடுத்தனர். இவர் வாழ்ந்த இடத்திற்கு (மடத்திற்கு) இன்னும் 'பாவா மடம் சந்து' என்றே மக்கள் அழைக்கின்றனர். இவரே தஞ்சைத் தரணியில் ஹரிகதை மறுமலர்ச்சியடையக் காரணமாகத் திகழ்ந்தவர். இவர் இசையுலகில் புகழ் பெற்று விளங்கியவர். இவரது சமாதி வடக்குவாசலில் உள்ளது. இவரது பரம்பரையினர் இன்னும் அச் சமாதிக்கு வழிபாடுகளைச் செய்து வருகின்றனர்.

இத்தகைய பாரம்பரியத்தில் வந்த தேவாஜிராவ், மராட்டி, சம்ஸ்கிருதப் புலமையுள்ளவர். (மோடி எழுத்தில் உள்ள ஆவணங்களின் தமிழாக்கங்களில் சில பகுதிகளைத் தமிழ்ப்பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ளது)

ஸ்ரீ ராமச்சந்திர பாவா பயன்படுத்திய சுவடிகளையும் அவர் பாடிப் பயன்படுத்திய சாகி, திண்டி, ஓவி போன்ற அரிய கீர்த்தன் சரித்திர நிருபணங்களையும் இந்த நூலகத்திற்கு 1965ஆம் ஆண்டு அளித்துள்ளார் திரு. தேவாஜி ராவ் அவர்கள்.

## 10. தத்தாத்ரேய மடத்தின் தொகுதி (Dattatreya Mutt Collection)

மராட்டிய மாநிலத்தில் சிறப்பாகத் திகழ்ந்த சம்பிரதாயங்களில் 'நாத சம்பிரதாய'மும்ஒன்று. இத்தகைய சம்பிரதாயத்தில் வந்த 'உத்தவசித்தர்'

என்பவருக்கு தஞ்சையில் ஒருமடம் கட்டிக்கொடுத்தார், இரண்டாம் சகஜி (கி. பி. 1684—1710) மன்னர். தஞ்சையில் உள்ள தொன்மையான மடங்களில் இதுவும் ஒன்று.

இந்த மடத்தில் பீடாதிபதிகளாக இருந்தவர்கள் மராட்டியிலும், சம்ஸ்கிருதத்திலும் புலமைமிக்கவர்கள். இவர்கள் சேகரித்து வந்துள்ள சுவடிகளை 17—2—1975ல் இந்த நூலகத்திற்கு அளித்துள்ளார்கள்.

## ஒரு சுவையான செய்தி

ஒரு சுவையான செய்தியடங்கிய சுவடித் தொகுதியும் இப்பிரிவில் உள்ளது. அதன் விவரம் பின்வருமாறு ;—

இந்த நூலகத்திற்கு மதுரை திரு. V. சுந்தரேசன் அவர்கள் 1975ஆம் ஆண்டு 69 ஓலைச்சுவடிகட்டுக்களை (Bundles) அன்பளிப்பாக அளித்தார்கள். இதில் 227 தலைப்புக்களில் நூல்கள் உள்ளன. இதற்கு இரண்டு ஆண்டுகளுக்குப் பின் 10—12—1977ஆம் ஆண்டு திருமதி சாவித்திரி அம்மாள் (நசிச்சேரி, நல்லிச்சேரி, தண்டாங்கோரை – தஞ்சை மாவட்டம்) அவர்கள் 70 சுவடிக் கட்டுக்களை அன்பளிப்பாக அளித்தார்கள். இதில் 298 தலைப்புக்களில் நூல்கள் உள்ளன.

இவ்விரண்டு தொகுதிகளின் சுவடிகளையும் ஆராயும்போது சுவடிகளின் அடிக்குறிப்புக்களில் (colophon) ஒரேவிதமான செய்திகளும், பெயர்கள், நாள் – கிழமை எழுதியவர் பெயர் முதலிய பிறவும் ஒப்புமையாகவும் காணப்பட்டன. உதாரணமாக,

1. "சித்ரபானு வருஷம், சாப மாஸம்(மார்கழி) 7-ம் தேதி ஸௌம்ய வாரம் ஏகாதசி, அஸ்வினி நக்ஷத்திரம் மீன லக்னத்தில் நஸிசேரியிலிருக்கும் வையச்சேரி ஸுப்ரம்மண்ய சாஸ்திரிகள் ஸ்வஹஸ்தத்தால் எழுதின ஆண்டபிள்ளை" என்றும்,

2. "நஸிசேரி ராமா ஸாஸ்திரிகள் புத்ரன் ஸுப்ரம்மண்ய ஸாஸ்திரிகள் கையெழுத்து" என்ற குறிப்புக்களும் ஷை இரண்டு தொகுதிகளிலுமே காணப்பட்டன. இதேபோல வைத்யநாத சாஸ்திரி என்ற பெயரும் காணப்பட்டன.

இந்நிலையில் ஒரே குடும்பத்தின் சுவடிகள் ஏதோ ஒரு காரணத்தால் பிரிந்திருக்கலாம் என்பதை அறிந்தேன். இதற்கு மேலும் வலுவூட்டுவதான ஒரு செய்தி என் கவனத்திற்கு வந்தது. The List of Sanskrit Manuscripts in Private Library of Southern India. — by Gustav Oppert (Publication 1885. Page 416) இதில் மேலே காணும் இரண்டு தொகுதிகளிலும் காணப்படும் சுவடிகளின் பெயர்களும். Gustav oppertன் புத்தகத்தில் காணப்படும் சுவடிகளின் பட்டியலும் சரியாகவே இருந்தன. இதனால் ஒரே குடும்பத்திலிருந்த சுவடிகளைப் "பின்வந்த சந்ததியினர் தங்களுக்குள் பாகப்பிரிவினை செய்துகொண்டபோது சுவடிகளையும் பிரித்துக்கொண்டு இருக்கலாம்" என்று கருதமுடிகிறது. முதல் தொகுதி 69 சுவடிகளும் இரண்டாம் தொகுதியில் 70 சுவடிகளும் இடம் பெற்றிருப்பதையும் இங்கு கவனிக்க வேண்டும்

ஒன்றாக இருந்த ஒரு நூலகம், காலத்தால் பிரிந்து மீண்டும் ஒரு பெரிய நூலகத்திலேயே கலந்துள்ளதை நினைக்க வியப்பாக இருக்கிறது. மலையில் தோன்றிய ஒரே நதி இரண்டு பிரிவாகப் பிரிந்து இறுதியில் கடலில் சங்கமமாவதைப்போல இந்த நூலகத்தில் சங்கமித்துள்ளது. 'பின்வரும் சந்ததிகளுக்கு இச்சுவடிகள் பயன்படவேண்டும் என்று கருதிய நம் முன்னோர்களின் எண்ணத்திற்கு ஏற்ப சுவடிகளை அளித்தவர்களின் பெருந்தன்மையை நினைக்க மனமகிழ்ச்சியேற்படுகிறது.

இதுபோன்ற வரலாற்றைத் தனது பின்னணியாகக் கொண்ட பல தொகுதிகள் சம்ஸ்கிருதத் துறையில் உள்ளன. மேலும் வரலாற்றுத் தொடர்புடைய சுவடிகளும், பரம்பரை பரம்பரையாகப் பாதுகாத்துவந்த சுவடிகளும் இந்த சம்ஸ்கிருதப் பிரிவில் வைத்துப் பாதுகாக்கப் பெறுகின்றன. இவற்றில் பல சுவடிகள் வேறு எந்த நூலகத்திலுமேயில்லாத அரிய சுவடிகளாகவும் உள்ளன. இவை ஆராய்ச்சியாளர்களுக்கு ஒரு புதையல் எனில் மிகையில்லை.

# மேகமாலா மஞ்சரி - மழை நூல்

## ஓர் அறிமுகம்

எஸ். இராஜலெக்ஷ்மி,
ஸம்ஸ்க்ருத பண்டிதர்.

வான் நின்று உலகம் வழங்கி வருதலால்
தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று — திருக்குறள்

உலகின்கண் வாழும் ஜீவராசிகளனைத்திற்கும் ஜீவநாடியாக அமைந்து விட்ட மழை வான்நின்று வழங்கிவருதலால்தான் மழையை அமிழ்தம் என்று உணரவேண்டுமென்று அறிவுறுத்துகிறார் வள்ளுவர் பெருமான்.

மேலும் மழையின் பெருமையைப் பற்றிக்கூறும்போது நீர் உண்பவருக்கு இன்றியமையாத உணவுப்பொருள்களை விளைவித்துக்கொடுப்பதோடுமட்டு மில்லாமல் அதுவே ஜீவராசிகளனைத்துக்கும் தலையாய உணவாகவும் இருக் கிறது என்கிறார். आपः प्राणः தண்ணீர் ஜீவராசிகளின் உயிர் என்று புகழ்ந்து கூறுகிறது வேதம். 'अप एव ससर्जादौ' பிரமன் உலகத்தை படைக்க முற்பட்ட பொழுது முதன்முதலாகத் தண்ணீரைத்தான் படைத்தான் என்றும் கூறுகிறது வேதம்.

மழை விண்ணின்று பெய்யாமல் பொய்த்துவிடுமாயின் இவ்வுலகம் பெருங்கடலால் சூழப்பட்ட பரந்த உலகமாக இருப்பினும், உண்ண உணவும், பருகத் தண்ணீரும் இல்லாமற்போய்விடுமாதலால், ஜீவராசிகளனைத்தையும் 'பசி' என்னும் கொடிய நோய் வாட்டி வருத்திவிடும்.

கடல் பெரிது. ஆனால் உண்ணீரும் ஆகாது. ஆயினும் அதனருகே இருக்கும் சிற்றூரல் உண்ணீரும் ஆகிவிடும் என்பர் புலவர். பயிர்கள் முளைப்பதற்கும், செழிப்புடன் வளர்வதற்கும், மண்ணைப் பன்படுத்து வதற்கும் இன்றியமையாத மூல காரணமாக இருப்பது தண்ணீர்தான், ஆதலின், தண்ணீர் இன்றேல் பயிர்களை விளைவிக்கும் உழவர் பெருமக்களும் ஏர் கொண்டு உழுவதற்கு வாய்ப்பற்றவர்களாகிவிடுவார்கள். நிலத்தை உழுவதால்தான் மண் செம்மைப்படுத்தப்பட்டு விதைகளை விதைக்க இயலும்.

உலகின்கண் வாழும் ஜீவராசிகளனைத்தையும் உரிய காலத்தில் மழை பெய்து காப்பதும், பெய்யாமல் அவைகளைக் கெடுப்பதும் மழைதான். மழை விண்ணின்று ஒரு சிறிய துளியாவது பெய்யாவிடில் பசும் புற்கள்கூட முளைக்கா, கால்நடைகள் அழிந்துவிடும். கதிரவன் தனது கிரணங்களினால் கடல் நீரை உறிஞ்சி அதை மேகமண்டலங்கட்களிக்கிறான். அம்மேக மண்டலங்கள் காற்றினால் உந்தப்பட்டவைகளாக மீண்டும் அத்தண்ணீரை

உலகிற்கு உரிய காலத்தில் மழையாகப் பொழிகின்றன. அவ்வாறு மேகங்கள் மழையாகப் பொழியாவிடில் கடலும் வற்றிவிடும். சிறப்பாக வானவர்கள் உலகுக்கு மழை என்னும் அமிழ்தத்தை வழங்குவதால்தான் பயிர்கள் விளைந்து தானியங்கள் கிடைப்பதால், மாந்தர்கள் வேள்வியின் வாயிலாக வானவர்கட்கு ஹவிர் பாகத்தை அளித்து வானவர்களை மகிழ்விக்கிறார்கள்.

மழை பெய்யாவிடில் பயிர்கள் விளையா. வேள்வியின் வாயிலாக வானவர்கட்களிக்கப்படும் ஹவிர் பாகமும் நின்றுவிடுமாதலால் வானவர்களும் வருந்துவார்கள்.

வானவர்களேயல்லாமல் இவ்வுலகில் வாழும் மாந்தர்களும் அவர்கள் கடைப்பிடித்துவரும் இல்லற தர்மமான பிறர்க்களிக்கப்படும் அன்னதானமும், தான் ஏற்றுக்கொள்ளும் தவமும் நின்றுவிடும். மற்றும் மழை பெய்யாவிடில் உலகின்கண் வாழும் ஜீவராசிகளனைத்துக்கும், சிறப்பாக மாந்தர்கள் எப்படிப்பட்டவராயிருப்பினும், உண்ண உணவும், உடுக்க உடையும் இருக்க மனையுமற்றவர்களாகவும், வறுமையின் காரணமாக மனம்போன போக்கில் சென்று வருந்த நேரிடும் என்பதைத் தெளிவாக எடுத்துக்கூறியுள்ளார் வள்ளுவர் பெருமாள்.

"अन्नं ब्रह्मेति व्यजानात्, अन्नाद्ध्येव खल्विमानि भूतानि जायन्ते – अन्नेन जातानि जीवन्ति – अन्नं प्रयन्त्यभिसंविशन्ति" என்கிறது உபநிஷத். அன்னம் - உணவு - பிரும்மமயம், அன்னத்தில் இருந்துதான் சகல ஜீவராசிகளும் பிறக்கின்றன. அன்னத்தினாலேயே அவைகள் ஜீவிக்கின்றன. அன்னத்திலேயே உறைகின்றன. மண்ணிற் பிறந்து பின் மண்ணோடு மண்ணாக மறைந்து விடுகின்றன என்கிறது உபநிஷத். அவ்வுபநிஷத் கூறும் அன்னத்துக்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது மழைதான்.

"आदित्याज्जायते वृष्टिः वृष्टेरन्नं ततः प्रजाः ।
अन्नाद्भवन्ति भूतानि पर्जन्यादन्न संभवः ॥" — भगवद्गीता

கதிரவனால்தான் உலகில் மழை பெய்கிறது. மழை பெய்வதால்தான் பயிர்கள் விளைந்து ஜீவராசிகட்கு உணவு கிடைக்கிறது. மாந்தர்கள் உணவு உட்கொண்டு பலமுள்ளவர்களாக இருப்பதால் மேன்மேலும் பிரஜைகளைப் (சந்ததிகளை) பெறுகிறார்கள். இவ்வாறு வேதம் முதலான நூல்களில் சிறப்பித்துக் கூறப்படும் மழை உலகில் பெய்வதற்கு மேகமண்டலங்கள்தான் மூல காரணம். அம்மேகங்கள் எவ்வாறு தோன்றுகின்றன. மழையைப் பொழிகின்றன என்பனவற்றை விரிவாக எடுத்துக் கூறுகின்றது மேகமாலா மஞ்சரி என்னும் இந்நூல்.

இந்நூல் சரஸ்வதி மகால் நூலகத்தில் வடமொழிப் பிரிவில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள B. 11053, D. 11359 என்ற எண்களைக்கொண்ட சுவடியை ஆதாரமாகக் கொண்டுள்ளது. இந்நூல் கிரந்த எழுத்தில் உள்ளது.

இச் சுவடித் தலைப்பில் "கர்க்க சம்ஹிதை - மேகமாலா மஞ்சரி" என்று எழுதப்பட்டிருக்கிறது. கர்க்க சம்ஹிதையில் உள்ள ஒரு பிரிவாக இந்நூல் அமைந்துள்ளது. இது பார்வதி. பரமேச்வரனின் உரையாடல் அமைப்பில் மேகங்களின் உற்பத்தி முதலிய செய்திகளைப் பற்றிக் கூறுவதாக எழுதப்பட்டிருக்கிறது.

இந்நூலில் கர்க்க முனிவர் மேகங்களின் உற்பத்தி, அவை எப்பொழுது எங்கு எப்படி உற்பத்தியாகும் என்ற விஷயங்களை மிகத் தெளிவாக கூறி உள்ளார். பிருகத் சம்ஹிதை என்ற நூலிலும் இவ்விஷயங்கள் விவரமாகவும் விளக்கமாகவும் கூறப்பட்டுள்ளன. இவைகளை நோக்கும்பொழுது முக்காலத்திய முனிவர்கள் தவத்தால் மோக்ஷமடைவதில் ஈடுபாடு உள்ளவர் களாக இருப்பினும் மனித சமுதாயம் உய்ய இம்மாதிரியான விஷயங்களைச் சொல்லி இருப்பதின் காரணமாக அவர்களுக்கு பிறரையும் வாழவைக்க வேண்டுமென்ற எண்ணம் இருந்ததாகச் சொல்ல முடியும். என்னே முனிவர் களின் பொற்காலச் சிந்தனை! இந்நூல் பார்வதி பரமேஸ்வரன் இவ்விருவர் களது உரையாடலின் போது பரமேச்வரன் பார்வதிக்கு மேகங்களின் உற்பத்திக்குக் காரணம் முதலானவற்றை எடுத்துக் கூறுவதுபோல அமைக்கப் பட்டிருக்கிறது. நூலின் ஆரம்பத்தில் கூறப்பட்டுள்ள அதன் விவரம் வருமாறு-

ஒரு சமயம் கைலயங்கிரியில் பார்வதியும் பரமேச்வரனும் அளவளாவிக் கொண்டிருந்த சமயம் "பிரபோ ! உலகின்கண் வாழும் பிரஜைகளும் ஏனைய ஜீவராசிகளனைத்தும் எவ்வாறு உயிர் வாழ்கின்றன. அவைகள் உயிர்வாழ் வதற்கு அடிப்படைக் காரணம் என்ன! என்பதை எனக்கு விளக்கமாகக் கூறியருள வேண்டுமென்று பார்வதி பரமேச்வரனைப் பிரார்த்திக்கவும், பரமேச்வரன்— "தேவி உலகிலுள்ள பிரஜைகளும் ஏனைய ஜீவராசிகளும் உயிர் வாழ்வதற்கு அடிப்படைக்காரணம் தண்ணீர், அதனால்தான் பிரமன் முதன் முதலில் உலகைப் படைக்க ஆரம்பிக்குமுன் தண்ணீரைத்தான் படைத்தான். மாந்தர்கட்கு உயிர்வாழ்வதற்கு இன்றியமையாதவைகளான நெல், கோதுமை, கம்பு, கேழ்வரகு போன்ற தானிய வகைகளும், மாந்தர் கட்கும், மற்ற ஜீவராசிகட்கும் தேவையான பல திறப்பட்ட மரம், செடி, கொடி வகைகளும், தண்ணீரினால்தான் செழிப்புற்று வளர்ந்து நல்ல பயனை அளிக்கின்றன.

இவ்வாறு ஜீவராசிகள் அனைத்தும் வாழ்வதற்கு அடிப்படைக் காரணமான தண்ணீரை அளிப்பது விண்வெளியில் தோன்றும் மேகங்கள்தாம். ஆகவே விண்வெளியில் தோன்றும் மேகங்கள் மழையைப் பொழிவதால் பயிர்கள் நன்கு வளர்ந்து அமுதத்துக்கொப்பான உணவு தானியங்களை உலகுக்கு அளிக்கின்றன. மாந்தர்கள் அவ்வமுதத்துக்கு ஒப்பான உணவு தானியங்களைப் பெற்று வேள்வியின் வாயிலாகத் தேவர்கட்கு அளித்துத் தாங்களும் உண்டு மிக்க மகிழ்ச்சியுடனும், சிறப்புடனும் வாழ்கிறார்கள்.

வேள்வியின் வாயிலாக அளிக்கப்பட்ட ஹவிர் பாகத்தைப் பெற்று மகிழ்ச்சி அடைந்த தேவர்கள் உரிய காலத்தில் உலகில் மழையைப் பொழியச் செய்கிறார்கள். மழைக்கு ஆதாரமாக உள்ளவை மேகங்களே என்று கூறவும். அவ்வாரான மழைக்காதாரமான மேகங்களின் உற்பத்தி, நிறம், சஞ்சரிக்கும் இடங்கள், உருவம், பெயர், பலம், தங்குமிடங்கள், மழையை பொழியும் காலம், இவைகளைப் பற்றியும் விளக்கமாகக் கூறவேண்டுமென பார்வதி தேவி பிரார்த்திக்கவும் பரமேச்வரன் கூறியதாவது.

தேவி ! முன்பு ஒரு சமயம் காச்யபர் என்னும் முனிவர் உலக நன்மைக்காக மழையை வேண்டித் தவம் புரிந்தனர். அன்னாரது தவ மகிமையால் கருணை உள்ளம் கொண்ட ஸ்ரீமந் நாராயணன் முன்பு பல அவதாரங்களை எடுத்து உலகைக் காப்பாற்றியது போல் உலக மக்களின் நன்மையைக் கருதி, மேகங்களை ஸ்ருஷ்டி செய்ய நினைத்தவராக முடிவில் தன்னையே மேகங்களாக அமைத்துக்கொண்டார். ஆகவே ஸ்ரீமந் நாராயணன் தான் மேகங்களாக விளங்குகிறார். நீருண்ட மேகத்தின் நிறங் கொண்டவரல்லவா ஸ்ரீமந் நாராயணன், மேகங்கட்கெல்லாம் தலைவன் இந்திரன் ( பர்ஜன்யன் ) இந்திரனின் சகோதரனாக ( உபேந்திரன் ) மஹாவிஷ்ணுவைக் கூறுவர். உலகில் மாந்தர்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் இந்நான்கும் அறத்தினையடிப்படையாகக் கொண்டதாக இருத்தல் வேண்டும். இந் நான்கு புருஷார்த்தங்களையும் பெற வேண்டுமாயின் தேவர்களை மகிழ்விக்க வேண்டும். அதற்கு வேள்வி செய்தல் வேண்டும். வேள்வித்தீயிலிருந்து எழும்பும் புகையின் வடிவம் கொண்டவைகள் தாம் மேகங்கள். ஆதலின் உலக மக்களனைவரும் இன்புற்றுவாழ அடிப்படைக் காரணமான தண்ணீரைக் கொடுக்கும் மேகங்களை, மழை பொழியச் செய்ய தேவர்களை மகிழ்விக்க வேள்வி செய்தல் வேண்டும்.

இந்நூலில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது ஜீவராசிகட்கு உயிராக அமைந்த மேகங்களின் உற்பத்தி, அவைகளின் நிறம், எண்ணிக்கை, அவைகள் சஞ்சரிக்கும் இடம், உறையும் இடம், அவைகளின் பெயர், அவைகள் செல்லும் திசைகள், அவைகளின் உருவம், பலம், மேகங்கள் கருவுற்றிப்பதை அறிதல் கருவுறும் மாதங்களும், காலங்களும், மேகங்களில் தோன்றும் மின்னலும் அதன் பயனும், காற்று உண்டாதல் மழைக்குக் காற்று எவ்வாறு உதவுகிறது, மேகங்களின் கர்ப்ப லக்ஷணம் முதல், இடி மின்னல் வரை இவைகளைப் பற்றி இந் நூலில் கூறப்பட்டுள்ளன.

மேற்படி விஷயங்கள் நம் நாட்டு மக்களுக்கு அதிலும் விசேஷமாக உழவர்களுக்குப் பயன்படும் என்ற நோக்கத்துடன் இந்நூல் அறிமுகப்படுத்தப் படுகிறது.

# சுவடிகளின் வரலாறும் அதனமைப்பின் பயன்களும்

ந்யாய சிரோமணி **ஆ. வீரராகவன்,**
*ஸம்ஸ்க்ருத பண்டிதர்.*

**சுவடிகளின் வரலாறும் அதனைப்பின் பயன்களும்**

பண்டைக்காலத்தில் வேதவேதாந்த சாத்திரங்கள் யாவும் உபதேச முறையிலே வளர்ந்து வந்தன. அவ்வுபதேசங்களனைத்தும் மனனம் செய்து அதனை வரப்படுத்தி பல தலைமுறையினரும் அறியும் வண்ணம் செய்கின்ற வாய்ப்பாட்டு முறையிருந்தது யாவரும் அறிந்த விஷயமே, அம் முறையில் வந்த விஷயங்கள் அழிந்துவிடுமோவென அஞ்சிய ஆன்றோர்கள் அவைகளைச் சுவடிகளில் எழுதி வவத்தனர். அப்போது எழுத உபயோகப்படுத்தப்பட்ட பொருள்களாக மரப்பலகைகள், 'பூர்ஜ'பத்திரங்கள் பனை ஓலைகள் முதலியன. இருந்தபோதிலும் மிகவும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டவை பனை யோலைகளே.

இந்த பனைமரமானது தென்னை, பாக்கு ஈச்சை மரங்களுடைய குடும்பமான பாமீ (Pami) அல்லது அரிகேசி (Arikesi) என்னும் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு காட்டு மரமாகும்.

தென்னை :— இம்மரம் நம்மிடமிருந்து எவ்வளவு நன்மை (தண்ணீர்) பெறுகிறதோ அதனை மற்றைச் சமயத்தில் பலமடங்கு நலன் நமக்கீயும் செய்நன்றி மறவாதது

பாக்கு :— இம்மரம் நம்மிடமிருந்து மிகுதியான நன்மைகளை யடைந்து பயனளிக்கவல்லது.

பனை :— இம் மரம் நம்மிடமிருந்து யாதொரு நன்மைகளையும் பெறாமல் செயற்கரிய சேவையான பரோபகாரத்தையே குறிக்கோளாகக் கொண்டு நாம் சோர்ந்து நலிவடையும் தருணத்தில் காற்றையுண்டுபண்ணும் கருவியாகத் திகழ்வதோடல்லாமல் தம் முன்னோர்கள் விட்டுச்சென்ற பழம்பெரும் பொக்கிஷங்களையும் பேணிக்காத்திட உதவுகிறது.

## பனை மரத்தின் பிரிவுகள்

இதில் பலவிதங்களுண்டு. இவைகளில் சிலவற்றின் ஓலைகள் எழுத உபயோகப்படுகின்றன.

1. Borassus Flabellifer linn :— இதனை ஆங்கிலத்தில் Palmyrapalm என்றழைப்பர். இதனை தாளையென்றும் பனையென்றும் கூறுவர். இது உஷ்ண பிரதேசங்களில் அதிகமாக விளைகின்றது. இதற்கு மூலம் ஆப்ரிகா கண்டமாகும். இது 18லிருந்து 20 மீட்டர் உயரமாயும், 1லிருந்து 2 மீட்டர் பருமனுடையதாயும் வளரும். இதன் ஓலைகள் மிகவும் பருமனாக இருப்பதால் பூச்சிகளின் தாக்குதல்களுக்கு விரைவிலாட்படுகிறது. ஆகையால் இவைகள் பெரிதும் எழுத உபயோகப்படுவதில்லை.

2. Coryphaumbra Culifera linn ;— இதனை ஆங்கிலத்தில் Fanpalm or Talipot Palm என்றழைப்பர். இது கால வழக்கில் ஸ்ரீதாளை யென்றும் கூந்தல் பனையென்றும் அழைக்கப்படுகிறது. இது 20லிருந்து 25 மீட்டர் உயரமாயும் 1½லிருந்து 2 மீட்டர் பருமனுடைத்ததாயும் வளருகிறது. இது தென்னிந்தியாவில் நன்கு விளைகிறது. இதன் ஓலைகள் மிருதுவாகவும், வளையக்கூடியதாகவும் இருக்குமாதலால் எளிதில் பூச்சிகளின் தாக்குதல் களுக்கும், முறிவுகளுக்கும் ஆட்படுவதில்லை. ஆகையாலிவ்வகையினைப் பெரிதும் எழுத உபயோகித்தனர்.

3. Coryphataliera Roxb எனப்பெயர்கொண்ட இவ்வகைக்கு ஆங்கிலப்பெயர் கண்டுபிடித்ததாகத் தெரியவில்லை. இது 10 மீட்டர் உயரமும் ஒரு மீட்டர் பருமனும் கொண்டதாக வளருகிறது. இது வங்க பிரதேசத்திலும் தமிழகத்தின் கரையோரப் பிரதேசங்களிலும் விளைகின்றது. இதன் இலைகள் கடினமாக இருக்குமாதலால் எதிர்பாராச்சம்பவத்திற்காட்பட்டு உடன் ஒடிந்து விட நேரிடுவதாலும், பூச்சிகளின் தாக்குதல்கள் இவைகளிலெளிதில் ஏற்படுவதாலும் இதனை குறைந்த அளவில்தான் எழுத உபயோகித்திருப்பர் எனத் தெரியவருகிறது.

## சுவடிச்சொல் விளக்கம்

சுவடிகளை ஏட்டுச் சுவடி, சுவடித்தூக்கு, என்றெல்லாமழைப்பர். ஏட்டிலே எண்ணத்தின் சுவடாகிய எழுத்துக்களைப் பதிக்கப்பெற்றமையால் இவைகளை ஏட்டுச் சுவடிகளென்பர். ஆங்கிலத்தில் இதனை மேனுஸ்கிருப்ட்ஸ் (Manuscripts) என்பர். இது மேனுஸ்கிருப்டஸ் (Manuscriptus) எனும் இலத்தீன் மொழிச்சொல்லிலிருந்து மேனுஸ்கிருப்ட்ஸ் என ஆங்கிலம் எடுத்துக் கொண்டுள்ளது.

மேலும் இந்த ஓலைகளைப் பதப்படுத்தி எழுதுவதற்கு ஏற்றவாறு செய்து விற்றும், எழுதியும் வந்தனர். ஸ்ரீ லக்கண்ணதண்டேசன் என்பவர் தனது சிவதத்துவ சிந்தாமணியில் சுவடிகளை விற்பனை செய்கிறவர்களில் சிலரைக் குறிப்பிட்டுள்ளார் என்பதே இதற்குச் சான்றாகும். மேலும் இந்தச் சுவடிகளுக்கும் கூட "சுங்கவரி" போடப்பட்டது என்று பெல்காமில் (Belgam) உள்ள ஒரு சாஸனம் மூலம் தெரியவருகிறது.

## சுவடிகளைப் பதப்படுத்தும் முறை

1. மரத்திலிருந்து குருத்துக்கள் இலைகளை விரித்து பரவ இருக்கும் சமயம் அவைகளைக் கத்தரித்துக்கொண்டு வந்து ஒருவார காலம் வெய்யிலில் உலர்த்திப் பிறகு அவைகளை குறைந்தது மூன்று மாதம் வரை நிலத்தில் புதைத்து மறுபடி எடுத்துச் சுத்தம் செய்து வேண்டுமான அளவில் கத்தரித்து சமயலறை மேலிருக்கும் பரண்களில் படுக்கவாட்டில் பரப்பி சமயலறை புகையினாலே பதப்படுத்துகின்றனர் என்றும், புகையின் காவினாலே தன் இயல்பான சத்தை நீக்கிக்கொண்டு எழுதுவதற்கு உபயோகமாகின்றன என்றும் பரோடா ஓரியண்டல் இன்ஸ்டிடியூட்டில் இயக்குநராயிருந்த திரு. பி. பட்டாசார்யரென்பவர் கூறியுள்ளார்.

2. இந்த பனை ஓலைகளை வெய்யிலில் உலர்த்திப் பிறகு வெந்நீரில் கொதிக்க வைத்துப் பிறகு உலர்த்தி நன்குலர்ந்தவுடன் கூழாங்கல் அல்லது சங்கு கொண்டு தேய்த்து மிருதுப்படுத்தி எழுதிவந்தனர் என்று, டாக்டர் பிமல்குமார் தத்தா என்பவர் கூறியுள்ளார்.

மேலும் சுவடிகளைப் பதப்படுத்தும் முறையானது ஓரிஸ்ஸா, ஸ்ரீலங்கா, தைலாண்டு ஆகிய இடங்களில் சிறிது மாறுபட்டு காணப்படுகிறது.

## ஓரிஸ்ஸாவில் பதப்படுத்தும் முறை

இம் மாநிலத்தில் பனை ஓலைகளை ஏற்ற அளவிலே கத்தரித்துக்கொண்டு வந்து அவைகளை சமையலறை மேலுள்ள பரண்களில் பரப்பி வைத்து, அந்தச் சமயலறை புகையின் மூலம் பதப்படுத்தி, பிறகு அதனை சுத்தப்படுத்தி, மஞ்சள்பொடியினை நீரில்கலந்து அதன் மேல் தடவி, பிறகு துடைத்துப் பின்னர் எழுத உபயோகிப்பர்.

இம் மாநிலத்திலேயே சில இடங்களில் ஒருசிலர் இலைகளை வெயிலில் உலர்த்தி களிமண்ணை நீரில் குழைத்து அக்குழைவினுள் ஓலைகளையிட்டுப் பதப்படுத்திப் பின்னர் வெளியிலெடுத்து வெய்யிலிலுலர்த்தி மஞ்சள் பொடியினை நீரில் கலந்து அதன்மேல் தடவியும், நீரில் ஓலைகளையிட்டுக்

கொதிக்கவைத்துப் பின்னர் நைசான துணியினால் துடைத்துப் பகலில் வெயிலும், இரவில் பனியிலும் உலர்த்தி மஞ்சளைத் தடவி பதப்படுத்தி வந்தனர்.

## இலங்கையில் பதப்படுத்தும் முறை

பசுமையான பனை ஓலைக்ளை சிறிது நேரம் வெறும் தண்ணீர் அல்லது சுண்ணாம்பு கலந்த நீரில் கொதிக்க வைத்துப் பிறகு நிழலில் உலர்த்தி பதப்படுத்தி வந்தனர்.

## தாய்லாந்தில் பதப்படுத்தும் முறை

தைலாண்டில் இந்த ஓலைச் சுவடிகளை பொன்னுக்குச் சமமாக மதித்து வந்தனர். ஆதலால் தாள பத்திரங்களை தங்க பத்திரங்கள் (Golden Leaves) என்றழைத்து வந்தனர். பனை ஓலைகளைக் கத்தரித்து வந்த பின்னர் அவைகளிலுள்ள தண்டுகளை நீக்கி 50 இலைகள் கொண்ட கட்டு களாகச் செய்து குறிப்பிட்ட அளவுக்கு கத்தரித்துப் பின்னர் பதப்படுத்தி வந்தனர். முதலில் இரண்டடுக்குகளைக் கொண்ட சதுரமான ஒரு பெட்டி யினைச் செங்கற்களாலே செய்துகொண்டு, பெட்டியின் கீழ் தளத்தில் ஒரு வழியினைச் செய்து அதன் மூலம் நெருப்பினையிடுவார்கள். அப்பெட்டியின் மேல் தளத்திலும் ஒரு வழியினைச் செய்து அதன் மூலம் சுவடிக் கட்டுகளைப் பரவலாக இட்டு காய்ச்சுவார்கள். இவ்விதம் 24 மணி நேரம் காய்ச்சப்பட்ட சுவடிகளில் கருமையான எண்ணெய்ப்பசை வந்திருக்கும். அதனை மென்மை யான துணியினால் துடைத்து கரியடுப்பில் மறுபடியும் உலர்த்தி துணியினால் துடைத்து எழுத உபயோகிப்பர்.

## எழுத்தாணிகள்

இவ்வோலைகளில் எழுத உபயோகிக்கும எழுத்தாணிகள் மூவகைப் படுமென்று ஸ்ரீ-உ-வெ-சாமிநாதய்யர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். அவைகள் குண்டெழுத்தாணி, வாரெழுத்தாணி, மடக்கெழுத்தாணி என்பனவாம்,

### குண்டெழுத்தாணி

இவ்வெழுத்தாணியின் நடுவில் ஒரு குண்டு இருக்கும். அக்குண்டினை உள்ளங்கையில் இட்டுக்கொண்டு எழுத உபயோகிப்பர்.

### வாரெழுத்தாணி

இவ்வெழுத்தாணியினை பாதுகாப்புடன் வைப்பதற்காக ஓலைக ளாலேயே செய்யப்பட்ட வாருடன் (உரையுடன்) கூடியிருக்கும்.

மடக்கெழுத்தாணி

இவ்வெழுத்தாணி மரம், தந்தம் மாட்டுக்கொம்பு முதலியவற்றால் அமைந்த பிடிகளில் மடக்கி வைக்கும் முறையில் அமைந்திருக்கும்.

## ஓலைச்சுவடிகளில் எழுதும் முறை

மேற்கூறியவாறு நன்கு பதப்படுத்தப்பட்ட சுவடிகளில் இரு புறங்களிலும் மிகவும் கூர்மையான நுணிகளைக்கொண்ட எழுத்தாணிகள் மூலம் எழுத்துக்களைப் பொறித்துப் பின்னர் கரிப்பொடியுடன் கூடிய எண்ணையினைத் தடவிப் பிறகு துணியினால் துடைத்துப் படித்து வந்தனர். விளக்குக் கரி அல்லது கரிப்பொடியுடன் கூடிய எண்ணெயினைத் தடவுவதால் சுவடியினைப் படித்தல் எளிதாகிறது. மேலும் ஓலைச்சுவடிகளில் எழுதுபவர்கள் தமது இஷ்ட தேவதையின் பெயரை எழுதி, தற்போது எடுத்துக்கொண்டுள்ள பணியானது எவ்வித இடையூறின்றி மங்களகரமாக முடியவேண்டுமென்று வணங்கி பின்பு அதனை நீரோட்டத்தில் விட்டுப் பிறகு எழுத ஆரம்பிப்பார்கள் எழுதி முடித்தவுடன் மிகவும் சிரமப்பட்டு இந்தச்சுவடி எழுதப்பட்டது. இதனைப் பலகாலம் காப்பாற்றி வாருங்கள் என்றும் வேண்டியிருப்பார்கள்.

## சுவடிகளில் எழுதும் வழக்கம் பற்றி

சுவடிகளில் எழுதும் வழக்கம் எப்போது தோன்றியது எனக்கூறுவது கடினமான விஷயமாகும். ஆயினும் நாம் ஓரிரு சான்றுகளால் இதனையறியலாம். நம் இந்தியாவிலேயே "தம்மபதம்" (धम्मपदम्) (3 A. D.) என்ற என்ற பௌத்த மதத்தைத் தழுவிய நூல் முதன் முதலில் * "கரோஷ்டீ' எனும் எழுத்தில் எழுதப்பட்டதாகும். சீனதேச பௌத்த பிக்ஷுவான "ஹுயுத்ஸாங்சுன்" என்பவர் (கி-600—664) கையெழுத்துப் பிரதிகளின் சேகரிப்பையே முழுமையான குறிக்கோளாகக்கொண்டு 16 வருட காலம் பாரதத்தில் அலைந்து திரிந்திருக்கிறார். அதுசமயம் அவர், "ஓலைச்சுவடிகளின் மேல் எழுதுவது பரத கண்டத்தில் எல்லாவிடங்களிலும் பிரசித்தமாக இருந்தது" என்று கூறியுள்ளார்.

---

* (a) கரோஷ்டீ (Ancient Indian Alphabets No. 6) All India Educatioual Supply Co. Jawahar Nagar, Delhi-7.

(b) கரோஷ்டீ என்பதனை வலமிருந்து இடமாக எழுதும் முறை என்ற கருத்தும் நிலவுகிறது.

## சுவடிகளின் அதிகரிப்பு

மேலும் ஒரு பிரதி பழுதடையும் சமயம் அதனைப் பாதுகாக்க மற்றொரு பிரதியினை எழுதியும், பிரசாரத்திற்கென பல சுவடிகளை எழுதியும், ஒரு சுவடி புதியதாக உண்டாயிருப்பின் அதனைப் படிப்பவர்கள், படியெடுப்பவர்கள் என்பது போன்ற பல செயல்களின் பேரில் சுவடிகளின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே வந்தது. கிறிஸ்துசகம் 453ம் ஆண்டு ஜைன முனிவர்களின் சமூகம் அவர்களுடைய பிராசீனமான தர்ம நூல்களை பிரதி செய்யத் தொடங்கி அதனை "புஸ்தகாரோஹணம்" (पुस्तकारोहणम्) என்றழைத்ததும், குஜராத்தை ஆண்டுவந்த "ஜயஸிம்ம ஸித்தராஜன்" என்பவர் 'ஹேமசந்திரன்' இயற்றிய "ஹைமவியாகரணத்தை" ஆசியா கண்டம் முழுவதிலும் பரப்ப எண்ணி 300 எழுத்தாளர்களைப் பணியிலீடுபடுத்தி 3 வருட காலத்தில் 1,25,000 பிரதிகளைத் தயாரித்து அவைகளை பல நூலகங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் அனுப்பினார் என்பதும் இதற்குச் சான்றாகும்

## சுவடிகளின் அமைப்பும் அதன் பயன்களும்

சுவடிகளை மும்மூர்த்தி ஸ்வரூபமென்றும் அதற்குச் சுற்றும் கயிற்றை வாசுகி (எனும் பாம்பு) ஸ்வரூபமென்றும் அந்தக் கயிறு குறிப்பிட்ட அளவு இருக்கவேண்டுமென்றும் ஆகல நீளத்தைப் பிரம்மனென்றும் எழுத்துக்களை (அக்ஷரங்களை) மஹாவிஷ்ணுவென்றும் குறில் நெடில் முதலிய மாத்திரைகளை மூலப்ரகிருதி என்றும் கருத வேண்டுமென்று பவிஷ்யத்புராணம் கூறுகின்றது.

## சுவடிகளின் அளவு பற்றி

சுவடிகளின் அளவுகளைப்பொறுத்து, உத்தமம் மத்யமம் என்றவாறே மூவகைப்படுத்தப்பட்டுள்ளன. 32 அங்குல நீளமுள்ளவைகளை உத்தம வர்க்கத்திலும் 28 அங்குல நீளமுள்ளவைகளை மத்யம வர்கத்திலும், 8 அங்குல நீளமுள்ளவைகளை மூன்றாம் வர்கத்திலும் சேர்க்கலாம் இந்த அளவுகளும் கூட மும்மூர்த்திகளின் சொரூபங்களேயாகும். இவ்விதம் அமைப்பதின் பேரில் அவைகள் அறம், பொருள் இன்பம் ஆகிய மூன்றுவிதமான பலன்களையும் கொடுக்க வல்லதாகின்றன. பூர்ஜபத்திரங்களில் 12 அங்குல பிரமாணமிருப்பின் அது ஞானத்தைக் கொடுக்கவல்லது.

## சுவடிகளிலுள்ள துளைகள் பற்றி

சுவடிகளில் செய்யப்படும் துளைகளை நடுவிலும், ஓரங்களிலும் மற்றும் ஓலையொன்றுக்கு ஒரு துளையினையும் செய்தல் கூடாது. ஆதலால் சுவடிகளில் இரு துளைகள் செய்தல் வேண்டும். இதனால் இத்துளைகளில்

ஒன்றில் ஒரு மெல்லியதான குச்சியினையிட்டுக்கொண்டு மற்றொரு துளையில் கயிறு பிணைக்க உதவுகிறது. மற்றும் இரு துளைகளைச் செய்வதனால் ஐயம் உண்டாகும் என்று பவிஷ்யத் புராணம் கூறுகிறது.

## சுவடிகளின் காப்புப் பலகைகள் பற்றி

மும்மூர்த்தி ஸ்வரூபமான இச்சுவடிகளை தக்க காப்பீட்டுப் பலகைகளையிட்டுக் காப்பாற்ற வேண்டும். அதற்கு தாமிரத்தாலே அல்லது பித்தளையாலோ, கவசமணிவிக்கலாம். அது முடியாமற்போனால் வில்வம், மற்றும் தேக்கு மரத்தாலான பலகைகளைக்கொண்டு காப்புக் கவசம் செய்யலாம். அதிலும் புது மரப்பலகைகளையும், இரும்புக் காப்பு பலகைகளையும் பயன்படுத்தலாகாது. ஆதலால் நன்கு பண்பட்ட மரங்களைக் கொண்டு காப்புப் பலகைகளை அணிவிப்பது சாலச்சிறந்தாகும்.

இப்படியாக நம்முன்னோர்கள் சுவடிகளைத் தேர்ந்தெடுப்பது முதல் சுவடிகளில் எழுதி அவைகளைக் காத்திடும் வரை பெருமதிப்புடனும், மிகுந்த பக்தியுடனும் இருந்துவந்தனரெனத் தெள்ளத் தெளிவாகிறது, ஆகையால் நம் முன்னோர்கள் பாதுகாத்துவந்த சுவடிச் செல்வங்களைக் காப்பதோடன்றி பழைமையான ஒரு கலையையும் பாதுகாப்பது நம் அனைவரின் தலையாய கடமையாகும்.

***

## துணை நூல் பட்டியல்

****

1. “மணிக” என்னும் மலர் — பி. எம். ஸ்ரீ பிரதிஷ்ட்டானம், பெங்களூர்.

2. கன்னட ஹஸ்த பிரதிகள இதிஹாச — ஸ்ரீ தே. வீரப்பா, கன்னட அத்யயன ஸம்ஸ்த்தை, மைசூர்.

3. கன்னட விஸ்வகோசம் — கன்னட அத்யயன ஸம்ஸ்த்தை, மைசூர்.

4. சுவடிப் பதிப்பு நெறிமுறைகள் — தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்,

5. Conservation Manuscripts & Paintings of South East Asia, New Delhi.

भविष्यत्पुराणेमध्यमभागे —

1. त्रिदेवं पुस्तकं विद्यात् सूत्रं वासुकिरुच्यते ।
अमानकरणेदोषः तस्मात्तच्च न हापयेत् ॥ (7-54)

2. पत्राणि भगवान्ब्रह्मा ऊर्ध्वदीर्घाणि यानि च ।
जनार्दनश्चाक्षराणि मात्रा प्रकृतिरव्यया ॥ (7-55)

3. द्वात्रिंशदङ्गुलैर्युक्तं कर्तव्यं पुस्तकोत्तमम् ।
स वै नारायणः ख्यातो ... ... ... ... ... ... ॥ (7-102)

4. चतुर्विंशाङ्गुलं यच्च तद्वै स्वधनमुच्यते ।
शङ्करः सतु विज्ञेयो धर्मकामफलप्रदः ॥ (7-103)

5. अष्टाङ्लं भवेद्यच्च तत्कनिष्ठमिहोच्यते ।
तस्माद्ब्रह्ममयं ज्ञेयं त्रिवर्गफलदायकम् ॥ (7-104)

6. द्वादशाङ्गुलकं यच्च भूर्जकैडादि निर्मितम् ।
अङ्गुलानां प्रमाणंतत् तेनापि ज्ञानपुस्तकम् ॥ (7-106)

7. मध्यं तस्य हरेदायुः पार्श्ववेधःशिवंहरेत् ।
युग्मवेधे जयं दद्यात् एकवेधे बलिर्भवेत् ॥ (7-73)

8. परमं प्रकृतेर्गुह्यं स्थानं देवैर्विनिर्मितम् ।
पूरयेत्ताम्रलिङ्गेन अथ रैत्यमयेन वा ॥ (7-74)
( पुराणेतिहासश्रवणमहात्म्ये – 42 )

9. अशक्तो बिल्वकाष्ठस्य तथा श्रीपर्णिकस्य च ।
न काष्ठस्य नवं शस्यं न लौहं योजयेत्क्वचित् ॥ (7-75)
( पुराणेतिहासश्रवणमाहात्म्ये – 43 )

श्री:

# ॥ पञ्चमूर्त्यर्चना विधिः ॥

# (பஞ்ச மூர்த்யர்ச்சனா விதி)

Nyaya Siromani **S. SUDARSANAN,** M. A.,
SANSKRIT PANDIT.

---

॥ श्रीविखनस महागुरवे नमः ॥

नारायणः पिता यस्य माता चापि हरिप्रिया ।
भृग्वादि मुनयः पुत्राः तस्मै श्रीगुरवे नमः ॥
(ओं)देवराज दयापात्रं धीभक्त्यादि गुणार्णवम् ।
भृग्वादि मुनिभिर्मान्यं वन्दे श्रीविखनोमुनिम् ॥
श्रीलक्ष्मी वल्लभारम्भां विखनोमुनिमध्यमाम् ।
अस्मदाचार्य पर्यन्तां वन्दे गुरुपरम्पराम् ॥

ஸ்ரீ குருப்யோ நம:

பகவான் ஸ்ரீமந் நாராயணன் பூலோகத்தில் துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபலனம் செய்யும் பொருட்டு, அவதாரம் செய்கின்ற வேளையில், வியாசர் முதலான ரிஷிகளைப் பார்த்து "பூலோகத்தில் உங்களில் யார் எனக்குக் கைங்கர்யம் செய்யப்போகிறீர்கள் ?" என்று கேட்க, ரிஷிகள் பெருமாளின் கைங்கர்யத்தில் பலவித அபசாரங்கள் ஏற்பட்டுவிடுமோ என்று மனத்துள் எண்ணி அஞ்சிட, இதனை அறிந்த பகவான் ஸ்ரீமந் நாராயணன் மாநஸிக ஸ்ருஷ்டியாக விகனஸரைத் தனது திருவாராதன கைங்கர்யத்திற் காகவே படைத்தார்.

விகனஸாசார்யனின் அவதாரம்

श्रवणे श्रावणे शुक्ल पूर्णिमा सोमवासरे ।
सिंह लग्नेन संयुक्ते विखनात्प्राप नैमिशम् ॥

விகனஸரானவர் ஆவணி மாதத்தில் (ஸ்ராவண மாதத்தில்), திருவோண நக்ஷத்ரத்தில், சுக்ல பக்ஷத்தில், பௌர்ணமி திதியில், திங்கட் கிழமையில் நைமிசாரண்யத்தில் அவதாரம் செய்தார். விகனஸருக்கு ப்ருகு, அத்ரி, காஸ்யபர், மரிசி என்பதாக நான்கு சிஷ்யர்கள் இருந்தனர்.

வைகானஸ ஆகமம் பற்றி

वैखानसेन मुनिना द्वात्रिंशत्प्रश्नसङ्ख्यया ।
निषेकादि श्मशानान्तं मानुषं कर्म सूचितम् ॥
सूत्रं विखनस प्रोक्तं सार्धकोटिप्रमाणकम् ।
कर्षणाद्युत्सवार्थश्च दैविकं तेन सूचितम् ॥
गुरुमुखाश्च संगृह्य तत्सर्वं समुदाहृतम् ।
काश्यपेनात्रिणा चैव मया (मरीचि) च भृगुना तथा ॥
चतुर्लक्ष प्रमाणेन संक्षिप्य प्रोच्यतेऽधुना ॥

மேலுள்ள ஸ்லோகங்கள், விகனஸரால் 1½ கோடி க்ரந்தமுள்ள மந்த்ரங்கள், நான்கு சிஷ்யர்களுக்கும் மானுஷிக விஷயமாக நிஷேகம் முதல் ச்மசானம் வரையிலும், தைவிக விஷயமாக கர்ஷணம் முதல் உத்ஸவம் வரையிலும் உபதேஸிக்கப்பெற்றது. அவ்வாறு ஆசார்யனிடமிருந்து உபதேசமாகப் பெறப்பெற்ற 1½ கோடி க்ரந்த மந்த்ரங்கள் சிஷ்யர்களாகிய ப்ருகுவாலும், அத்ரியராலும், காஸ்யபராலும், தன்னாலும் (மரீசி) நான்கு லக்ஷமாகச் சுருக்கிக் கூறப்பெற்றது என்று மரீசி கூறுவதாக* அமைந்ததாகும். இந்த ஸ்லோகங்களின் மூலம் வைகானஸ ஆகமத்தின் விஷயங்கள் நன்கு தெளிவாகிறது.

---

* आनन्द संहिता सप्तदशोऽध्यायः ।

ஆனந்த ஸம்ஹிதை 17-வது அத்தியாயம்.

விகனஸரால் உபதேசிக்கப்பெற்ற சூத்ரங்கள் வைகானஸ சூத்ரம் எனப்படும் இந்த வைகானஸ சூத்ரத்தை அனுஷ்டிப்பவர்கள் வைகானஸர்கள் எனப்படும் அழைக்கப்பெறுவர். விகனஸரால் தைவிக (தெய்வீக) விஷயமாகச் சொல்லப் பெற்றவை "வைகானஸ ஆகமம்" எனப்பெற்றது. இந்த ஆகமம்தான் முதன் முதலாகத் தோன்றியிருக்க வேண்டும். இதற்குப் பல சான்றுகள் இருந்த போதிலும் இதனை ஆராய்ச்சியாளர்களுக்கு விட்டுவிடுவோம்.

விகனஸரால் 1½ கோடி க்ரந்தம் உபதேசிக்கப்பெற்ற மந்த்ரங்களை நான்கு லக்ஷமாகச் சுருக்கிக் கூறிய நான்கு சிஷ்யர்களில் மரீசியும் ஒருவராவார். இவரால் படைக்கப் பெற்றவை எட்டு ஸம்ஹிதைகள். அவை முறையே

(i) जय. (ii) आनन्द, (iii) संज्ञान, (iv) वीर, (v) विजय, (vi) विजित, (vii) विमल, (viii) कल्पसंहिता

((i) ஜெய, (ii) ஆனந்த, (iii) ஸஞ்ஞான, (iv) வீர, (v) விஜய, (vi) விஜித, (vii) விமல (viii) கல்ப ஸம்ஹிதா) என்பவையாகும். இவை மொத்தம் ஒரு லக்ஷத்து எண்பத்து நாலாயிரம் க்ரந்தமாகும்.

மரீசியால் சொல்லப்பெற்ற ஸம்ஹிதைகளில் இரண்டாவதாக உள்ள ஆனந்த ஸம்ஹிதையில் [मरीचि विमानार्चन कल्पम्] மரீசி விமாநார்ச்சன கல்பமும் அடங்கும். இச் சுவடி நமது நூலகத்தில் B. 3552 D. 15344 என்ற எண்ணில் பதிவாவாகியுள்ளது. இதிலிருந்து தற்சமயம் மிக முக்கியத் தேவையாகவும், அதிக அளவில் அனைவருக்கும் பயனுள்ளதாகவும் உள்ள பஞ்சமூர்த்யர்ச்னா விதி (44 ஆவது படலம்) மட்டும் தமிழாக்கத்துடன் இந்தப் பருவ இதழில் வெளிவருகிறது.

இந்த 44 ஆவது படலத்தில், "சன்னிதிகளில் (கோயில்களில்) ஒன்பது மூர்த்திகளை ப்ரதிஷ்டை செய்து திருவாராதனம் செய்யவேண்டும். இல்லை எனில் ஆறு மூர்த்திகளை ப்ரதிஷ்டை செய்து திருவாராதனம் செய்யவேண்டும். அதுவும் முடியவில்லையெனில் பஞ்சபேர விதானம் என்று கூறப்படும் ஐந்து மூர்த்திகளை ப்ரதிஷ்டை செய்து திருவாராதனம் செய்ய வேண்டும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஒன்பது, ஆறு, ஐந்து மூர்த்யர்ச்சனா விதிகளைக் கொண்ட 44 ஆவது படத்திலிருந்து, இன்றைய அளவில் வழக்கத்திலுள்ள பஞ்சபேர விதானமாக இருக்கிற ஸந்நிதிகளுக்கு உரிய விதிகளைக் கொண்ட பகுதிகள் மட்டும் (தமிழாக்கத்துடன்) இங்கே இடம் பெறுகின்றன.

# ॥ पञ्चमूर्त्यर्चनाविधिः ॥

अर्चकाः परिचारकाश्च विधिना स्नात्वा, आचम्य, सन्ध्यामुपास्य, देवादीनद्भिस्तर्पयित्वा, ब्रह्म यज्ञं च कृत्वा, देवालयं गत्वा, "विष्णोर्नुकं" इति शनैः प्रदक्षिणं कृत्वा, देवालयं गत्वा, "हिरण्यपाणिं" इति कवाटमुद्धाट्य, अभ्यन्तरं प्रविश्य, देवं प्रणम्य, दीपान् सन्दीप्य, शिष्याः "धारासु" इति आधावं गृह्णीयुः। अर्चकाः सर्वासां मूर्तीनां निर्माल्यमादाय, विष्वक्सेनमर्चयेयुः।

*அர்ச்சகர், பரிசாரகர் முறைப்படி ஸ்நாநம் செய்து, ஆசமநம் செய்து, ஸந்த்யாவந்தனத்தையும் செய்து, தேவாதி தர்ப்பணங்களைச் செய்து, முடித்து ப்ரம்மயக்ஞம் செய்து, தேவாலயம் சென்று "விஷ்ணோர்னுகம்" எனத்தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி ப்ரதக்ஷிணம்செய்து, "ஹிரண்யபாணிம்" என்ற மந்த்ரத்தைச் சொல்லி கதவைத் திறந்து உள்ளே சென்று, பெருமாளை வணங்கி, திருவிளக்குகளை நன்றாக ஜ்வலிக்கச் செய்து, சிஷ்யன் மூலமாக "தாராஸு" என்று தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி ஜலத்தை எடுத்துக் கொண்டு, அர்ச்சகர், எல்லா மூர்த்திகளின் மேலேயுள்ள நிர்மால்யங்களையும் (பழைய புஷ்பங்களை) களைந்து எடுத்து அந்த புஷ்பங்களினால் விஷ்வக்ஸேனரை அர்ச்சனை செய்ய வேண்டும்.*

गर्भालयं, पुरुषदीनां स्थानानि अलीन्द्रं च प्रदक्षिण क्रमेण "अवधूतं" इति संमार्जनं कृत्वा अद्भिरभ्युक्ष्य, उपलेपनं कृत्वा अर्चनापात्रं हविः पात्राणि च प्रक्षाल्य, विधिना शुद्धान्न पायस कृसर गौल्य बापकान्, सर्वालाभे यथालाभं शुद्धान्नं वा पचेयुः, अर्चनाद्रव्याणि पृथक्पृथक् संगृह्य, विष्णुगायत्र्या ध्रुवस्थानं प्रोक्ष्य, पुष्पन्यासं कृत्वा, श्रीभूमी ब्रह्म शङ्करौ, धात्रादि ब्रह्म पर्यन्तान् परिवारांश्च समभ्यर्च्य, मुखमण्टप द्वारवामे स्नानपीठे विष्ण्वादि पञ्च कौतुकानि क्रमेण संस्थाप्य पाद्याचमन मुखवासांश्च दत्वा, तैलाभ्यञ्जनं अन्यदप्युचितं कृत्वा, आम्लाद्यैस्संशोध्य विष्णु- मूर्ति "इषेत्वोर्जेत्वादिना" शुद्धोदकैस्संस्नाप्य चन्दनोदकैरभिषिच्य, पुरुषं सहस्रशीर्षाद्यैः, सत्यं विष्णोर्नुकाद्यैः, अच्युतं "अतो देवाद्यैः, अनिरूद्धं "एकाक्षराद्यैः" संस्नाप्य, तत्तत्स्थानं संशोध्य, तत्तत्पीठे संस्थापयेत्।

***கருவறை, புருஷ மூர்த்தியை வைத்துள்ள இடம் ஆகியவற்றை ப்ரதக்ஷிணமாக "அவதூதகும்" எனத் தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி***

சுத்தம் செய்து, ஜலம் தெளித்து துடைத்து, பூஜைப் பாத்திரங்கள், ஹவிர் நிவேதனப் பாத்திரங்கள் ஆகிய அனைத்தையும் சுத்தம் செய்து, குறிப்பிட்ட அளவு சாதம், பாயஸம், க்ருஸரான்னம் (க்ருஸர: பயிறு), சர்க்கரைப் பொங்கல், யவான்னம் ஆகியவைகளைச் சமைக்க வேண்டும். அப்படி கிடைக்காவிடில் சாதம் மட்டுமாவது சமைக்க வேண்டும். பூஜைக் குரிய பொருள்களை தனித்தனியே சேகரித்து வைத்துக்கொண்டு, விஷ்ணு காயத்ரியைச் சொல்லி த்ருவபேரத்தின் பீடத்தைப்ரோக்ஷித்து, புஷ்ப ந்யாஸம் செய்து, ஸ்ரீதேவி, பூமிதேவி, ப்ரம்மா, சிவன், த்வாரதேவதைகள், பரிவார தேவதைகள் ஆகிய அனைத்தையும் நன்கு பூஜித்து, முக மண்டப வாயிலின் இடப் பக்கத்தில் ஸ்நாந பீடத்தில் விஷ்ணு, கௌதுகர் போன்ற ஐந்து பேரங்களையும் எழுந்தருளச்செய்து, பாத்யம், ஆசமனம், தாம்பூலம் போன்ற உபசாரங்கள் செய்து, எண்ணெய் தேய்த்து, மற்றும் பல பதார்த்தங்களைக் கொண்டு முறையே திருமஞ்சனம் செய்வித்து, எலுமிச்சம்பழம், புளி போன்ற புளிப்பான பதார்த்தங்களால் சுத்தம் செய்து விஷ்ணு மூர்த்தியை "இஷேத்வோர்ஜேத்வா" என்ற மந்திரத்தைச் சொல்லி நீரினால் நன்கு நீராட்டி, பின்பு சந்தன நீரினால் அபிஷேகம் செய்வித்து, புருஷ மூர்த்தியை "ஸஹஸ்ர சீர்ஷா" என்றுத் தொடங்கும் மந்த்ரத்தைக்கூறி அபிஷேகம் செய்வித்து, சத்ய மூர்த்தியை "விஷ்ணோர்னுகம்" போன்ற மந்த்ரத்தாலும், அச்யுத மூர்த்தியை "அதோதேவா" என்ற மந்த்ரத்தாலும் அநிருத்த மூர்த்தியை ஏகாக்ஷர ஸூக்தத்தாலும் நன்கு நீராட்டுவித்து, அந்தந்த இடங்களை நன்கு சுத்தம் செய்து உரிய இடத்தில் எழுந்தருளச் செய்ய வேண்டும்.

एवं कर्तुमशक्तश्चेत् पुरुषादि कौतुकानि विष्णुपञ्चक दिनेषु एवं संस्नापयेत् । विष्णोरादिमूर्तेः दक्षिणे मार्कण्डेयं वामे भृगुं च अभ्यर्च्य पूर्ववत् पुष्पन्यासं कुर्यात् । आवाहन पाद्याचमन स्नानार्थाश्चतस्रः प्रणिधीः संगृह्य साक्षतं कुश कूर्चं वा निक्षिप्य, अद्भिःप्रणवेन पूरयित्वा, देवस्य दक्षिण पार्श्वे पूर्ववदासीनः तद्बिम्बाद्दहिस्तिष्ठन्वा [ बिम्बाद्बहिस्तिष्ठन् वा ] आत्मसूक्तं जप्त्वा, मन्त्रन्यास, अक्षरन्यासौ कृत्वा, प्रणिधिमुद्धृत्य, ध्रुवात्प्रणिधिजले देवं भक्त्या पूर्ववत् ध्यात्वा, आवाह्य तद्व्याप्तं तोयं कूर्चेन आदाय "आयातु भगवा" निति कौतुक बिम्बस्य मूर्ध्नि विष्णुं आवाहयामि इति आवाह्य, तथा स्नपनोत्सव बलिबेरेषु समावाह्य च । दक्षिणे श्रियं, वामे हरिणीं च आवाहयेत् । "प्रतद्विष्णुः" इति पुष्पासनं दत्वा, "विश्वाधिकानां" इति स्वागतम् । "मनो-ऽभिमन्ता" इति अनुमानं, "त्रीणि पद" इति पाद्यम्, "शन्नोदेवीः" इति आचमनं, "तद्विष्णोरिति" पुष्पं, "तद्विप्रास" इति गन्धं, "परोमात्रया" इति धूपं, "विष्णोः कर्माणि" इति दीपं,

"त्रिर्देव" इति अर्घ्यं, पुर्ववदाचमनीयम् । "आपोहिष्ठा" इति स्नातायाऽभ्युक्षणं, "मित्रस्सुपर्ण" इति प्लोतं, तेजोवत्सव" इति वस्त्रं, "भूतोभूतेषु" इत्याभरणम् । "सोमस्य तनूरसि" इति उत्तरीयम्, "अग्निं दूतं इति उपवीतम्, पूर्ववत् पाद्याचमनादीनि दत्वा, "तदस्यप्रियमि"ति शुद्धोदनं निवेद्य द्वारपालादिभ्यो बलिं निर्वाप्य, होमं हुत्वा पूर्ववत् पानीयाचमन मुखवासं दद्यात् । एतान् सर्वान् मन्त्रान्ते चतुमूर्तिमन्त्रैः पञ्चमूर्ति मन्त्रैर्वा संयोज्य ददाति । "श्रियै जात" इति कर्पूर नीराजनं कृत्वा, मस्तिष्क प्रणामं कुर्यात् ।

இவ்வாறு செய்யமுடியாவிடின் புருஷ மூர்த்தி, கௌதுக மூர்த்திகளைப் பெருமாளுக்குப் ப்ரீதியான வாரத்தில் ஐந்து தினங்களில் (செவ்வாய், வெள்ளி தவிர) முன் சொன்னது போல நீராட்டம் செய்விக்க வேண்டும். ஆதி மூர்த்தியான விஷ்ணுவுக்கு வலக்கைப்புறம் மார்க்கண்டேயரையும் இடக்கைப் புறத்தில் ப்ருகுவையும் அர்ச்சித்து, முன்போலவே புஷ்ப ந்யாஸம் செய்ய வேண்டும். ஆவாஹன, ஆசமன, ஸ்நாநம் போன்ற ஐந்து பாத்ரங்களையும் எடுத்து அவற்றில் அக்ஷதையோ, தர்பையினாலான கூர்ச்சமோ சேர்த்து ப்ரணவ மந்த்ரத்தைச் சொல்லி நீரை நிரப்பி, பெருமாளுக்கு வலக்கைப்புறம் உட்கார்ந்தோ நின்றுகொண்டோ ஆத்ம ஸூக்தத்தை ஜபித்து மந்த்ர ந்யாஸம், அக்ஷர ந்யாஸம் ஆகியவை செய்து, ப்ரணிதி பாத்ரத்தை எடுத்துக் கொண்டு த்ருவபேரத்திலிருந்து ப்ரணிதி ஜலத்தில் பெருமாளை பக்தியுடன் முன்போலவே த்யானித்து ஆவாஹனம் செய்ய வேண்டும். இவ்வாறு த்யானித்து வைக்கப்பட்டுள்ள தீர்த்தத்தை கூர்ச்சத்தினால் எடுத்து "ஆயாது பகவான்" எனத் தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி கௌதுக பிம்பத்தில் "விஷ்ணும் ஆவாஹயாமி" என்று ஆவாஹணம் செய்ய வேண்டும். அவ்வாறே ஸ்நபனபேரம் உத்ஸவ பேரம், பலிபேரம் ஆகியவற்றிற்கும் ஆவாஹணம் செய்ய வேண்டும். வலக்கைப் பக்கம் ஸ்ரீதேவியையும், இடக்கைப்பக்கம் ஹரிணியையும் (பூமிதேவியையும்) ஆவாஹணம் செய்ய வேண்டும், "ப்ரதத் விஷ்ணுஸ்தபத" என்ற மந்த்ரத்தைச் சொல்லி புஷ்ப ந்யாஸம் செய்வித்து "விச்வாதிகானாம் எனத் தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி நல்வரவு நல்க வேண்டும். "மநோபிமந்தா" என்ற மந்த்ரத்தைச் சொல்லி அனுமதி யாசிக்க வேண்டும். "த்ரீணீபத" என்ற மந்த்ரத்தால் பாத்யம். "சந்நோதேவீ" என்ற மந்த்ரத்தால் ஆசமனம், "தத்விஷ்ணோ:" என்ற மந்த்ரத்தால் புஷ்பம், "தத்விப்ராஸ" என்ற மந்த்ரத்தால் சந்தனம், "பரோமாத்ரயா என்ற மந்த்ரத்தால் தூபம். "விஷ்ணோ: கர்மாணி என்ற மந்த்ரத்தால் தீபம், "திர்தேவ" என்ற மந்த்ரத்தால் அர்க்யம், முன்பு சொல்லப்பட்டது போலவே ஆசமனீயம், "ஆபோஹிஷ்டா" என்ற மந்த்ரத்தால் ஸ்நாநார்த்தம் ப்ரோக்ஷணம், "மித்ர: ஸுபர்ண" என்ற

மந்த்ரத்தைச் சொல்லி பெருமாளை துடைத்துவிட வேண்டும். "தேஜோ வத்ஸவ" என்ற மந்த்ரத்தைச் சொல்லி வஸ்த்ரம், "பூதோ பூதேஷு" என்ற மந்த்ரத்தால் ஆபரணம், "ஸோமஸ்ய தனூரஸி" எனத் தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி உத்தரீயம் (துண்டு), "அக்னிம் தூதம்" என்ற மந்த்ரத்தைச் சொல்லி யக்ஞோபவீதம், முன்பு சொல்லப் பெற்றது போலவே பாத்யம், ஆசமனம் சமர்ப்பிக்க வேண்டும். "ததஸ்யப்ரியம்" என்ற மந்த்ரத்தைச் சொல்லி சுத்தான்னம் நைவேத்யம் செய்ய வேண்டும். த்வார பாலகர்களுக்கு பலி சாதித்துவிட்டு ஹோமம் செய்து முன்போலவே பாநீயாசமனம், தாம்பூலம் ஆகியன சமர்ப்பிக்க வேண்டும். இவை அனைத்தும் இங்கு சொல்லப்பட்ட மந்தரங்களுக்குப் பிறகு சதுர்மூர்த்தி மந்த்ரங்களையோ, பஞ்சமூர்த்தி மந்த்ரங்களையோ சேர்த்து அர்ச்சிக்கச் செய்யவேண்டும். "ஸ்ரியை ஜாத" என்ற மந்த்ரத்தைச் சொல்லி கற்பூர நீராஜனம் சமர்ப்பிக்க வேண்டும். பிறகு [1] மஸ்திஷ்க ப்ரணாமம் செய்ய வேண்டும்.

## पुरूषस्य

अलीन्द्रे द्वारदक्षिणे पुरुषमर्चयेत् । पूर्ववत् पुष्पन्यासं कृत्वा, ब्रह्मशङ्करौ पूजकमुनी द्वारदेवान् द्वारपालांश्च अभ्यर्च्य, ध्रुवबेराद्देवीभ्यां सहैवावाह्य, आसनादीन् पूर्ववद्दत्वा, "योगे योगे" इत्याचमनम्, "आपोहिष्ठे"ति स्नानम्, इदमाप:शिवा" (हिरण्य गर्भ) इत्यर्घ्य "इह पुष्टि" इति कृसरं (पायसं) हविर्निवेद्य, प्रह्वाङ्ग (संपुट) प्रणामं कुर्यात् । एष विशेषोऽन्यत्सर्वं समानम् ।

வாயிலுக்கு வலப்பக்கத்தில் புருஷ மூர்த்தியை அர்ச்சிக்க வேண்டும். முன் போலவே புஷ்ப ந்யாசம் செய்து, ப்ரம்மா, சிவன், த்வார தேவதைகளை பூஜித்து, ஸ்ரீதேவி, பூதேவியுடன் சேர்த்து ஆவாஹணம் செய்து, ஆஸனங்கள் முன்போலவே சமர்ப்பித்து "யோகே யோகே" என்ற மந்த்ரத்தால் ஆசமனம் சமர்பித்து, "ஆபோஹிஷ்டா" என்ற மந்த்ரத்தால் ஸ்நாநம் செய்வித்து, "இதமாப: சிவா" என்ற மந்த்ரத்தால் அர்க்யம் சமர்ப்பித்து, "இஹ புஷ்டிம்" என்ற மந்த்ரத்தால் க்ருஸரான்னம் ஹவிர்நிவேதனம் செய்து [2] ப்ரஹ்வாங்க ப்ரணாமம் செய்ய வேண்டும். இவையே புருஷமூர்த்திக்கு விசேஷம். மற்ற அனைத்தும் சமம்.

---

1 மஸ்திஷ்கம் — நன்றாகத் தலையைக் குனிந்து வணங்குவது.

2 ப்ரஹ்வாங்கம் — கைகளைக் கட்டிக்கொண்டு முகமானது ஹ்ருதயத்தைப் பார்க்குமாறு குனிந்து வணங்குவது.

## सत्यस्य

दक्षिणे सत्यमर्चयेत् । पूर्ववत् पुष्पन्यासं कृत्वा, परिषद्देवान् ध्रुवबेरात् देवीभ्यां सहैव आवाह्य आसानादीनि पूर्ववद्दत्वा "योगे योगे" इति आचमनम्, "इदमापः शिवा" इति अर्घ्यम् । इह पुष्टिरिति कृसरं (पायसं) हविर्निवेद्य, संपुट (प्रह्वाङ्ग) प्रणामं कुर्यात् । एष विशेषः अन्यत् सर्वं समानम् ।

(பெருமாளுக்குத்) தெற்கில் சத்ய மூர்த்தியை அர்ச்சிக்க வேண்டும். முன் போலவே புஷ்ப ந்யாஸம் செய்ய வேண்டும். சுற்றியுள்ள தேவதைகளை த்ருவ பேரத்திலிருந்து ஸ்ரீதேவி பூதேவியோடு சேர்த்து ஆவாஹனம் செய்ய வேண்டும். ஆஸனங்கள் முன்போலவே சமர்ப்பித்து "யோகே யோகே" என்ற மந்த்ரத்தைச் சொல்லி ஆசமனம், "இதமாப: சிவா" என்ற மந்த்ரத்தைச் சொல்லி அர்க்யம், "இஹ புஷ்டிம்" எனத் தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி க்ருஸரான்னம் நிவேதனம் செய்து, * ஸம்புட நமஸ்காரம் செய்ய வேண்டும். இதுவே சத்யமூர்த்திக்கு விசேஷமாகும். மற்ற அனைத்தும் சமம்.

## अच्युतस्य

पश्चिमे अच्युतमर्चयेत् । पूर्ववत् पुष्पन्यासं कृत्वा परिषद्देवानभ्यर्च्य, देवीभ्यां सहैव आवाह्य, आसनादीन् पूर्ववद्दत्वा, "समाने वृक्ष" इत्याचमनं, "नारायणाय विद्महे" इत्यर्घ्यं समाववर्ति इति गौल्यं हविर्निवेद्य पञ्चाङ्ग प्रणामं कुर्यात् । एष विशेषः अन्यत् सर्वं समानम् ।

மேற்கில் அச்யுத மூர்த்தியை அர்ச்சிக்க வேண்டும். முன் போலவே புஷ்ப ந்யாஸம் செய்து, ஆவரண தேவதைகளை அர்ச்சித்து, ஸ்ரீதேவி, பூதேவியுடன் ஆவாஹணம் செய்து, ஆஸனங்கள் முன்போலவே செய்து, "ஸமானே வ்ருக்ஷ" என்ற மந்த்ரத்தைச் சொல்லி ஆசமனம். "நாராயணாய வித்மஹே" என்ற மந்த்ரத்தைச் சொல்லி அர்க்யம் சமர்ப்பிக்க வேண்டும். "சமாவவர்த்தி" என்ற மந்த்ரத்தைச் சொல்லி சர்க்கரைப்பொங்கல் ஹவிர் நிவேதனம் செய்து, ஐந்து அங்கங்கள் படும்படியாக நமஸ்காரம் செய்ய வேண்டும். இதுவே அச்யுத மூர்த்திக்கு விசேஷமாகும். மற்ற அனைத்தும் சமம்.

* ஸம்புடம் — கைகளைக் கூப்பி ஹ்ருதயத்திற்கு நேராக வைத்துக்கொண்டு வணங்குவது.

## अनिरूद्धस्य

उत्तरे अनिरूद्धमर्चयेत्, पूर्ववत्पुष्पन्यासं कृत्वा, परिषद्देवानभ्यर्च्य, ध्रुवबेराद्देवीभ्यां सहैवावाह्य, आसनादीन् पूर्ववत् दत्वा "पवित्रन्त" इत्याचमनम् । "कयानश्चित्र" इत्यर्घ्यं "त्रीणि पद" इति यावकं हविर्निवेद्य, दण्ड प्रणामं कुर्यात् । एष विशेषः अन्यत् सर्वं समानम् ।

வடக்கு புறத்தில் அநிருத்த மூர்த்தியை அர்ச்சிக்க வேண்டும். முன் போலவே புஷ்ப ந்யாஸம் செய்து, ஆவரண தேவதைகளை அர்ச்சித்து, த்ருவ பேரத்திலிருந்து ஸ்ரீதேவி, பூதேவியுடன் சேர்த்து ஆவாஹனம் செய்து, ஆஸனங்கள் முன்சொல்லப் பெற்றது போலவே சமர்ப்பித்து, "பவித்ரந்த" என்ற மந்த்ரத்தைச் சொல்லி ஆசமனம் சமர்ப்பிக்க வேண்டும். "கயானச் சித்ர" என்ற மந்த்ரத்தைச் சொல்லி அர்க்யம் சமர்ப்பிக்க வேண்டும். "த்ரீணிபத" என்றுத் தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி யவான்னத்தை நிவேதனம் செய்ய வேண்டும். பிறகு குச்சியைப் போன்று, உடலில் உள்ள அனைத்து அங்கங்களும் படும்படியாக பகவானை வணங்க வேண்டும். இதுவே அநிருத்த மூர்த்திக்கு விசேஷமாகும். மற்ற அனைத்தும் சமம்.

अपरितले च एक बेरोक्त विधिना पुष्पन्यासं कृत्वा, मन्त्रान्ते शयनादि नामभिः संयोज्य अर्चयेत् एष विशेषः अन्यत् सर्वं समानम् ।

அடுத்தபடியாக ஒரு பேர விதிப்படி புஷ்ப ந்யாஸம் செய்து, மந்த்ரத்தின் முடிவில் "சயன மூர்த்தி" போன்ற திருநாமத்துடன் சேர்த்து அர்ச்சிக்க வேண்டும். மற்ற அனைத்தும் சமம்.

स्नपनोत्सव बलिबेराणि षोडशोपचारैरभ्यर्चयेत्, अथवा तान् एकादशोपचारैः अभ्यर्च्य हविर्निवेदयेत् ।

ஸ்நபன, உத்ஸவ, பலி பேரங்களுக்கு பதினாறு உபசாரங்களைச் செய்வித்து அர்ச்சிக்க வேண்டும். அல்லது பதினொறு உபசாரங்களாவது சமர்ப்பித்து நிவேதனம் செய்யவேண்டும்.

परिषद्देवानष्टोपचारैरभ्यर्च्य हविर्निवेदयेत् ।

ஆவரண தேவதைகளுக்கு எட்டு உபசாரங்கள் செய்வித்து ஹவிர் நிவேதனம் செய்ய வேண்டும்.

विधिना बलिमाराध्य बलिबेरेण सहैव आलय प्रदक्षिणं कुर्यात् ।

முறைப்படி பலிபேரத்தை பூஜித்து, பலிபேரத்தோடுகூட கோயிலை ப்ரதக்ஷிணம் செய்ய வேண்டும்.

अर्धयाम - अर्चनान्ते ध्रुव बेरे देवं प्रणवेनारोपयेत् ।

அர்த்தயாம பூஜையின் முடிவில் மற்ற மூர்த்திகளிலிருந்து சக்தியை மீண்டும் த்ருவ பேரத்தில் ப்ரணவத்தினால் ஆரோபணம் செய்ய வேண்டும்.

एकतलप्रासादे पञ्च मूर्त्यर्चनं चेत् उपरि तलार्चनं विना पञ्चमूर्तीरर्चयेत् ।

ஒரே தளமுள்ள கோவிலில் ஐந்து மூர்த்தி பூஜை இருக்குமாகில் மேல் தள பூஜை இல்லாமல் ஐந்து மூர்த்தி பூஜை செய்ய வேண்டும்.

द्वारेषु यत्र क्वाप्यस्ति तत्र धात्रादीनर्चयेत् । गर्भालयात् द्वारदक्षिणे बलिन्दं वामे तुहुणं अलीन्द्र द्वार दक्षिणे मणिकं, वामे प्रभावतीं, मुख मण्डप द्वारदक्षिणे तापसं, उत्तरे सिद्धिदं, सोपान मध्ये श्रीभूतं बहिरास्यं, देवाभिमुखे गरुडम् ।

வாயில்களில் கதவுகள் இருப்பின் தாத்ராதி தேவதைகளை ஆவாஹனம் செய்தல் வேண்டும். கர்ப்பாலயத்தின் வாயிலின் தெற்குப் புறத்தில் பலிந்தம், வடக்குப் புறத்தில் துஹுணம், ப்ரதான வாயிலின் தெற்குப் புறத்தில் மணிகன், வடக்குப் புறத்தில் ப்ரபாவதியையும், மண்டப முகப்பு வாயிலில் தெற்குப் புறத்தில் தாபஸம், வடக்குப் புறத்தில் ஸித்திதம், படியின் மத்தியில் ஸ்ரீபூதம், வெளிமுகமாகப்பார்க்குமாறு த்யானித்தும், கருடனை பெருமாளைப்பார்த்துக்கொண்டு இருக்குமாறும் ஆவாஹனம் செய்ய வேண்டும்.

प्रथमावरणे चन्द्रादीन् तत्तत्स्थाने, इन्द्राग्न्योर्मध्ये गुहं, यम नीलयोर्मध्ये दुर्गां, नील वरुणयोर्मध्ये बुधं, वरुणोदानयोर्मध्ये बृहस्पतिं, सोमोदानयोर्मध्ये ब्रह्माणं, सोमेशानयोर्मध्ये विष्वक्सेनं, ईशानेन्द्रयोर्मध्ये भास्करं विमानं परितः प्रागादि चतुर्दिक्षु न्यक्षविवस्वन्मित्रक्षत्रं च ॥

முதல் ஆவரணத்தில் இந்திரனுக்கும் அக்னிக்கும் இடையில் குஹம், யமனுக்கும் நீலனுக்கும் இடையில் துர்க்கையை ஆவாஹனம் செய்ய வேண்டும். நீலனுக்கும் வருணனுக்கும் இடையில் புதனை ஆவாஹனம் செய்ய வேண்டும். வருணனுக்கும் உதானனுக்கும் இடையில் ப்ருஹஸ்பதியையும், ஸோமனுக்கும் உதானனுக்கும் இடையில் ப்ரம்மனையும், ஸோமனுக்கும் ஈசானுக்கும் இடையில் விஷ்வக்ஸேனரையும், ஈசானனுக்கும் இந்திரனுக்கும் மத்தியில் பாஸ்கரனையும் ஆவாஹனம் செய்யவேண்டும். விமானத்தைச் சுற்றி கிழக்கு முதலாகக் க்ரமமாக நான்கு திசைகளிலும் ந்யக்ஷன், விவஸ்வான், மித்ரன், க்ஷத்ரன் ஆகிய நால்வரையும் ஆவாஹனம் செய்யவேண்டும்.

प्रथमद्वार दक्षिणे किष्किन्धं, उत्तरे प्रजापतिम् ।

முதல் வாயிலின் தெற்குப் பக்கத்தில் கிஷ்கிந்தனையும், வடக்கில் ப்ரம்மாவையும் ஆவாஹனம் செய்ய வேண்டும்.

द्वितीय द्वार दक्षिणे विघ्नेशं, उत्तरे नागराजं, देवाभिमुखे, चक्रध्वज शङ्खयूथाधिपाक्ष-हनूमन् बहिर्मुखान् ।

இரண்டாவது வாயிலின் தெற்குப் புறத்தில் விக்னேஸரையும், வடக்கில் நாகராஜனையும் பெருமாளைப் பார்த்து திருமுக மண்டலம் இருக்குமாறும், சங்கு, சக்கரங்கள் வெளிமுகமாக இருக்குமாறும் ஆவாஹனம் செய்ய வேண்டும்.

तृतीयावरण द्वार दक्षिणे चक्रं उत्तरे शङ्खं, पुष्पसञ्चयस्थाने पुष्परक्षकं स्नानोदक पानीय सञ्चयस्थाने वरुणं, पचनागारे हविरक्षकम् ।

மூன்றாவது ஆவரணத்தில் வாயிலின் தெற்குப் புறம் சக்ரம், வடக்கில் சங்கு, புஷ்பங்களைச் சேகரித்து வைக்கப்பெற்றுள்ள இடத்திற்கு புஷ்பரக்ஷகனையும், பெருமாளுக்கு ஸ்நாநம் செய்விக்க, பாநீயம் சமர்பிக்கத் தேவையான நீரைச் சேமித்து வைக்கப் பெற்றுள்ள இடத்தில் வருணனையும் ஆவாஹனம் செய்ய வேண்டும். மடப்பள்ளியில் (சமயலறையில்) ஹவிரக்ஷகனை ஆவாஹனம் செய்ய வேண்டும்.

चतुर्थावरण द्वारे चन्द्रादित्यौ च एतान् पञ्चाशद्देवानर्चयेदित्येके ।

நான்காவது ஆவரண வாயிற்புறத்தில் சந்த்ரன், சூரியன் மற்றும் 50 தேவதைகளை அர்ச்சிக்க வேண்டும் என்பது சிலவரபிப்ராயம்.

इति श्रीवैखानसे मरीचिप्रोक्ते विमानार्चनकल्पे अयुतग्रन्थ संहितायां नवषट्पञ्चमूर्ति - अर्चनाविधिर्नाम चतुश्चत्वारिंशः पटलः ॥

இவ்வாறு ஸ்ரீவைகானஸத்தில் மரீசியால் சொல்லப்பட்ட விமானார்ச்சன கல்பத்தில் ஒன்பது, ஆறு, ஐந்து பேர பூஜை விதி என்பதாக நாற்பத்தி நான்காவது படலம் முற்றும்.

# மாமன்னர் சரபோஜியின் மனதில் நிறைந்த கங்கை

**கே. இராமதிலகம்,** B. A., M. L. I. S.,
*நூலகர்.*

---

தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்களுள் சிறப்பு வாய்ந்தவர் இரண்டாம் சரபோஜி மன்னர் என்பது மிகையாகாது. இவர் தல யாத்திரை யாகச் சோழ நாட்டிலுள்ள பல இடங்களுக்கும் மற்றும் வடநாட்டில் காசிக்கும் யாத்திரை சென்று வந்துள்ளார். , இதுபோன்று யாத்திரை சென்றுவர முன்னதாகவே பயணத்திட்டம் வகுத்திருந்தார் என்பதற்குப் பல ஆவணச் சான்றுகள் உள்ளன. தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் உள்ள மோடி ஆவணம் 188சென்ற எண் கொடுக்கப்பட்டுள்ள முட்டையில் உள்ள காகிதச்சுவடி மற்றும் மோடி பதிவேடு 10ஆம் தொகுதியிலிருந்து காசியாத்திரை பற்றிய செய்திகள் அறிய வருகின்றன.

இவர் 1820ஆம் ஆண்டில் யாத்திரை புறப்பட்டு இருக்கிறார் என்பதனையும் கீழே குறிப்பிட்டுள்ள இடங்களில் முகாமிட்டிருந்தமையையும் மோடி பதிவேடு மூலம் அறிய முடிகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1820 | காசி யாத்திரை | | |
| 1820 | அக்டோபர் | 5ந்தேதி | விருத்தாசலம் |
| ,, | ,, | 23ந்தேதி | நஞ்சலி |
| ,, | நவம்பர் | 2 ,, | குண்டூர் (நெல்லூர்) |
| ,, | ,, | 7 ,, | வங்கோல் |
| ,, | ,, | 9 ,, | ராசபுடி |
| ,, | ,, | 20 ,, | பெஜவாடா |
| ,, | ,, | 24 ,, | வேளூர் (பந்தர்) |
| ,, | டிசம்பர் | 2 ,, | நண்டி மாவடி |

| | | | | |
|---|---|---|---|---|
| 1820 | டிசம்பர் | 14 | ,, | விஜயநகரம் |
| ,, | ,, | 21 | ,, | சுராமுகம் (கஞ்சம்) |
| ,, | ,, | 30 | ,, | கஞ்சம் |
| 1821 | ஜனவரி | 2 | ,, | ப்ரயாக |
| ,, | ,, | 4 | ,, | மிர்குவா (மிட்டாகூப்) |
| ,, | ,, | 7 | ,, | நரசிங்கபட்டணம் |
| ,, | ,, | 8 | ,, | ஶ்ரீ ஜகன்னாத |
| ,, | ,, | 12 | ,, | ஜன்னாத் |
| ,, | ,, | 14 | ,, | அம்ருதப்பூர் |
| ,, | ,, | 17 | ,, | கடக் |
| ,, | ,, | 18 | ,, | கடக் |
| ,, | ,, | 20 | ,, | கடக் |
| ,, | ,, | 29 | ,, | லோகரா |
| 1821 | பிப்ரவரி | 3 | ,, | பட்ணா - மஹம்மதுகமர |
| ,, | ,, | 10 | ,, | மேதினிபுரம் |
| ,, | ,, | 12 | ,, | மேதினிபூர் |
| ,, | ,, | 20 | ,, | மூவர்பட்டி |
| ,, | ,, | 23 | ,, | ஸல்காகாட் |
| ,, | ,, | 24 | ,, | ,, |
| ,, | ,, | 26 | ,, | கல்கத்தா |
| ,, | ,, | 27 | ,, | ,, |
| ,, | ,, | 28 | ,, | ,, |
| ,, | மார்ச் | 2 | ,, | ,, |
| ,, | ,, | 5 | ,, | ஸல்காகாட் |
| ,, | ,, | 6 | ,, | சில்காகாட் |
| ,, | ,, | 8 | ,, | ஶ்ரீராம்பூர் |
| ,, | ,, | 9 | ,, | கைரகடி |
| ,, | ,, | 10 | ,, | கைரஷ்டி |
| ,, | ,, | 12 | ,, | மிர்ஜாபூர் |
| ,, | ,, | 15 | ,, | படலி |

| | | | | |
|---|---|---|---|---|
| 1821 | மார்ச் | 17 | ,, | முஸதாபாத் |
| ,, | ,, | 18 | ,, | தாமணியா |
| ,, | ,, | 23 | ,, | ஹஸீம்பூர் (புருவி-புரஸ்தாபாத்) |
| ,, | ,, | 31 | ,, | கதலிதாவ் |
| ,, | ஏப்ரல் | 18 | ,, | ஹஸன் கஞ்ச் |
| ,, | ,, | 24 | ,, | கயை |
| ,, | மே | 4 | ,, | கயை |
| ,, | ஜூன் | 21 | ,, | சாஹேப்கஞ்ச் |
| ,, | ,, | 28 | ,, | சிரஸ் |
| ,, | ,, | 31 | ,, | தலேஸ்வர |
| ,, | ஜூலை | 10 | ,, | காசி |
| ,, | ,, | 12 | ,, | காசி |
| ,, | ,, | 18 | ,, | காசி |
| ,, | ,, | 25 | ,, | காசி |
| ,, | ஆகஸ்டு | 6 | ,, | ,, |
| ,, | ,, | 21 | ,, | ,, |
| ,, | ,, | 29 | ,, | ,, |
| ,, | செப்டம்பர் | 11 | ,, | ,, |
| ,, | அக்டோபர் | 4 | ,, | ,, |
| ,, | ,, | 19 | ,, | உனே |
| ,, | ,, | 26 | ,, | மஹத்காவ் |
| ,, | ,, | 30 | ,, | ஹீராபூர் |
| ,, | ,, | 31 | ,, | பிரயாகை |
| ,, | நவம்பர் | 15 | ,, | பந்தா |
| ,, | ,, | 16 | ,, | பந்தா |
| ,, | ,, | 26 | ,, | மஹத்காவ் |
| ,, | ,, | 30 | ,, | ஹிராபூர் |
| ,, | டிசம்பர் | 26 | ,, | ஹீஸங்காபாத் |
| ,, | ,, | 28 | ,, | ,, |
| ,, | ,, | 30 | ,, | கேசலா சௌகீ |

| | | | | |
|---|---|---|---|---|
| 1822 | ஜனவரி | 3 | ,, | போடின |
| ,, | ,, | 4 | ,, | போலூன் |
| ,, | ,, | 5 | ,, | இங்கள்காட் |
| ,, | ,, | 7 | ,, | நாக்பூர் – யேஹீயா |
| ,, | ,, | 12 | ,, | நாக்பூர் |
| ,, | ,, | 14 | ,, | ,, |
| ,, | ,, | 22 | ,, | கயா |
| ,, | ,, | 26 | ,, | இங்கண்காட் |
| ,, | ,, | 31 | ,, | யதலாபாத் |
| ,, | பிப்ரவரி | 1 | ,, | கலிபேட் |
| ,, | ,, | 3 | ,, | கூடூர் |
| ,, | ,, | 7 | ,, | நீம்ருள் |
| ,, | ,, | 8 | ,, | மலிபேட் |
| ,, | ,, | 10 | ,, | இராமாபேட் |
| ,, | ,, | 15 | ,, | ஸம்மனுபாத் |
| ,, | ,, | 16 | ,, | ஹாபாத் |
| ,, | ,, | 20 | ,, | கைன்ஸாபாச் |
| ,, | ,, | 29 | ,, | பாகாடூர் |
| ,, | மார்ச் | 6 | ,, | சந்தியால் |
| ,, | ,, | 8 | ,, | கடப்பா |
| ,, | ,, | 20 | ,, | செட்டிகுண்டா |
| ,, | ,, | 21 | ,, | திருப்பதி |
| ,, | ,, | 25 | ,, | காளஹஸ்தி |
| ,, | ,, | 27 | ,, | புதூர் |
| ,, | ,, | 28 | ,, | புத்தூர் |
| ,, | ,, | 30 | ,, | திருத்தணி |
| ,, | ஏப்ரல் | 2 | ,, | காஞ்சிபுரம் |
| ,, | ,, | 3 | ,, | ,, |
| ,, | ,, | 7 | ,, | ரட்லூர்-ரடனே |
| ,, | ,, | 9 | ,, | விழலூர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 1822 | ஏப்ரல் | 10 | பணிஉருட்டி (பண்ருட்டி) | |
| ,, | ,, | 13 | பெரமாபூர் (பிரம்மபுரம் எனும் சீர்காழி) | |
| ,, | ,, | 18 | மாயோர் (மாயூரம்) | |
| ,, | ,, | 22 | திருவாதி (திருவையாறு) | |
| ,, | ,, | 23 | ,, | |
| ,, | ,, | 26 | முக்தாம்பாபுரம் | |
| ,, | ,, | 27 | பட்டுக்கோட்டை | |
| ,, | ,, | 28 | மோஹனம்பாபுரம் | |
| ,, | ,, | 29 | சுலக்ஷணாம்பாபுரம் | |
| ,, | ,, | 30 | ,, | திராளபதாம்பாபுரச்சத்திரம் |
| ,, | மே | 1 | ,, | இராஜகுமாரம்பாபுரம் |
| ,, | ,, | 2 | ,, | மீனமேஸல் சத்திரம் |
| ,, | ,, | 4 | ,, | நவபாஷாணம் |
| ,, | ,, | 5 | ,, | ஆதங்கரைப்பட்டணம் |
| ,, | ,, | 9 | ,, | இராமேஸ்வரம் |
| ,, | ,, | 10 | ,, | ,, |
| ,, | ,, | 11 | ,, | மைகுடாம் |
| ,, | ,, | 13 | ,, | நவபாஷாணம் |
| ,, | ,, | 14 | ,, | ஹீரோஜீ இங்களே சத்திரம் |
| ,, | ,, | 15 | ,, | காலய நேர் |
| ,, | ,, | 16 | ,, | ராஜகுமாராம்பாபுரம் |
| ,, | ,, | 18 | ,, | சாளுவநாயக்கன்பட்டினம் |
| ,, | ,, | 19 | ,, | ,, |
| ,, | ,, | 20 | ,, | பட்டுக்கோட்டை |
| ,, | ,, | 21 | ,, | முக்தாம்பாபுரசத்திரம் |

மேற்குறிப்பிட்ட குறிப்புகளிலிருந்து விருத்தாசலம் வழியாக ஆந்திரா ஒரிஸ்ஸா சென்று அங்கிருந்து கல்கத்தா பின்னர் கயை, காசி சென்று நாக்பூர் வழியாக கடப்பா, திருப்பதி, திருத்தணி, காஞ்சிபுரம், விழலூர் பண்ருட்டி, சீர்காழி, மாயூரம், திருவையாறு அடைந்து பின் முக்தாம்பா புரம், பட்டுக்கோட்டை, மீமிசல், இராமேஸ்வரம் சென்று பின்னர் பட்டுக்

கோட்டை, முக்தாம்பாபுரம் வழியாகத் தஞ்சையை வந்தடைந்தார் என்பது புலப்படுகிறது.

மாமன்னர் சரபோஜி தன்னுடன் 3000 நபர்களையும் அழைத்துச் சென்றுள்ளார். மருத்துவர், சித்திரகாரர், பண்டிதர்கள் மற்றும் பணியாட்கள் இப்படிப் பரிவாரங்களுடன் அவர் பயணம் சென்று வந்துள்ளார், இதனை "முகாப்—முங்கேரா சமீபம் ஹசன் சஞ்க்" யாத்திரையுடன் 300 ஜனங்கள் வந்திருக்கிறார்கள். அவர்களுடைய யோக க்ஷேமம், வெயில் மழை, பனியினால் காயலாவாகிறது (உடல் நலக்குறைவு) அவர்களுக்கு போற்றிக் கொள்ளக் (போர்த்திக் கொள்ள) கம்பளிகள் வகையறா வாங்குகிறது, பாரம் தூக்க யானைகள், ஒட்டகங்கள் வாங்குகிறது, வண்டிகள் பார வண்டிகள், மாடுகள் வாடகைக்கு வாங்குகிறது முதலிய காரணங்களால் செலவு ஜாஸ்தி (அதிகம்) ஆகிறது என்று விஸ்தாரமான கடிதம் குறிப்பிடுவதிலிருந்து மன்னருடன் சென்ற பணியாட்கள் பற்றிய விவரங்கள் தெளிவாகப் புலப்படுகின்றன.

அவர் பயணத்தின்போது தன் கண்ணால் கண்டு களித்ததைத் தன் ராஜ்யத்திலுள்ளவர்களும் காண விரும்பிப் பல சித்திரங்கள் தீட்டச் செய்துள்ளார். மேலும் பூக்கள், கனிகள் போன்றவற்றின் விதைகளைச் சேகரித்து எடுத்து வந்துள்ளார் என்பதையும் மோடி ஆவணங்களிலிருந்து அறிய முடிகிறது.

தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தின் அருங்காட்சியகக்கூடத்தில் வைக்கப்பட்டுள்ள ஓவியங்களுள் கங்கைக்கரையைப்பற்றிய வண்ணப்படம் ஒன்று உள்ளது. இந்த வண்ணப்படம் 1822இல் மாமன்னர் சரபோஜியின் காசியாத்திரையின்போது கங்கைக்கரையின் அழகை வருணிக்கும் வகையில் வரையப்பட்ட வண்ண ஓவியங்களில் இதுவும் ஒன்றாக இருக்கலாம்.

### 1821 ஆம் ஆண்டு மே மாதம் 4-ஆம் தேதி முகாம் — கயை

"ஸ்ரீஜகந்நாத க்ஷேத்திரத்திலிருந்து புறப்பட்ட பிறகு ஸல்கா காட்டிலிருந்து பாகல்புரம் வரையிலும் கங்கையின் கரையிலே கரைக்குக்கரை தங்கி வரும்பொழுது கங்கைக் கரையின் ஒவ்வோர் இடத்தின் அழகையும் எடுத்துச்சொல்ல இயலாதது போலிருக்கிறது" என்று குறிப்பிடுகிறார்.

1821 மே மாதத்திலிருந்து 1821 அக்டோபர் மாதம் வரை காசியிலேயே முகாமிட்டிருந்தார் என்பதும் குறிப்புகளிலிருந்து தெரியவருகின்றது.

பொதுவாகக் கங்கைக் கரையின் இருமருங்கும் "சோலைகளும், வனங்களும் அடர்ந்து அமைதியும், குளிர்ச்சியும் தனிமையும் குடிகொண்டிருக்கும், எழிலார்ந்த இப்பிரதேசத்தை நாடி வருபவர்கள் பலர். இங்கே பர்ண சாலைகளும், குடில்களும், ஆசிரமங்களும், பௌத்த, சமண விஹாரங்களு மிருக்கும். வேத கோஷங்களும், மந்திர கோஷங்களும் நிறைந்த சப்த புரிகளிலொன்றான காசியில் தான தருமம் செய்வதும் கங்கையில் நீராடுவதும் சிறப்பு வாய்ந்தது.

கங்கை பாயுமிடம் யாவராலும் தூய்மையானதாகக் கருதப்பட்டபடியால் கங்கைக் கரையில் பண்டைக்காலங்களில் முனிவர்களின் ஆசிரமங்களும், தவச்சாலைகளும் இக் காலத்தில் கங்கைக் கரையில் திருப்பதிகளாகவும், புனித தீர்த்தங்களாகவும் கருதப்படுகின்றன. இதற்கு "சித்தநதி" என்றும் பெயர். இப்படிக் கங்கையின் அழகை வண்ண ஓவியங்களாகத் தீட்டப்பெற்ற ஓர் ஓவியம் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தின் காட்சிக் கூடத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்த ஓவியத்தின் அகலம் 35 செ. மீ. நீளம் 69 செ. மீ. 8 படங்கள், 16 பக்கங்களைக் கொண்டுள்ளது. இதன்கண் 64 புண்ணியப் படித்துறைகளின் பெயர்கள் நாகரி எழுத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

ராம் நகருக்கு அப்பால் வடகிழக்காகத் திரும்பும் இந்நதியின் ஆழமும், அகலமும் அதிகம். வாருணா, அசி என்ற இரு நதிகள் கலக்கின்றன. இந்த இடம் அசி சங்கமம் என்று அழைக்கப்படுகிறது. இந்த அசி சங்கமத்தில் ஆரம்பித்து 64 படித்துறைகளும் உள்ளது. உயரமான கரைகளின் இரு மருங்கும் பசுமையான அடர்ந்த மரங்கள் சிறு கோவில்கள், உயர்ந்த படித்துறைகள் பரந்து விரிந்து செல்லும் நீர்ப் பிரவாகம் கண்ணிற்குக் குளர்ச்சியும் மனதுக்கு அமைதியும் தருவனவாக இவ் ஓவியம் அமைந்துள்ளது. இது வரையப்பட்டுள்ள பேப்பர் Hand-made Paper.

கீழே குறிப்பிட்டுள்ளபடி கரைகளின் பெயர்கள் உள்ளன.

| | | | |
|---|---|---|---|
| १. | असीसंगम | ९. | नारदघाट |
| २. | राजाबच्छराजघाट | १०. | केदारघाट |
| ३. | शिवलयघाट | ११. | रुकमांगदेश्वर घाट |
| ४. | अक्रूरघाट (मुरु) | १२. | क्षेमेश्वरघाट |
| ५. | पाछाघाट | १३. | मानससरेश्वरघाट |
| ६. | दंडीघाट | १४. | नारदेवरघाट |
| ७. | हनुमंतघाट | १५. | अमृतरावघाट |
| ८. | स्मशानघाट | १६. | सवेश्वरघाट |

१७. पाडघाट
१८. चौसष्टीघाट
१९. राणाघाट
२०. केबलागरघाट
२१. नागपुरमुनषीघाट
२२. दुशाश्वमेघघाट
२३. अहलयावार्दघाट
२४. दनुश्वमेघघाट
२५. प्रागघाट
२६. राजामानसिंगघाट
२७. सोमेश्वरघाट
२८. प्रिपुरश्रौखघाट
२९. मीरघाट
३०. ललीताघाट
३१. श्र्बानिगिरीसिघृघाट
३२. प्रिसंघ्पेश्वरघाट
३३. जलशाईघाट
३४. स्मानूनघाट
३५. मणिकर्धिकाघाट
३६. तारकश्वरघाट
३७. संकटाघाट
३८. नागेश्वरघाट
३९. जंघाट
४०. नागपुरभोंसले घाट
४१. अमृतरावनवा घाट
४२. रासघाट
४३. चोकेश्वरघाट
४४. चोरघाट
४५. पंचगंगाघाट
४६. बिदमा धवघाट
४७. मसीद घाट
४८. ब्रह्म घाट
४९. गुर्गघाट
५०. राजमंदिरघाट
५१. सितळाघाट
५२. गोकर्णघाट
५३. मेहताघाट
५४. गौघाट
५५. बाळबार्दघाट
५६. गोकर्णघाट
५७. त्रिलोचनघाट
५८. तेलियानालेकाघाट
५९. नरसिंगघाट
६०. प्रह्लायघाट
६१. राजघाट
६२. वरुणासंगमघाट
६३. करकविनायक मंदिर
६४. श्रीदोत्तगया—विष्णुपाद—गर्भगृह

மேற்கண்ட குறிப்புகளால், நமது நூலகக் காட்சிக் கூடத்தில் வைக்கப்பட்டுள்ள கங்கைக் கரை பற்றிய வண்ண ஓவியமானது மாமன்னர் சரபோஜி அவர்கள் தம் கண்ணால் கண்டுகளித்து அவர்தம் மனத்தில் நிறைந்த கங்கைக் கரையின், காணக்கிடைக்காத அரிய ஓவியத்தொகுப்பு என்பதை அறிய முடிகின்றது.

# திருநாவுக்கரசு சுவாமிகள் சரித்திரச் சுருக்க அகவல்

திருமதி **ச. திலகம், பி. லிட்.,**
தமிழ்ப்பண்டிதர்.

---

முன்னுரை :

பக்தி இலக்கிய வரலாற்றில் மூவர் முதலிகள் எனச் சிறப்பிக்கப்பெறும் தெய்வத்தமிழ்ச் சான்றோர்களில் ஒருவரே அப்பர் எனப்பெறும் திருநாவுக்கரசர் ஆவார். தாண்டக வேந்தராகவும், உழவாரப் படையாளியாகவும் போற்றப்பெறும் இவர், தென்னார்க்காடு மாவட்டத்தில் திருவாமூரில் வேளாளர் குலத்தில் புகழனார்க்கும், மாதினியார்க்கும் மகவாகத் தோன்றினார். இவரது இயற்பெயர் மருணீக்கியார் என்பதாகும். இவர் பெற்றோர்களை இளமையில் இழந்து, தமக்கை திலகவதியாரின் ஆதரவில் வளர்ந்தார். சமணமதம் புகுந்து தருமசேனர் எனப்பெயர் பூண்டார். பின் நோயால் அல்லல் உற்றுத் தமக்கையை அடைய, அவண் சிவபெருமானைப் பாடிப் பராவி வேண்டி நோய் நீங்கப் பெற்றார். சைவ சமயத்திலும் சேர்ந்தார். இவர் பாடிய பக்திப் பாடல்கள் சைவத்திருமுறைகள் பன்னிரண்டில் 4, 5, 6 ஆம் திருமுறைகளாக அமைந்துள்ளன.

இறைவனை இவர் தலைவன்பால் ஊழியனுக்குள்ள, அன்பு முறையாகிய தாச மார்க்கத்தில் நின்று வழிபட்டவர் என்று ஆன்றோர் கூறுவர். இவருடைய காலம் 7-ஆம் நூற்றாண்டாகும். சம்பந்தரும், இவரும் ஒரே காலத்தவர்.

சரசுவதி மகால் நூலகத்தின் தமிழ்த்துறையில் திருநாவுக்கரசரின் வாழ்க்கை வரலாற்றை அகவல் வடிவில் கூறும் ஏடுகளைக் கொண்ட சுவடி ஒன்று "திருநாவுக்கரசு சுவாமிகள் சரித்திரச் சுருக்கம்" என்னும் தலைப்பில் (சுவடி எண். 1200) உள்ளது. அதில் இடம்பெற்றுள்ள "திருநாவுக்கரசு சுவாமிகள் சரித்திரச் சுருக்க அகவல்" இந்தப் பருவ இதழில் வெளியிடப்

பெறுகின்றது. இந்தச் சரித்திரச் சருக்க அகவல் "பர்வத சஞ்சீவி அய்யர்" என்பவர் செய்ததாகும். எளிய நடையில் இலங்கியும் செய்யுள் வார்ப்பில் சிறந்தும், திகழுவதாகும் இது.

சீரது நிறைந்த பேரது மிகுந்த
கேடில் திருமுனைப் பாடிநா டதனில்
வளர்வே ளாளர் வம்சத் தில்வாழ்
அளிசேர் புகழ னாரின் மனைவியின்
திருவயிற் றினிலோர் சேயன் உதிக்கப்
பிதாஇவ ருக்குப் பிரியத் துடனே
இருமருள் நீக்கி யாரென நாமம்
திறமாய் வைத்துச் சிலநாள் பொறுத்து
மனைவியுந் தானும் மரணம் அடைந்தார்;
பின்அச் சுதனும் பெருமை மிகுந்த
பாடலி புரம்போய்ச் சமணர் பள்ளிக்
கூடத் தடைந்து குறைவில் லாநூல்
அறிந்தச் சமணர்க் காசா னாகித்
தரும சேனா சாரி யெனப்பேர்
பெற்றே யிருந்தார்; இவர்முன் பிறந்த
சிற்றிடை யுள்ள திலக வதியார்
திருவதி கைபோய்ச் சிவனை வணங்கி
என்தம் பியைஇச் சிவமதம் அதனில்
எய்தும் படிநீ செய்துவை யென்ன
அதிகைப் பதிவாழ் அரனதைக் கேட்டு
அதிகச் சூலையை அப்பர்க் களித்து
அதிகத் துன்ப மதைச்செய் விக்க
மதியுள சமணர் மந்தரஞ் செபித்தும்
நோய்மிக வாகஅந் நோய்தா ளாமல்
ஆயுங் குணத்து அப்பருந் தனது
ஆவி போகுமென் றப்போ தறிந்து
காவிப் புஞ்சங் கமண்ட லங்களைக்
கழித்தே வருந்தனைக் காணா திருக்க
மிகுந்த இருளிலம் மேதினி விட்டு
வளரும் நிசியில் வழியைக் கடந்து
திருவதி கையினில் சேர்ந்து தமக்கை
திருவடி யதனிற் செவையாய் வீழ்ந்து
எழுந்துஅவள் தந்த திருநீ றிட்டுச்
சூலை தீர்ந்து சுகத்தை அடைந்து

மறுநாள் பரமன் மன்னுங் கோயில்
அதனிற் சென்றே அரனைப் பணிந்து
பரமன் அருளால் பதிகம் பாடித்
திருநா வுக்கர செனத்திரு நாமம்
திறமாய்ப் பெற்றுச் சிவதொண் டுகளை
உரமா கச்செய் துறைந்தனர்; அதனைப்
பாடலி புரத்திற் கேடில் லாத
சமணர் கேட்டச் செய்தியைத் தங்கள்
மன்னவ னுக்கு வாயால் சொல்ல
அரசன் கோபங் கொண்டக் கணமே
தூதரை அதிக துரிதம தாகத்
திருவதி கைக்குச் செல்ல அனுப்பி
அப்பரை அழைத்துத் தப்புகள் சுமத்தித்
தப்பில் லாத அப்பமூர்த் தியரை
வளர்நீற் றறையில் வைத்துச் சுட்டும்
வீயா ததனை மெய்யாய் அறிந்தும்
பாலோ டன்னம் பாம்பின் விடமும்
சேர்த்தவர்க் கிட்டுத் தின்னச் செய்தும்
உயிரோ டிருப்பதை உற்றுப் பார்த்துக்
கரியின் காலால் மெறிக்கச் செய்தும்
அவர்சா காமல் இருப்பதை அன்று
சினத்துடன் நோக்கித் தீவர மதனில்
கருங்கல் தூணிற் கட்டிக் கடலில்
போட அவர்அப் போது சிவனைப்
பாடிப் பணிந்து பாதிரிப் புலியூர்
சேர்ந்து சிவனைத் தினமும் பணிந்து
பேர்ந்தே பலதலம் பேணிப் பணிந்து
அதிகை யினில்வந் தமணரை யெல்லாம்
சைவர்க ளாக்கித் தானதை விட்டுத்
திருத்தூங் கானை மாடஞ் சென்று
அன்பா யேற்றி அரனைப் பணிந்து
இடபஞ் சூலம் இருமுத் திரையைத்
திடமுள சிவனால் செய்யப் பெற்றுச்
சீர்கா ழிப்போய்ச் சிவசம் மந்த
மூர்த்தியைக் கண்டு முகமன் கூறி
அவரொடு வெகுநாள் அங்கே யிருந்து
அப்பால் பலதலம் அதனிற் சென்று
தப்பா மல்அரன் தனைப்ப ணிந்து
திங்க ளூரினிற் சென்றப் பூதி

நாயனா ரவரை நன்றாய்க் கண்டு
அமுது செயவிருந் தப்போ திறந்த
சுதனை எழுப்பிக் கொடுத்துப் புசித்துச்
சிவதலத் திற்போய்ச் சிவனைப் பணிந்து
சம்பந் தருடன் தானுங் கூடி
வீழி மிழலையில் மேலாய்ச் சென்று
தாழ்ந்து சிவனடி வீழ்ந்து பணிந்து
பஞ்ச காலத்திற் பரமன் அளித்த
பொன்கா செடுத்தப் போதே விற்றுச்
சிவனடி யார்க்குத் திருவமு திட்டுத்
திருமறைக் காட்டிற் சென்றே மூடிய
பெரிய கவாடந் தனைத்திறப் பித்துப்
பின்பல தலங்கள் பேணிப் பணிந்து
வழியிற் பரமன் வந்து கொடுத்த
அன்ன மதனை அன்பாய்ப் புசித்துக்
கைலை சென்று கடவுளை வணங்க
நிலையாய் மனதில் நினைத்து நடந்து
காலும் ஓய்ந்து கையும் அயர்ந்து
மாரால் நகர்ந்து மாருந் தேய்ந்து
வலியும் இழந்து வழியி லிருந்து
முன்போல் வந்த முதல்வனைக் கண்டு
அவனால் அங்குண் டான குளத்தில்
அவனுத் தரவால் அமர்ந்து முழுகி
அவன்சொற் படிக்கே திருவை யாற்றிற்
சென்று கைலை தெரிசனங் கண்டு
பின்பு சிவதலம் பேணிப் பணிந்து
திருப்பூம் புகலூர் சென்று சிவனைப்
பாடிப் பத்தி யுடனே பணிந்து
சிவனடி யதனில் சேர்ந்திருந் தனரே.

**அப்பர் சுவாமிகள் சரித்திரச் சுருக்க அகவல்**

**முற்றும்.**

# An Introduction to
# MODI DOCUMENTS

**R. VIVEKANANDA GOPAL,**
MODI EXPERT.

---

**INTRODUCTION:**

'Modi' (मोडी) is a Marathi word routed from 'Modane' (मोडणे) means 'to break'. Modi is a type of script used for Marathi language during the time of Yadavas of Devagiri. Hemadpant, the minister of Ramadev Yadav and Mahadev Yadav, developed this type of script by the way of breaking the devanagari script used for Sanskrit language in those days.

Modi script was used to write the political records, letter correspondences, daily diaries, accounts etc., of Maratha rulers of Maharashtra and outside. There are various stories about the development of the script. But originally the Maharashtrians developed this script from Persian source. Persian language had two types of scripts. The 'Nastalik' script was used for common writing and the 'Shikasta' script was used for speedy writing. The 'Shikasta' is like a short-hand writing. The word 'Shikasta' itself means 'broken' and the same meaning is applicable to 'Modi' also.

Modi script is written continuously without break. The short and long vowels have no difference in writing. The reader

has to develop the skill of reading modi scripts by using his presence of mind.

**DATING SYSTEM :**

Four types of dating systems are used in the Modi documents. They are :

1. Shalivahan Year.
2. Suhur Year.
3. Fasali Year and
4. Kali Yuga.

These four types of dating systems are not used in one and same. They also used the South Indian months as well as North Indian months. There are 15 days difference between the South Indian and North Indian Calendar. So, the reader must be very clear about the calendar systems. By adding a particular number we can convert those years into Christian year. For Shalivahan year we should add No. 78, for Suhur Year 599, for Fasali Year 590, and for Kaliyuga we have to deduct No. 3102. And also we can use the Ephimeris for the conversion. The Samikannu pillai Ephimeris can be used only for the conversion of South Indian calendar. To convert the North Indian Calendar, there are two Ephimeris in Marathi called 'Modak Jantri' and 'Khare Jantri'.

**ABBREVIATIONS :**

It is quite natural for a writer to use abbreviations in a continuous writing. In modi records also we can found so many abbreviations used throughout the texts. Every abbreviation has its own meaning and the scholar must be clear in knowing these

things. Particularly, in Thanjavur modi, new abbreviations also used according to the repeated usage of words.

e. g. पाो — पाठविले; पौ — पैकी; पैवस्ती

**EMBLEMS AND SEALS :**

Emblems and seals are used in the Modi documents. The Emblem of the ruler is placed in the begining of the political records. Normally there are other seals placed at the end of the letters or documents. Some words are inscribed in these seals to denote the end of the document. They are **'लेखन सीमा'** and **'मर्यादेय विराजते'** The rulers emblems were in the shape of six angles or eight angles.

**USAGE OF FOREIGN WORDS:**

Hindustani and Persian words were frequently used in the modi documents, available in Maharashtra. Because, during 15th and 16th century, Maharashtra was under the control of Mogul empire. Moguls patronised the persian language. Like that, Tamil was a spoken language during the Marathas of Thanjavur. So, so many Tamil words were often used in the Modi documents of Thanjavur.

e. g. पडतोरा (T) படித்துறை; काणी वाक्याल (T) காணி வாய்க்கால்
करार (P) निश्चय; कसत (P) व्यायाम्

**TYPES OF DOCUMENTS :**

The Modi documents are classified into different types as per the content of the document. There are about 135 types of letters under five divisions. Financial letters are classified into 16 types; 56 types are given under Agricultural documents,

Political correspondences are classified into 16 types. Legal documents are classified into 32 types and other letters are 15 types.

e. g. Sanad (सनद्) : Donation of Land, village or Building by the order of the king. This may be written by mamledar or Kamavisdar.

This type of classification is useful to study the nature of the document.

## CONCLUSION :

Wherever the Maratha rulers conquered and established their rule, the Modi script was also used there to write the documents of any kind. In that way, Thanjavur also has a lot of modi bundles stored in the Sarasvati Mahal Library. They are the indegenous sources of the Maratha History. There are about 850 bundles of Modi document in the Library. The translation of these records will bring light to the history of the Marathas of Thanjavur. Particularly, medical, musical and sociological sources are also availabe in these records.

# சிந்தடகவியின் தீபாம்பா-ஷஹஜி குணவர்ணனை

**டி. ஆர். பீமராவ்,**
*முன்னாள் மராத்தி பண்டிதர்,*
*சரசுவதி மகால் நூலகம்.*

---

*முகவுரை :*

*தஞ்சையில் முதன் முதலாக மராட்டியர் ஆட்சி கி. பி 1676-இல் துவங்கியது. முதல் மராட்டிய மன்னராக ஏகோஜி என்கிற வெங்காஜி ஆட்சியில் அமர்ந்தார். ஏகோஜி முதல் அவருக்குப்பின் அரசுபுரிந்த மராட்டிய மன்னர்கள் நாட்டை ஆட்சி செய்ததுடன் நில்லாமல் பல அரிய கலைகளையும் வளர்த்தனர்.*

*மராட்டிய மன்னர்கள் தம் அரசைவையில் கற்றறிந்த புலவர்களை அமர்த்திக் கௌரவித்து. அப் புலவர்கள் மூலம் இலக்கியம், இசை, நாட்டியம். நாடகம் போன்ற அரிய படைப்புகளைச் இயற்றச் செய்தனர். மன்னர்களும் புலமைபெற்று விளங்கினர்.*

*அரசவையில் திகழ்ந்த புலவர் பெருமக்கள், மன்னர்களைப் புகழ்ந்து ப்ல அரிய காவியங்களையும் கவிதைகளையும் யாத்துப், தங்கள் நன்றியைத் தெரிவித்துள்ளனர். அவ்வழியில் இங்குத் தஞ்சை மராட்டிய மன்னர் ஏகோஜியின் மூத்த மைந்தர் ஷஹஜி மன்னரைப் புகழ்ந்து. மன்னர் காலத்தில் வாழ்ந்த வரும், மன்னருக்கு அபிமான நண்பருமான 'சிந்தட' என்னும் பெயருடைய மராட்டிய புலவர் பல பாடல்களைப் பாடியிருக்கிறார். மேலும் ஷஹஜியை ஈன்றவரும், மன்னர் ஏகோஜியின் பட்டத்துராணியுமான தீபாம்பாபாயி சாகேப் அவர்களைப் புகழ்ந்தும் பாடல்கள் பாடி இருக்கிறார். புலவர் சிந்தடர் பாடிய பாடல்கள் 'தீபாம்பா ஷஹிஜி குணவர்ணனை' என்றும் தலைப்பில் முன்னுரைப்பகுதியுடன் இங்குப் பதிப்பிக்கப்படுகின்றது.*

J-16

மராட்டி மொழியில் புலவர் சிந்தடர் பாடிய பாடல்கள் 'தீபாம்பா ஷஹஜி குணவர்ணனை' என்னும் தலைப்பில் இங்குப் பதிப்பிக்கப்படுகின்றன. இப் பதிப்புக்கு மராட்டி மொழியிலேயே ஒரு விளக்கமான முகவுரை எழுதப் பெற்றுள்ளது. அத்துடன் இத் தமிழ் முகவுரை பாடல்களின் தன்மைகளையும் சிறப்புகளையும் விளக்கும்வண்ணம் தரப்பட்டுள்ளது.

புலவர் சிந்தடர் பற்றிய விவரம் ஏதும் அதிகம் கிடைக்கவில்லை. மராத்தி இலக்கிய வரலாறு எழுதிய ஆசிரியர் திரு. S. G. துல்புலே என்பவர் தன் புத்தகத்தில் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

* "சிந்தவட நாத என்பவர் தஞ்சையில் முதல் மகாராஷ்டிர மன்னர் வெங்கோஜியின் மைந்தர் ஷஹாஜியின் காலத்தில் ஒரு மடத்தை நிறுவினார். இந்த சிந்தவட நாதரின் குலப்பெயர் 'கருட' என்பதாகும். அதனால் இந்த மடத்தை 'கருட மடம்' என மக்கள் அழைக்கலாயினர். இந்த சிந்தவட நாதரின் சிஷ்யர் சங்கரர் என்பவர். இந்த சங்கரர், வெங்கோஜி மன்னரின் பட்டத்தரசி தீபாம்பா பாயி சாகேப் மீது பக்தியுடன் இருந்து, அரசியைப் புகழ்ந்து, பல பாடல்கள் இயற்றி இருக்கிறார். மேலும் தஞ்சையில் நடந்த போர்கள் பற்றி சில பாடல்கள் இவர் எழுதியிருக்கிறார்."

மேலே காணும் குறிப்புகளிலிருந்து மன்னர் ஷஹஜியின் காலத்தில் வாழ்ந்தவர் சிந்தடர் என்பது உறுதியாகிறது. புலவர் சிந்தடர், வெங்காஜி என்னும் ஏகோஜியின் பட்டத்தரசி தீபாம்பா பாயி சாகேபின் குணநலன் களையும், அவர் அரசின் மீது காட்டிய அக்கறையையும் குறிப்பிட்டும், ஏகோஜியின் மூத்த மைந்தர் மன்னர் ஷஹாஜியின் பிறப்பு, கல்வி, குணநலம் அரசாட்சி செய்யும் திறன், வீரம், தெய்வ பக்தி, முதலியவைகளைக் குறிப்பிட்டுப் புகழ்ந்தும் பாடியிருக்கிறார்

சிந்தடர் பாடிய, மொத்தப்பாடல்களும் நூலக மராத்திப் பிரிவு சுவடி வரிசை எண். D. No. 2111வஹி பிரிவு சுவடியில் பக்கம் 45 முதல் 56 வரையில் உள்ளதில் பதினேழு பாடல்கள் காணப்படுகின்றன.

இப் பாடல்கள் பெரிய எழுத்துகளாக எழுதப் பெற்றுள்ளன. எழுத்துப் பிழையும், மொழிப்பிழையும் மலிந்து காணப்படுகின்றன.

---

* சிந்தடரை ஆசிரியர் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

இவைகளைக் கூடியமட்டும் பழமைத தகுதி மாற்றாமல் சீர் செய்து இங்குச் சுவடியில் உள்ளபடி கொடுக்கப்பட்டுள்ளன. இவை சில மராத்தி ஸ்லோக வடிவமாகவும், சில பாடல்களாகவும் எழுதப்பட்டுள்ளன.

## புலவர் சிந்தடர் புகழ்ந்து பாடிய தீபாம்பா-ஷஹஜி

### தீபாம்பாபாயீ சாகேப்

புலவர், ஷஹஜி மன்னரை ஈன்ற தீபாம்பாவைப் புகழ்ந்து கூறுகிறார். காவேரி, துங்கபத்திரை, மலபிரபா, கிருஷ்ணா, பீமா, கோதாவரி, அன்னபூர்ணி, தபதி, மஹாநதி, நர்மதை, யமுனா, பிரயாகை, காசி, மந்தாகினி முதலிய நதிகளின் நீர் எவ்வாறு புனிதமானதோ அதைப்போல் ஜம்பு த்வீபத்தில் தீபாம்பா புனிதமான பெண் என்கிற புகழ் பரவி இருக்கிறது.

தீபாம்பாவின் புண்ணியம் மலையைப்போல் உயர்ந்தது. இவர் செய்த தர்மத்திற்கு எல்லை இல்லை, இவரைப்போல் நிதியை வழங்குபவர் யாரும் இல்லை.

தீபாம்பாள் எந்நேரமும் இராமநாமத்தை ஜெபிப்பவர். சிவனை மனத்தில் நினைப்பவர். யாகம், ஹோமம் செய்விப்பவர். பூஜை அர்ச்சனை செய்பவர். புனித தீர்த்த யாத்திரை செய்தவர். உலக நடப்பு யாவற்றையும் அறிந்தவர். தேச நலத்திற்கு உழைப்பவர், விரதத்தைக் கடைப்பிடிப்பவர். தத்துவஞானி, நியமத்துடன் நடப்பவர். இவரே காசி வாரணாசி போன்று புனிதமானவர். இவரே ஆதிசக்தி எனலாம்.

தீபாம்பாள் தான் பிறந்த குலம், சேர்ந்த குலம் இரண்டையும் ஒளிவிடச் செய்தவர். பதிவிரதை 'தீபாம்பா ஒரு குல விளக்கு' அவர் வயிற்றில் கோடியில் ஒரு ரத்தினமாகப் பிறந்தான், அவன்தான் சோழ தேச பூபதியான ஷஹஜி மன்னன், அவனைச் சீர்தூக்கிப் பார்க்கும்போது சூரிய சந்திரர்கள் அவனுக்கு நிகராக மாட்டார்கள். தீபாம்பா! உங்களைப் பற்றி எவ்வளவு புகழ்ந்து கூறினாலும் தகும். எல்லாவற்றிலும் புகழுடன் விளங்குபவர் ராஜமாதவான தீபாம்பா ஆகிய தாங்கள் ஆவீர்கள்.

### மன்னர் ஷஹஜி

இப்பேர்பட்ட புனிதமான தீபாம்பா வயிற்றில் சத்வ, ரஜஸ், தமஸ் ஆகிய மூன்று உண்மையான குணங்களும் குழந்தைகளாகப் பிறந்தனர். அவர்கள் மன்னர் ஷஹாஜி, சரபோஜி, துக்கோஜி ஆகிய மூன்று பேர்கள் ஆவார்கள். முதல்வர் ஷஹாஜி கல்விமானாகி, தானதருமங்கள் செய்து

நாட்டு மக்களை நல்ல விதமாக வாழச்செய்தார். பல புலவர்களுக்கு மதிப்புக்கொடுத்து அவர்களைப் புகழ்ந்து போற்றினார். இரண்டாமவர் சரபோஜி மன்னர். உண்மையான சகோதரனாக விளங்குகிறார். இவர் தன் சகோதரனிடத்தில் உண்மை அன்புடன் இருந்து, அரசாட்சியில் ஷஹஜிக்கு உதவி புரிந்து பரதனைப்போல் செயல்படுகிறார். மூன்றாமவர் துக்கோஜி மன்னர். தஞ்சையில் ஏற்பட்ட போரில் தைரியமுடனும் வீரமுடனும் எதிரிகளுடன் போர்செய்து இலக்குவனைப் போல் விளங்கினார்.

இம்மூவரில் ஷஹாஜி மன்னர் கல்வி கேள்விகளில் சிறந்தவர். பெரியோரை மதிப்பவர், தர்மம் செய்வதில் கர்ணனைப் போன்றவர். அறிவில் பிரஹஸ்பதி(குரு)யைப் போன்றவர். நடையில் வாயுவைப் போன்றவர். வீரத்தில் பார்த்திபனைப் போன்றவர். செல்வத்தில் குபேரனைப் போன்றவர். பல விதத்தில் பார்த்தால் ஷஹாஜியைப்போல் மன்னரே இல்லை எனலாம்.

## ஷஹஜின் யோகத்தைப் பற்றிப் புகழுதல்

ஷஹஜி அவர்களே! கடலே மிகப்பெரியது என்றால் அதைவிடப் பத்து மடங்கு உங்கள் விருப்பம் ஆகும். சூரியன் தன் ஒளியை முழுவதும் உங்கள் சோழ தேசத்திலேயே படும்படியாகச் செய்கிறார். தேவேந்திரனுக்குச் சொந்தமான நட்சத்திரக் கூட்டங்கள் உங்களுக்குக் குடையாக நிற்கின்றன. இந்த யோகங்கள் யாவையும் ஷஹஜி மன்னராகிய தாங்கள் அனுபவித்து வருகிறீர்கள், என்று மன்னரைப் புகழ்ந்து பாடுகிறார்.

## ஷஹஜியின் வீரத்தைப் பற்றிப் புகழுதல்

திருச்சிராப்பள்ளியில் அரசு செலுத்திய தெலுங்கு அரசர் மீனாட்சி நாயக்கர், ஒரு சமயம் தஞ்சை மீது படையெடுத்துத் தாக்கியபோது ஷஹஜி மன்னரைப் பார்த்துப் புலவர் வேண்டுகிறார். 'உங்கள் தளபதியான திரம்பக ராயரிடம் கூறி, வேண்டிய செல்வத்தைக் கொடுத்துப் போர் வீரர்களைச் சேர்த்துக்கொண்டு, தெலுங்குப் படையை விரட்டித் திருச்சிராப்பள்ளிக்கு அனுப்பி வையுங்கள் என்று உத்தரவு இடுங்கள்' என்று கூறி, மேலும் 'வெற்றி அடைந்த பிறகு தளபதி திகம்பகராயருக்கு பொன்னாடைப் போர்த்தி மரியாதை செய்யுங்கள்' என்று வேண்டுகிறார்.

அதே போல் ஷஹஜி மன்னர் தன் தளபதி திரம்பகராயருக்கு உத்திரவு இட்டுப் பெரும் செல்வம் கொடுத்து நாயக்கரைத் தோல்வியுறச் செய்கிறார். மராட்டியப் படையால் தோல்வியுற்ற மீனாட்சி நாயக்கனை, விலங்கிட்டுத்

தஞ்சைக்கு, ஷஹாஜியிடம் அழைத்து வருகிறார். அப்போது நாயடு தளவாய் மனதில் பயம் கொண்டு ஷஹாஜி மகாராஜாவிடம் மன்னிப்பு கேட்கிறார். அச் சமயம் ஷஹாஜி மன்னர், செயலற்ற மீனாட்சி நாயக்கரை மன்னித்து விடுதலை செய்து திருச்சிக்கு அனுப்பிவிடுகிறார். இச் செயலைப் புகழ்ந்து சிந்தட கவி ஷஹாஜி மன்னரின் இரக்க குணத்தைப் பாடுகிறார்.

புலவர் சித்தடர் வேறு ஒரு சமயம் தளபதி திரம்பகராயரைப் பார்த்து கூறுகிறார். "தாங்கள் நிறையப் படைகளைச் சேர்த்துக் கொண்டு மறவர்களை எதிர்த்துப் போர் செய்து, அவர்களைத் தோல்வியுறச் செய்யுங்கள். நீங்கள் வெற்றி அடைந்து நம் மன்னர் ஷஹாஜியை மகிழ்ச்சி அடையச் செய்து நிறைய பொருள்களை வெகுமதியாகப் பெறுங்கள்" என்று வேண்டுகிறார்.

மன்னர் அவையில் அமர்ந்திருக்கும் புலவர்கள் சாதாரணமாக, மன்னரின், ஈகை, செல்வம், குணநலம், கல்வி, வீரம் போன்றவற்றைத்தான் புகழ்ந்து பாடுவது மரபு. இங்கு மராத்திய அரசவையில் அமர்ந்திருந்த 'சிந்தட' என்றும் மராட்டியப் புலவர், அரசாட்சியில் அக்கரைகொண்டு, மன்னருக்கு யோசனை கூறியும், அவர் படையின் வீரத்தைப் புகழ்ந்தும், அவர்கள் திறமைக்கு வெகுமதியும் கொடுக்க யோசனையும் கூறி, மன்னர் நலம், நாட்டு நலம், மக்கள் நலம் இவைகளிலும் அக்கறை கொண்டு, மன்னர் செயல்களை வர்ணித்தும் புகழ்ந்து பாடியது மிகவும் போற்றத்தகுந்ததாகக் காணப்படுகிறது.

தஞ்சை மராட்டியர் ஆட்சியில் பெருமையுடன் விளங்கிய ஷஹாஜி, மன்னர் மீது அன்பும் மரியாதையும் கொண்டு அவருடன் பழகி அவரின் செயல்களைப் புகழ்ந்து பாடிய சிந்தட கவியின் பெருந்தன்மையைக் குறிப்பிட வேண்டும் என்றும் மராட்டிய வரலாற்றில் இச் செய்தி பயன் உள்ளதாக அமையும் என்ற எண்ணத்திலும் இச்சிறு நூலை இங்குப் பதிப்பிக்கிறேன்.

# दीपांबा - शाहजीराज गुण वर्णन

# चिंदड कवि

टि. आर. भीमराव

भूतपूर्व मराठी पंडित,

सरस्वती महाल ग्रंथालय.

## प्रस्तावना

---

तंजावरी पहिले महाराष्ट्र भोसलकुलैराजे ह्मणून छत्रपति शिवाजीचे बंधु व्यंकोजी ऊर्फ एकोजी इ. स. १६७६ ला सिह्मसनारूढ झाले. त्यांस तीघे मुले झाले. ते शहाजी, शरभोजी व तुक्कोजी. एकोजीराजें चे नंतर एकामाघे एक तंजावरचे राज सिह्मासनावर भसले. त्यापैकी पहिले पुत्र शहाजी इ. स. १६७४ ते १७१० पर्यंत राज्यभार केले.

शाहजी, भाषा कोविद आसून अनेक ग्रंथे रचिले. मातृभाषामराठी विना संस्कृत, तेलुगु, तमिळ व हिन्दुस्थानी भाषांत ही त्यांस पांडित्य होता. शाहजीचे भाषाज्ञान व सामर्थ्य माहून त्यावेळेची पंडितलोक उदारमनाने त्यांस "पंचभाषा कवन निर्वाहक", ह्मणून विशेष बिरुदे देवून गौरव केले. शाहजीचे दर्भारांत बहुभाषा पंडितें होते. ते संस्कृत, मराठी तमिळ व तेलुगु इत्यादि. हा बहुभाषा पंडिते सर्व, त्याचे मातृभाषांत अमोल्य काव्य रचना केले व शहाजीला उद्येशून त्याचेगुण, पांडित्य, दार्मिकचित्त, दैवभक्ति, शीलता, सामर्त्य, सूरता, प्रजापालन, इत्यादि कृत्य पाहून अनेक मोठालाहान ग्रंथ रचना केले आहेत. विशेषवणि मराठींत कांही दोनचार कवि त्यांचा वर काव्य लिहिले आहेत. ते रुक्मांगदकवि, त्रयंबकजोतिर्विद, गोपालतनय, नानजोशी चिंदड व चिंदडशंकर होतात. त्यापैकीं चिंदडकवींचे 'दीपांबा-शहाजीराज गुण वर्णन' ह्मणून एक लहानसे ग्रंथ येथें प्रसिद्ध करण्यांत येतें.

चिंदड कविबदल कांहीं जास्त माहिती मिळत नाही. सारस्वत पुरवणीलेखक श्रीमंत सं. गो. तुळपुळो, चिंदड कविबदल सांगतात :– तंजावरांत मराठ्यांचामठ ह्मण्न जो आहे तो चिंदवडनाथ. हा चिंदवडनाथ व्यकोजीचा मुलगा शाहजी. याच्या कारकीर्दीत तंजावरी मठ करून होता. या चिंदवडनाथाचे आडनाव 'गरुड' आसें असल्यामुळे त्याच्या मठास गरुड मठ आसेंयि ह्मणतात. चिंदवडनाथाचा शिष्य ह्मणजे चिंदवड शंकर. चिंदवड शंकराची बरीच रचना व्यंकोजीची पट्टराणी दीपांबाहिच्या प्रशस्तिपर असून त्याची

तिच्या ठिकाणी खरी भक्ति दिसते. तंजावरकडील लाढायांवरहि त्यानें काहीं कवित्व केलें आहेत.

चिंदड कविबद्दल एक विषयमात्र निश्चय होतों. शाहजीचे काळांतीलला असून, एकोजीचे पट्टराणी दीपांबाबाई साहेबाबरहीं त्यांचे वडील मुलगा शाहजी राजे वरहीं त्यांचे गुण वर्णन करून पदें व श्लोक मराठी व हिन्दुस्थानी भाषांत रचिले आहेत. त्यापैकीं आतां येथें मराढींतील, दीपांबा-शाहजी वरील १७ कृती मात्र प्रसिद्ध करण्यांत आले आहे. हे ग्रंथ, सरस्वतीमहाल ग्रंथालय मराठीविभागाचे बयाजवार यादिप्रमाणक्रमसंख्या २१११ होतात. हे वह्या विभाग हस्तलिखित, फार जुनी कागदावर काळेशाईने मोटा अक्षरांत लिहिलाहे. भाषाची चूक अधीक दिसते. अवयश आहेते जागेंत मात्र शुद्ध करून, मूल-ग्रंथांत आहेत्या सारखे च प्रसिद्ध करण्यांत येते. वहीची लांबी रुंधी २३ सें. मी. ते १७ सें. मी. आहेत. कवि दीपांबाराणीसाहेब ह्यांस उद्धेशून ही शाहजीला उद्धेसूनही लिहिलेली काहीं पदावरील भाव असे आहे.

एकोजीचे सौभाग्यवती राजमाता दीपांबा धर्माची ध्वजा सारिखें त्रिजगांत ही प्रकाशतात, महापतीव्रता, दैवभक्ति, नीती, न्यायाने वाघणारी, पूजा अनुष्टान करणारी, भारताते पुण्य नदी सारखे पुनितवती. तसेलती गर्भांत तीनगुण पुत्ररत्नवणी उत्पन होवून प्रगटले, ते शाहजी, शरभोजी, तुक्कोजी असे होतात, शाहजी नीती न्यायाने राज्य-भार करितात. भरतासारखे शरभोजी हीं लक्ष्मणासारखे तुक्कोजीहीं असून शाहजीला अनुकूलवणी असून राज्यसत्ता चालवितात.

शाहजीचे कृत्य, काय ह्मणून वर्णावे. त्यानी दानदेणेंत धर्मा सारिखेही. बलांत भीमासाहिखेहीं श्रृंगारांत नकुला सारिखेहीं. नीतींत धर्मासारिखेहीं मतीत गुरूसारिखेहीं गतीतं मारुतासारिखेहीं धैर्यांत रामासारिखेहीं शूरांत पार्थासारिखेहीं. धनांत कुभेरा सारिखे हीं आहेत. हा बहुसर्व शृष्टींत विषेवणी आहेत. ह्याचा सारखा भूप दुसरे कोणी नाहीत असे ह्मणतात.

असे कवि चिंदड, अनेक प्रकार शाहजी राजेवर श्लोक व पद रचूत त्यांस गौरव केले आहेत. ते कबीचे सामर्थ्या, प्रदर्शन करावे ह्याहेतून येथे हे लहानसेग्रंथ प्रसिद्ध करण्यांत येते. त्याचालाभ घ्यावाही वितंती.

# दीपांबा व शहाराज कीर्तिवर्णन *

## चिंदड कवि

श्लोक :-

भजन् मनी कारण या गणाचे
विराजितें शेंदुर मस्तकीचे
चतुर्भुजें शोभत शुंड धारी
प्रसाद देई बरवे प्रकारी ॥ १ ॥

पुण्य पर्वत तुल्य जीस घडलें धर्मास पारनसे
दीपांबा कुलदीपकच सतत तारि कुला दोहिसे
तीचे पोटी जन्म घेउनी पहा अवतार आला असे
तीचीच हा चोळदेश नृपती शाहराज देवींद्रसे ॥ २ ॥

सत्यामाजी ते जीत सतीच हे हो
व्रतामाझी एकादसी तेच हे हो
तीर्थामाजी ते हेच काशीच ते हो
ह्मणे चिधड हे दीपांबा तसी हो ॥ ३ ॥

सुधी मणीक काच सतते बुधीस ब्रहस्पती
रीती धर्ममती समान युगती मतीस सरस्वती
व्रीती ते शिव पादुकी रती आती मुक्तीपदाचीगती
गोदा भागीरथीच चिद्धड ह्मणे दीपाई आउसती ॥ ४ ॥

धर्माची ध्वज दिव्य रूपलतिका प्रकाश त्रिजगती
नीतीची अती यांग्यता निपुणते पार नसे जीप्रती
कीर्तीची अति धूर्त फारत प्रभावानु तिला मी किती
चिद्धडह्मणे बहुकीर्ती सर्वजगती राजामाता दीपांबाची ॥ ५ ॥

---

* D. No. 2111 Vahi-Marathi Section, Sarasvathi Mahal Library.

दीपांबे तुझे कीर्तिचा घोष झाला
तुझे पोठी तो रत्न कोटीच आला
तया नाम तो भूप शाहनरींद्र
जया तुकीता ना तुळे सूर्य चंद्र ॥

### पद

दीपांबा राम नामी ते – दीपांबा शंकरध्यानी ते
दीपांबा याग होमी ते -- दीपांबा पूजाधामी ते ॥ १ ॥
दीपांबा तीर्थ पाणी ते – दीपांबा रत्नखाणी ते
दीपांबा सर्व जाणी ते – दीपांबा देशधनी ते ॥ २ ॥
दीपांबा व्रत नेमी ते – दीपांबा तत्वज्ञानी ते
दीपांबा धर्म दानी ते – दीपांबा नित्यनेमी ते ॥ ३ ॥
चिद्धड ह्मणे औसी – तेच काशी वाराणसी
तेची आदि शक्ती अैसी – ते जगास पाळी पोषी ॥ ४ ॥

### पद

पुण्यशील हे बरी – दीपाई बाईते खरी
त्रिगुणतीचे उदरी – अवतार ते धरी ॥ १ ॥
दान धर्म यां परी – जनास पोषणकरी
विबुधबुध हे खरी -- शाह नरेश केशरी ॥ २ ॥
दुजा शरीफराज तो -- बंधुसंनीध आजितो
करि बहुत काज तो -- भ्राता परि विराजतो ॥ ३ ॥
तिजा तुकेश आजी तो -- रिपुकुलास वाजतो
रणांतकार गाजतो -- सुमित्र सा विराजतो ॥ ४ ॥

### पद

कावेरी तुंगभद्रा -- आणि मलप्रभा
कृष्णा भीमाचजैसी -- गोदा अन्नपूर्णा
तपती माहानर्मदाते परेसी – यमुना प्रयाग काशी

मंदाकिनी जसी — तीर्थराशीविशेषी
चिद्धड ह्मणे जंबुदीपी कीर्ती - असी दीपांबेचितसी

## पद

कुलदीप दीपांबाची गुणी -- तेच आदी शक्ती आई
त्रिगुण पोटी पाही जन्म तीच्या घेतले ॥ १ ॥
[1] श्रीशाहराज सुरींद्र [2] सरीफराज चंद्र
[3] तुकेस तो नरींद अवतारले भले ॥ २ ॥
गुणीत वीर ते प्रतापकीर्तीचीरते
रणांतफारधीरते - जणांत घोषगाजले ॥ ३ ॥
ह्मणे चिद्धड आतीते - कळांत थोरजाती ते
मती चित्तपती ते - वर्णु मी त्याला किती ते ॥ ४ ॥

## पद

दानी कर्णजसा - बळभीम तसा
श्रृंगार * नकुळसा - नीती धर्म असा
मतीस सद्‌गुरूसा - गतीस मारुतसा
धैर्यी राम तसा - सुरीं पार्थतसा
धना कुबेरच तसा - चिद्धड ह्मणे
ब्रहु सर्वश्रृष्टी पाहतां - भूप नाही शहाराज सा

---

1. श्रीसृश्या सुरींद्र. 2. शरभ. 3. तुक्कोजी.

* नकुळसा

## पद

येउनी क्रोध भूपेंद्र शाहनृप - ह्मणे त्रिंबक रायाला ।
सिद्ध करुनी दलहोउनी मुस्तेद - कापा तेलंगनाला ॥ १ ॥
लागल ते धन वीचित वेचुन - घ्यावें त्रिचिनापल्लीला ।
चिंधड ह्मणे ऐसी आज्ञा प्रेरुनी मग - दे वस्त्रे दलपतीला ॥ २ ॥

## पद

भार मुस्तेद करा - नृप ह्मणेत्वरा
त्रिंबकराव वीरा - मरवरासी हारा
तोंडमान मारा - दलवाईजीतधरा
शैन्यात्याची संव्हारा - शिर कापुनी पारा
बांधा वीरा जुझार - चिद्धड ह्मणे अपारा
नृपकुल वीवरा - शहाराज सुखी करा ॥ २ ॥

## पद

महाराज पाहुण मान - त्रिचनापलीच जान
कापुनिया तेलंगाण - शिक्षा त्यासी घातला ॥ १ ॥
नाईडदळ दळवाई आण - मनात मानूनकान
धरूनियां धाकनजान - चळचळा कांपळा ॥ २ ॥
ह्मणती आह्मी कराव काये - धरु माहाराजाच पाय
तोची बाप आणी माय - वज्रसर नाग बाला ॥ ३ ॥
चिद्धड ह्मणे ऐसेमनी - अंकित होऊनलाते चरणी
कृपालु चोलमंडळ धनी - राखी मग त्या दीनाला ॥ ४ ॥

## दिंडी

कीर्ती मूर्ती तो धूर्ती दक्षिण्य माहा
गती वीगतीन मती योग्यती हा
अति त्या रती भाग्ये संपती माहा
ह्मणे चिद्धड तो शहाराज पाहा

## पद

तेलंग फार भ्याला - सरशरण हिंदुपतला
हात बांधोन आला - आमचे अन्याय झाला
दक्षिणचे कील्ला - घेतल्या बोल आला
आतां तुमचे तुह्माला - देउ आह्मी वहिला
राखा आह्मा दीनाला - चिद्धड ह्मणे ऐसे
सेवक ते झाला - शाहराज देवींद्राला ।।

## पद

समुद्रजरी चोर फार ह्मतला - दाहीततुमच्या आस ।
सुर्योभ्रमुण चोलदेसीपहा हो - उजेडकरुव वास ।
तारामंडल दीवेंद्रच धरुनी - आसमाणगिरीचास
च्चिद्धड ह्मणे हे सर्व संपत्ती माहा - शहाराज भोगीत असे ।।

# सूर्य वंश वंशावळी *

**परिशिष्ट :—**

मूल पुरुष अबहन् पासून एकोजीराजे पर्यंत.

श्रीरामकर्ता

सूर्यवंश वंशावळी - वैशंपायन गोत्रजाति गुरूगहलोत - गुरूचार्यगुरुशील इष्ट दैवत चंपालनाथ वास्तव्य स्थळ चित्रकूट. मूल पुरुष अबहन ह्मणून होता. अबहना पासून अंगरीख. अंगरखा पासून शिगरीख. शिगरीखा पासून भूरीरख. भूरीरखा पासून अंगरीख. अंगरीखा पासून मुनेरख. मुनेरखा पासून जनरख. जनरखा पासून गुरुगणेश. यितके पुरुपरख ह्मणून घेतले. गुरुगणेशापासून बाजि यादत्त. बाजियादत्ता पासून देव दत्त. देव दत्ता पासून केशव दत्त. केशव दत्ता पासून भागीदत्त. भागीदत्ता पासून सालबाहनदत्त. सालबाहन दत्ता पासून जोगादत्त. जोगादत्ता पासून नागादत्त. नागादत्ता पासून भोगादत्त. यितके पुरुष दत्त ह्मणून घेतले. भोगादत्ता पासून प्रसव चकवे. प्रसवचकवे पासून कीर्तिबाहना चकव्या पासून नरबाहन चकवे. नरबाहन चकव्या पासून उत्तम चकवे. उत्तम चकव्या पासून भादचकवे. भाद चकवेया पासून गोतुम चकवे. गोतुमचकव्या पासून जोगराव चकवे. जोगरावचकव्या पासून वैर चकवे. वैरचकव्या पासून राशिचकवे. इतके पुरुष चकवे ह्मणून घेतले. बराशिच कव्या पासून बापूरावळा. बापूरावळाने श्री ईश्वर प्रीत्यर्थतपश्चर्या करून अपलें शिरकमळ देवास वाहिल्या करितां श्री ईश्वर प्रसन्न होउन च्यारि चौकडीचें राज्यश्री महादेव येकलिङ्गानें दिल्हें याचें पूर्वनांव गुरु गहलोंत ह्मणुन होतें. यानें शिरकमळ वाहिल्या करितां शिसोंदिया राणा ह्मणून घेतले. चित्तोडगगडीं राहत होते. तदनंतरें रणथंबोर गडनजालोरगडथ उदयपूर हें स्थळें आवघीं आक्रमून छत्तीस प्रकारें वाद्यें कड्न युक्त होत्साता कुळ श्रेष्ट होउन होता. त्या पासून खुमाब्ब रावळ खुमाब्ब रावळा पासून कीर्तिपाळ. कीर्तिपाळा पासून वंशपाळ. वंशपाळा पासून भरपाळ. भरपाळा पासून प्रथीराज. प्रथीराजा पासून राणालाखो. राणालाखो पासून रतनशेन राणा.

---

* क्र. अं. 289 - अमानत्, मराठी विभाग - सरस्वति महाल ग्रंथालयः

रतनशेनाचीस्त्री पद्मिणी होती तीजकरितां आलावदी पादशाहाशीं चित्तोडगडीं रणजाहलें. राणारतनशेना पासून कर्णशेन. कर्णशेनां पासून मोकळ. मोकळा पासून हमीर. हमीराच्या मस्तका पासून गंगा निघाली. हमीरा पासुन सांगाराणा. सांगाराणानें बब्बर पादशाहा चा नौबत खानाहिरोन घेतला. राणा सांगा पासून कुंभोराणा. कुंभोराणानें शेख पादशाही चीहुर्माबायि को हिरोन घेतली. कुंभोराणा पासून रायमल राणा, रायमळा पासून खेतोराणा. खेतोराणास तीघे पुत्रजाहले. वडीलराणा उदयसिंग दुसरा राणाच्या तिसराराणा मेरा. वडील उदयशिंगा पासून प्रताप सिंग. प्रतापशिंगानें अकबरापदशाहाशि चित्तोडगडीं युद्ध केलें. प्रतापशिंगा पासून राणा अमरसिंग. अमरसिंगा पासून राणा राजशिंग. राजशिंगा पासून राणा जय सिंग. जयशिंगा पासून राणा अमर शिंग. अमरशिंगा पासून राणा संग्राम शिंग. संग्रामशिंगा पासून राणाजगतशिंग. जगतशिंगा पासून राणा प्रतापशिंग. प्रतापशिंगा पासून राणाराज शिंग. इतकी उदयशिंगाची संतति जाहली. दुसरा लेंकच्याच्याची संतति बळपती. बळपती पासून शिगन राजा. शिगनराजा पासून परसोजी राजे परसोजिराज्यां पासून बाबाजी राजे. बाबाजी राच्यांस दोघे पुत्र जाहले. वडील विठोजी राजे. दुसरे मालोजी राजे. मालोजी राज्यां पासून शहाजी राजे. शहाजी राज्या पासून येकोजीराजे. येकोजी राज्यास तीघे पुत्र शाहामहाराज ।।

येथ पर्यंत ह्या ग्रंथांत माहिती दिली आहे ते दिली ।। ग्रंथाचे मुख पत्रावर - सूर्यवंश वंशावळी मूल पुरुष अबह्न् पासून् येकोजीराजे पर्यंन्त - रा. रा. बच्ची सौकड्न १७—१२—२७. असे लिहिलाहे. ह्या वंशावळींतील सेत्रट जाणविला ते शाहजी राजेच. तंजावर एकोजी राजे - दीपांबाची जेष्ट पुत्र होय. हया शाहाजीराजेंचे इतिहासाला हे वंशावली देणे बरें होईल ह्मणून येथें देण्यात आले ।।

## Form IV

(See Rule 8)

| | |
|---|---|
| 1. Place of Publication : | Thanjavur |
| 2. Periodicity of its Publication : | Four issues a year |
| 3 Printer's Name : | T. M. S. S. M. Library Society Press, Thanjavur. |
| Nationality : | Indian |
| Address : | T. M. S. S. M Library Society Press, Thanjavur-613009. |
| 4. Publisher's Name : | T. M. S. S. M. Library Society, Thanjavur. |
| Nationality : | Indian |
| Address : | Thanjavur Maharaja Serfoji's Sarasvati Mahal Library Society, Thanjavur. |
| 5. Editor's Name : | A. Panchanathan |
| Nationality : | Indian |
| Address : | A Panchanathan, M. A., M. L. I. S., Administrative Officer i/c. Sarasvati Mahal Library Society, Thanjavur. |
| 6. Name and Addresses of Individual who owns the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital. | T. M. S. S. M. Library Society, Thanjavur. |

I, A. PANCHANATHAN, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

**A. PANCHANATHAN,**
*Administrative Officer i/c,*
(Signature of Publisher)

Date : 29—12—92